# ஞானச்சுடர்

தை 2015

205 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்.**

**பொருள் :** பொறாமையுடையவனிடத்தில் செல்வமும், நல்ல உள்ளம் உடையவனிடத்தில் வறுமையும் நேரின் அவை வியக்கத்தக்கன. (169)

**அழுக்கற்(று) அகன்றாரு மில்லை அஃதில்லார்**
**பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.**

**பொருள் :** பொறாமை கொண்டு பெரியவரானவருமில்லை; பொறாமை இல்லாதாரில் செல்வ வளர்ச்சியில் குறைபாடு அடைந்தாரும் இல்லை. (170)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்




ஈயு மெறும்பு மெரியு முண்ணும்
மாயு முடலை மதியாது மறைகள்
ஆயும் பொருளை யந்தியுஞ் சந்தியும்
நீயும் நானும்நின் றிறைஞ்சு வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 17

ஈயா தார்க்கில்லை யிம்மை மறுமை
ஆயா தார்க்கில்லை யறிவு மொழுக்கமும்
வாயார வாழ்த்தி வணங்கித் தினந்தினம்
தாயான தத்து வனைநாம் பாடுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 18

ஈவோ ரிரக்கவு மிரப்போ ரீயவும்
தாய்சே யாகவுஞ் சேய்தா யாகவும்
பேய்நா மாகவும் நாம்பே யாகவும்
மாய்வதைக் கண்டேம் மறவோந் திருவடி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு - 02 205ஆவது மலர்

2014 பொருளடக்கம் தை


| | | |
|---|---|---|
| வாழும் வழி | S. குணாகரன் | 01 -02 |
| ஆறுமுகமான பொருள் | திருமதி பா. சிவனேஸ்வரி | 03 -06 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 07 -10 |
| இளமையிற் கல் | கு. சோமசுந்தரம் | 11 -12 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 13 -15 |
| சைவநெறி | பூ. சோதிநாதன் | 16 -18 |
| இன்று எமது சமயநிலை | செல்வி பா. வேலுப்பிள்ளை | 19 -21 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 22 -25 |
| திருவாசக விழா | சி. தில்லைநாதன் | 26 -31 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 32 -34 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 35 -39 |
| உடைமைகள் | முருகவே பரமநாதன் | 40 -42 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 43 -44 |
| ஆச்சிரமம் அளித்த... | கே.எஸ். சிவஞானராஜா | 45 -46 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 47 -48 |
| தேங்காயின் சிறப்பு | செல்வி செ. ஐடா | 49 -50 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 51 -56 |
| சுகமருளும் சூரிய வழிபாடு | அ. சுப்பிரமணியம் | 57 -58 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 59 -61 |
| மனிதனும் தெய்வமாகலாம் | கு. சிவபாலராஜா | 62 -65 |
| சந்நிதியான் ஆச்சிரமம்... | தொகுப்பு | 66 -67 |
| வாசகர் போட்டி | – | 68 -69 |
| தமிழகத் திருக்கோயில் வரிசை | வல்வையூர் அப்பாண்ணா | 70 -76 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் அருளாசிச் செய்தி

## ஞானச்சுடர் ஆன்மீக மலரின் பணி தொடரட்டும்...

மக்கள் மனம் நிறைந்த மனங்களை வென்ற ஞானச்சுடர் ஆன்மீகமலர் இன்று தனது 17ஆவது அகவையைப் பூர்த்தி செய்து தனது 18ஆவது பிறந்த நாளைக் கொண்டாடு கின்றது என்பதையிட்டு பேருவகையடைகின்றேன்.

1998 முதலாக இம்மலர் பயணித்து வந்த பாதை மிகவும் கரடுமுரடானது. எத்தனையோ இன்னல்களைத் தாண்டி வீறு நடைபோட்டு ஆன்மீக சாகஸம் புரிந்துள்ளது.



ஈழம் வாழ் ஏன் கடல் கடந்து வாழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்து விட்ட ஞானச்சுடர் மலருக்கு இன்று பிறந்தநாள். இந்த இனிய நன்நாளில் இன்னும் நீண்டகாலம் ஆன்மீகப்பணி செய்து வெள்ளி விழாக் காண எல்லாம் வல்ல ஜெகன்மாதா ஸ்ரீ முத்துமாரி அம்பிகையை பிரார்த்தித்து உயர்திரு செ. மோகன தாஸ் சுவாமிகளின் ஆற்றுப்படுத்தலிலும் மற்றும் ஞானச்சுடர் மலர் குடும்பத்தினரின் ஊக்கத்திலும் நற்பணி தொடர உளமார ஆசி வழங்கி மகிழ்கின்றோம்.

சுபம் - மங்களம்

"வாழ்க வளமுடன்"

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை போஷகருமாகிய

*சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்* J.P

பிரதமகுரு

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

வல்வெட்டித்துறை.

ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும்

புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2015 தை மலர்

# சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# போஷகரின் ஆசியுரை

ஞானச்சுடர் இதழ் பதினெட்டாவது ஆண்டிலே காலடி எடுத்து வைப்பதையிட்டு மனமகிழ்ச்சியடைகிறார்கள் சைவப் பெருமக்கள். ஞானச்சுடர் இதழானது சைவ கலை பண்பாட்டு விழுமிய மரபுகளைப் பேணி அறிவுப் பொக்கிஷமாக தொடர்ந்தும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றது. மனமாற்றத்தை ஏற்படுத்தி சைவப் பெருமக்களை மதமாற்றம் செய்கின்ற இக்கால சூழ்நிலையில், இளம் சமுதாயத்தினரை ஆன்மீக வழியில் அரவணைக்கின்ற ஒரு பொக்கிஷமாகவே ஞானச்சுடர் வெளிவருகின்றது. காலத்தின் தேவையறிந்து ஆச்சிரம சுவாமிகள் செய்து வருகின்ற சிறப்பான பணிகளில் இன்று முதன்மை பெற்று வருவது ஞானச்சுடர் என்றால் அது மிகையாகாது. ஞானச்சுடர் இதழுக்கு மாதந்தோறும் கட்டுரை எழுதுகின்றவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். நாட்டின் பல பாகங்களிலும் வாழ்கின்ற மக்களுக்கும் ஞானச்சுடர் மலருக்கும் தொடர்புகள் அதிகரித்து வருவது சந்நிதி வேலவனின் சக்தியின்றி வேறு ஒன்றுமில்லை எனலாம்.



தெய்வீக மணம் கமழும் ஞானச்சுடர் இதழானது தொடர்ந்து வெளிவரவும், சைவப் பெருமக்கள் எமது சமய நடைமுறைகளை பின்பற்றி சிறப்பாக வாழவும், ஆச்சிரம சுவாமிகள் பணி தொடர்ந்தும் சிறப்பாக வரவும் வாலாம்பிகை உடனுறை வைத்தீஸ்வரப் பெருமான், சந்நிதி வேலவன் திருவருட் கடாட்சம் கிடைக்க பிரார்த்தித்து நல் ஆசிகளை தெரிவிக்கின்றேன்.

ஓம் சாந்தி

*பிரம்மஸ்ரீ ப. மனோகரக் கருக்கள்*

பிரதமகுரு

வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்,

வல்வெட்டித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2015 தை மலர்

# வாழ்த்துச்செய்தி

## இருளகற்றி இன்பநிலை வளர்க்கும் ஞானஒளி

ஈழத்தின் புகழ்பெற்ற திருத்தலமாக விளங்குவது தொண்டைமானாறு செல்வச் சந்நிதி வேலன் ஆலயம். எப்படி காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கும் இராமேஸ்வரம் இராமநாதர் ஆலயத்துக்கும் ஆன்மீக யாத்திரை செய்கிறபோது, புனித உறவியல் பேணப் படுகிறதோ, அதே போன்ற உறவியல் சந்நிதிக்கும் கதிர்காமத்துக்கும் இன்று வரை நிலைபெற்றிருக்கிறது.



இந்தச் செல்வச்சந்நிதிச் சூழலில் ஒரு சித்தர் மரபு தழைத்தோங்கி உள்ளது. இந்த அருளாளர் மரபில் வந்தவரே தவத்திரு மயில்வாகனம் சுவாமிகள். தன்னிடம் வருவோரின் உடல், உளப்பிணி நீக்கி, இறை வனிடம் ஆற்றுப்படுத்தும் தகைமை சான்ற அந்த முதுபெரும் குரவரின் தகைமை யாவும் பெற்ற சீடரே, இன்றைய செல்வச்சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சுவாமிகள் மோகனதாஸ். இவ்வாறாக, இறையரு ளும் குருவருளும் நிறைந்த ஆச்சிரமத்தின் பணிகள் தன்னிகரற் றன. எவராலும் நினைத்தே பார்க்க இயலாதன. அன்னப்பணியாகட் டும், அறிவுப்பணியாகட்டும், ஆன்மீகப்பணியாகட்டும், மருத்துவப்பணியாகட்டும், அறப்பணிகளாகட் டும், அவை யாவும் விரிவான சிறப்புக்களைத் தன்னகத்தே உடையன. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்றது பதினெட்டு ஆண்டுகளாக தங்கு தடையின்றி வரும் ஞானச்சுடர் ஆன்மீக மாத இதழின் வரவு. நாட்டின் குழப்பநிலை, யுத்த நிலைகளுக்கு மத்தியிலும் இதன் வரவு சீராக அமைந்தமை இறைவனின் பெருங்கருணையைப் பெற்ற சஞ்சிகை என்பதை வெளிக்காட்டுகின்றது.

சந்நிதிப்பெருமானின் திருநீற்றுச்செல்வத்துடன் கூடியதாக வருகின்ற ஞானச்சுடர் பல்வேறு தரப்பினருக்கும் பிரயோசனமான விடயங்களை உள்வாங்கி ஒரு உன்னதமான, சைவ எழுச்சியை உண்டாக்க வேண்டும். இன்றைக்கு சைவஉலகில் ஏற்பட்டு வரும் பின்னடைவுகளை எல்லாம் உடைத்தெறியும் சக்தி மிக்க சந்நிதிப்பெருமானின் சக்திவேலை முன் அட்டையில் தாங்கி வரும் ஞானச்சுடரின் ஒளி திக்கெட்டும் பரவட்டும்... அதனுடைய ஒளியை கண்டவர்கள், அறிந்தவர்கள் யாவருக்கும் அஞ்ஞானத்தில் இருளகலட்டும்.. இன்னும் பல்லாண்டுகள் ஞானச்சுடரின் வருகை, எங்கள் இல்லத்திற்கு வேற்பெருமானின் வருகையாக நாங்கள் மகிழ்ந்து போற்றும் வண்ணம் அமையட்டும் என்று, இனிய ஞானச்சுடரை மனமுவந்து வாழ்த்துகின்றோம்..

சந்நிதியான் ஆச்சிரமப்பணி மேன்மேலும் சிறக்க எம் வழிபடு தெய்வமான வெற்றி வேற்பெருமான் திருமலரடிகளை இறைஞ்சுகின்றோம்.

"நீர்வை மணி'' சிவஸ்ரீ. கு.தியாகராஜக்குருக்கள்,
பிரதமகுரு:
செல்லக்கதிர்காம முருகன் தேவஸ்தானம், நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் வழங்கிய

# பிரார்த்தனை உரை



1998 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக வெளிவருகின்ற ஞானச்சுடர் எங்கள் மண்ணில் ஆன்மீக மணம் பரப்பும் அருந்தமிழ்ச் சஞ்சிகையாகத் திகழ்கின்றது. இன்று பதினேழாவது அகவை கண்டு ஓர் இளைஞனுக்குரிய மிடுக்கோடு பயணத்தைத் தொடர்கின்றது.

ஞானச்சுடர் சந்நிதியானின் தெய்வீகப் பிரசாதமாகவே நோக்கப் படுகின்றது. அதன் அட்டையைத் திறந்ததும் சந்நிதி விபூதி. தொடர்ந்து சுடர் தரும் தகவல், ஆன்மீக கட்டுரைகள், கவிதைகள் என பக்கங்கள் விரிவது வழமை.

ஆன்மீகத் துறையில் எனது வளர்ச்சிக்கு சந்நிதியான் ஆச்சிரமம் இட்ட அடித்தளம் அளப்பரியது. இது பற்றி 200ஆவது மலரில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன். எனது முயற்சிகளுக்கு ஆச்சிரமம் நல்கி வரும் ஆதரவிற்கு என்றும் நன்றியுடையேன். ஆன்மீகம் சார்ந்த பற்பல பணிகளை பன்முக சிந்தனையோடு முன்னெடுத்து வரும் ஆச்சிரம சுவாமிகளும் அன்பர்களும் சைவ உலகோரால் என்றும் போற்றப்படுவர்.

ஞானச்சுடர் புலம்பெயர் நாடுகளுக்கும் செல்கின்றது. அங்குள்ள இளம் சந்ததியினர் மத்தியில் நிலப் பற்றையும் சமய நம்பிக்கைகளையும் ஏற்படுத்த வல்ல சாதனமாக ஞானச்சுடர் திகழ முடியும். இதனால் ஞானச்சுடரில் ஓரிரண்டு ஆங்கிலக் கட்டுரைகளையும் இணைத்துக் கொள்வது நன்று என நினைக்கின்றேன்.

இலங்கை வரலாற்றில் 1889இல்தான் முதன் முதலாக இந்து சமயம் சார்ந்த சஞ்சிகையாக இந்து சாதனம் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்தே பல சஞ்சிகைகள் முளைத்தன. அவற்றுட் சிலவே விருட்சமாகின. காலவோட்டத்தில் கரந்துபோனவையே அநேகம். ஞானச்சுடர் பதினேழாண்டுகளைக் கடந்து வெற்றிநடை போடுகிறதென்றால் அது சந்நிதி யானின் திருவருளேயன்றி வேறொன்றில்லை.

ஞானச்சுடரின் உள்ளடக்கம் குறித்து நான் முழுமையாகத் திருப்திப்படுவதில்லை. முன்னர் வெளிவந்த நூல்களின் சிற்சில பக்கங்களை மீள் பிரசுரம் செய்வது தேவையற்ற முயற்சி என்றே கருதுகின்றேன். விருப்பமாயின் அந்நூல்களை மீளப் பதிப்பிக்கலாம். தவிர, இந்து சமயம் சார்ந்த சோதிடம், சமய வளர்சிக்காக உழைத்த சான்றோர், சமயம் சார்ந்து இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றிய தொகுப்புக்கள், சிறுவர்களுக்கான சித்திரக்கதை எனப் பல புதிய அம்சங்களைச் சேர்த்துக் கொள்வது நலந்தரும் . ஆயினும்

**'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்;'**

என்ற வள்ளுவர் வாக்கையும் நினைத்துப் பார்க்கின்றேன். முருகனுடைய விருப்பு எதுவோ அதுவே ஞானச்சுடராக ஒளிவீசட்டும். சுடரின் ஒளி இருசுடர்களாகிய சூரிய சந்திரர் உள்ளவரை பிரகாசிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

மார்கழிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும். இச்சுடரானது சைவர்களின் அறிவுப் பசியைப் போக்குகின்றது என்பதை நாம் எமது கண்களூடாகக் காணமுடிகின்றது.

மேலும் அவர் கூறுகையில் 2015ஆம் ஆண்டு ஞானச்சுடர் மலரானது புதுப்பொலிவுடன் திகழவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

204ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (இளை. பிரதிக் கல்விப்பணிப்பாளர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரானது 17ஆவது அகவையினை முடித்து 18ஆவது அகவையில் தடம்பதிக்கப் போகின்றது என்பது பெருமகிழ்ச்சிக்குரிய விடயம் என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில், ஞானச்சுடர் மலரானது மாதந்தோறும் பல்வேறு ஆக்கங்களைச் சுமந்து வருகின்றது. அவை சைவ சமய வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கக் கருத்துக்களைக் கூறுவனவாய் அமைந்துள்ளன என்று கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், வாராந்த நிகழ்வுகளின்மூலம் ஒவ்வொருவரும் தமது திறமையை அரங்கிலே வெளிப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். இவ்வாறான செயற்பாடு போற்றுதற்குரியதாகும் என்று கூறினார்.

மேலும் இச்சுடரைப் வாசிப்பதன்மூலம் மனதில் ஒரு சந்தோசம் ஏற்படுவதை நாம் அனைவரும் உணரக்கூடியதாக இருக்கின்றது. என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

கடந்த ஆவணியில் ஞானச்சுடரின் 200ஆவது மலர் வெளியீடு கோலாகலமாக நடந்து முடிந்த நிகழ்வு நேற்று நடந்தது போலுள்ளது. ஐந்து மாதங்கள் கடந்துவிட்டது. இன்று உங்கள் கைகளில் தவழ்வது ஞானச்சுடர் 205ஆவது மலர். பிரமிப்பாக இருக்கிறது. 1998 தை மாதத்தில் முதல் ஞானச்சுடர் வெளியானபோது முதற் பிரசவத்தின்போது ஏற்படும் மகிழ்வே நமக்கும் உண்டானது. இன்று பதினேழு ஆண்டுகள் நிறைவடைந்து பதினெட்டாவது ஆண்டில் தடம் பதிக்கிறது ஞானச்சுடர். இத்தனை ஆண்டுகளிலும் ஞானச்சுடர் படிப்படியாக பல மாறுதல்களைப் பெற்றிருக் கிறது.

அட்டைப்படம் பலமுறை மாறுதல்களைப் பெற்றிருக்கிறது. வெளியாகும் கட்டுரைகளின் தரம் உயர்ந்துள்ளதாக அறிஞர்கள் பெருமக்கள் சான்று பகர்கின்றனர். ஆரம்பத்தில் படங்களே இல்லாமல் வெளிவந்த ஞானச்சுடர், இடைக்காலத்தில் கறுப்பு-வெள்ளைப் படமாக மாறி, இன்று அழகு வர்ணத்தில் அச்சேறி வருகிறது.

அனுபவமுள்ள - ஆற்றல் மிகுந்த எழுத்தாளர்களின் ஆக்கங்கள் மட்டுமன்றி, எழுத விரும்புகின்ற புதியவர்களின் ஆக்கங்களையும் வெளியிட்டு ஊக்கப்படுத்தி வருவது வாசகர்கள் அறிந்ததே. அருகே அமர்ந்திருக்கும் சந்நிதி வேலவனின் அருட்கடாட்சம் எமது கடமைகளில் நீக்கமற நிறைந்துள்ளமையே இந்த முயற்சிகளின் வெற்றிக்குக் காரணமாகும். நாம் வெறுங் கருவிகள் மட்டுமே.

அன்பான வாசகர்களே! எதிர் காலத்திலும் இதைவிடச் சிறப்பாக யாம் பணியாற்ற வேலவன் துணை நிற்பான். நீங்களும் எம்மோடு இணைந்திருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னிதி சென்று அந்த சக்திவேல் சண்முகனைக் கண்டேன்

பத்திக் குரியதான சன்னிதியைப்
பார்த்திடச் சென்றேனடி - அங்கே
உத்தமன் வீற்றிருக்கும் - அழகிய
உயர் மதில் கோயில் கண்டேன்
பக்கம் கடலலைகள் ஐயனின்
பாதத்தைப் பாடி யேத்தும் - தன்மைபோல்
மிக்க தொண்டைமா னாறும் - விடாமலே
விரைந்தோடிப் போற்றல் கண்டேன்
சித்திரக் கோபுரஞ்சேர் உயர்ந்த - அச்
செல்வச்சன்னிதி மூலத்தில் - அற்புத
சித்திர வேலைக் கண்டே திகைத்திடச்
சிவசுப்ர மணியன் நின்றான்.
எத்தனை யோகாலம் சன்னிதியில்
இருந்தருள் செய்பவனை - அந்த
முத்துக்குமர னையே கண்டு கொண்டே
முன்னின்று பாடி விட்டேன்.
ஆயிரம் சூரியரும் அந்தக் கந்தன்
அழகுக்கு ஒப்பா வாரோ - என்றும்
சேயோனே முருகா குகா கார்த்திகேயன்
செல்வனைப் பாடி விட்டேன்
அற்புதத் திருப்புகழும் அநுபூதி
அலங்காரம், சட்டி பாடி - மேலும்
பொற்புற ஆற்றுப்படை சேவல் மயில்
புனித பாட்டும் பாடி னேன்.
மன்றில் இடப்பாதத்தை எடுத்தாடும்
நடராசன் போலத் தானும்
குன்றெறி வேலேந்தி ஆடி யாடி
கோல மயில் மேல் வந்தான்
வாயைத் துணியாற் கட்டி அந்த மேலாம்
மாமறைக் குருக்கள் மாரும்
சேயோனைத் தொன்மையான - பூவரசும்
சேர்ந்து பூசிக்கக் கண்டேன்
பாடுவார் ஒரு பாலாய்ப் பாடிப் பாடி
ஆடுவார் ஒரு பாலாய்
கோடி மக்கள் வணங்கும் சன்னிதி
குமரனைக் கண்ணாற் கண்டேன்
அப்பனை அடிபணிவோர் அன்னமிடும்
ஆச்சிரமத் தடைந்தே
தப்பாது அமுதமுன்பார் நாமுஞ் சென்று
சன்னிதி சேர்ந்துய் வோமே.

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

## மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| திரு சி. பத்மநாதன் | (பிரதேச முகாமையாளர்) |
| திரு வ. சண்முகநாதமுதலி | (முகாமையாளர்) |
| திரு இ. யோகராசா | (முகாமையாளர்) |
| திரு தி. சிவகுமாரன் | (முகாமையாளர்) |
| திரு க. சண்முகலிங்கம் | (முகாமையாளர்) |
| திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை | (முகாமையாளர்) |
| திருமதி S. விஜயகுமார் | (அந்தரங்க காரியதரிசி) |
| திரு பி. கிருஷ்ணானந்தன் | (முகாமையாளர்) |
| திரு து. பாலேந்திரா | (முகாமையாளர்) |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | (முகாமையாளர்) |
| திரு த. சிவகுமார் | (முகாமையாளர்) |
| திரு கி. அமிர்தலிங்கம் | (உத்தியோகத்தர்) |

## மக்கள் வங்கி யாழ். பிரதேச அலுவலகம்

| | |
|---|---|
| திரு க. சுசீந்திரன் | (பிரதேச முகாமையாளர்) |
| திரு நா. நாகேஸ்வரன் | (உதவி. பிரதேச முகாமையாளர்) |
| திரு க. ஞானசீலன் | (பிரதி முகாமையாளர்) |
| திரு ம. மாலவன் | (பிரதி முகாமையாளர்) |
| திரு ப. உதயணன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ர. பரந்தாமன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி க. பீஷ்மன் | (பிரதி முகாமையாளர்) |
| திரு ந. தனேஸ் | (பிரதி முகாமையாளர்) |
| திரு சி. கோபிகிருஷ்ணா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ஞானேஸ்வரி செல்வராசா | (பிரதி முகாமையாளர்) |
| செல்வி கே. ஜனனி | (உத்தியோகத்தர்) |
| திரு த. தவேந்திரராஜா | (பாதுகாப்பு உத்தியோகத்தர்) |
| திரு வி.கே. அரசரெத்தினம் | (பாதுகாப்பு உத்தியோகத்தர்) |
| திரு வி. வேணுகோபன் | (உத்தியோகத்தர்) |
| திரு இ. ஜெயகாந்தன் | (உத்தியோகத்தர்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி

| | |
|---|---|
| திரு சி. நித்தியானந்தன் | (சிரேஷ்ட முகாமையாளர்) |
| திருமதி மோ.ப. ஜெயாநந்தி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி சி. கீர்த்திகா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி இ. பத்மகலா | (உத்தியோகத்தர்) |
| திரு ச. சுயன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி இ. சுமணா | (உத்தியோகத்தர்) |
| செல்வி செல்வமலர் | (உத்தியோகத்தர்) |
| திரு சி. ரஜீவன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி ஜீ. சயந்தினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி ஜெ. சயந்தினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி உ. குகன்யா | (உத்தியோகத்தர்) |
| திரு க. ஸ்ரீதரன் | (உத்தியோகத்தர்) |
| செல்வி சுகிர்தகுமாரி | (உத்தியோகத்தர்) |
| திரு ஜெயபிரதாப் | (உத்தியோகத்தர்) |
| செல்வி R. ஜமுனாவாணி | (உத்தியோகத்தர்) |
| செல்வி சு. மைதிலி | (உத்தியோகத்தர்) |
| செல்வி ஜி. யுகதாஸ் | (உத்தியோகத்தர்) |

## மக்கள் வங்கி சுன்னாகம்

| | |
|---|---|
| திரு ப. பார்த்தீபன் | (முகாமையாளர்) |
| திருமதி சு. யாழினி | (பிரதி முகாமையாளர்) |
| திரு ச. கெங்காதரன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி உ. தனுஸ்யா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி பு. கிருபாளினி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ஜெ. பகீரதி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி கி. மனஸ்வினி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி செ. உஷாந்திகா | (உத்தியோகத்தர்) |
| திருமதி உ. துளசிதா | (உத்தியோகத்தர்) |
| திருமதி செ. உஷாநந்தினி | (உத்தியோகத்தர்) |
| செல்வி த. சசிதேவி | (உத்தியோகத்தர்) |
| திரு கோ. அஜந்தன் | (உத்தியோகத்தர்) |
| திரு ம. லம்போதரன் | (உத்தியோகத்தர்) |
| திரு இ. ஆனந்தராசா | (உத்தியோகத்தர்) |
| செல்வி சி. சிவசொரூபி | (உத்தியோகத்தர்) |
| திரு எஸ். ஜனாங்கனன் | (உத்தியோகத்தர்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மக்கள் வங்கி- யாழ். கன்னாதிட்டி

திரு க. ரமேஸ்நேசன் (முகாமையாளர்)
திருமதி ச. நீரஜா (பிரதி முகாமையாளர்)
திருமதி ஜசிகா (பிரதி முகாமையாளர்)
திருமதி பா. சுபாஜினி (பிரதி முகாமையாளர்)
திருமதி எஸ். லாவண்யா (உத்தியோகத்தர்)
திரு தெ. ஹர்சன் (உத்தியோகத்தர்)
செல்வி நா. கிருஷிகா (உத்தியோகத்தர்)
திருமதி ல. நிஷங்கா (உத்தியோகத்தர்)

### மக்கள் வங்கி- யாழ். பல்கலைக்கழகம்

திருமதி சி. தமயந்தி (பிரதி முகாமையாளர்)
திருமதி S. சிந்துளா (பிரதி முகாமையாளர்)
செல்வி சா. ரட்சிகா (பிரதி முகாமையாளர்)
செல்வி இ. கீர்த்திகா (உத்தியோகத்தர்)
செல்வி க. சரண்யா (உத்தியோகத்தர்)
திரு இ. சந்திரகோபன் (உத்தியோகத்தர்)
திரு தே. ரஜீவன் (உத்தியோகத்தர்)
செல்வி க. சுமித்திரா (உத்தியோகத்தர்)
திருமதி பி. ஜனனி (உத்தியோகத்தர்)
திரு ஏ.பி. சஞ்சீவ் (உத்தியோகத்தர்)
செல்வி ந. ஜிறானு (உத்தியோகத்தர்)

### மக்கள் வங்கி – சாவகச்சேரி

திரு க. விஜயகுமார் (முகாமையாளர்)
திருமதி கா. மீரா (பிரதி முகாமையாளர்)
திரு பா. சீராளன் (பிரதி முகாமையாளர்)
திரு க. ஞானச்சந்திரன் (உத்தியோகத்தர்)
திரு என். சஞ்சீவ் (உத்தியோகத்தர்)
திரு எஸ். சற்சொருபன் (உத்தியோகத்தர்)
செல்வி ஞா. அனோஜா (உத்தியோகத்தர்)
திருமதி சி. பானுஜா (உத்தியோகத்தர்)
திரு பி. பிறேம்லால் (உத்தியோகத்தர்)
திரு இ. வாகீசன் (உத்தியோகத்தர்)

### மக்கள் வங்கி – நெல்லியடி

திரு சி. பகீரதன் (பிரதி முகாமையாளர்)
திருமதி எஸ் ராதிகா (உத்தியோகத்தர்)
செல்வி எம். சுபேந்தினி (உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி இ. அஞ்சனா (உத்தியோகத்தர்)
திரு த. ரஜிந்தன் (உத்தியோகத்தர்)
திரு கா. துவிதரன் (உத்தியோகத்தர்)
திரு வி. ஜெயமோகன் (உத்தியோகத்தர்)

### மக்கள் வங்கி - பருத்தித்துறை

திரு க. வாசு (முகாமையாளர்)
திருமதி ச. கிருத்திகா (பிரதி முகாமையாளர்
திரு அ. ஹரிகேசன் (பிரதி முகாமையாளர்)
திருமதி அ. மீரா (உத்தியோகத்தர்)
திருமதி த. சங்கீதா (உத்தியோகத்தர்)
செல்வி க. சுபாசினி (உத்தியோகத்தர்)
செல்வி இ. சசிதா (உத்தியோகத்தர்)
திரு க. கலையரசன் (உத்தியோகத்தர்)

### மக்கள் வங்கி - வல்வெட்டித்துறை

திரு S. சர்வானந்தன் ((முகாமையாளர்)
திருமதி ஸ்ரீகாந்தநிர்மலா நிமலேந்திரன் (பிரதி முகாமையாளர்)
திருமதி க. சுகந்தி (பிரதி முகாமையாளர்)
செல்வி சவுந்தர்ராஜன் யாழினி (உத்தியோகத்தர்)
திருமதி மு. தர்ஷிகா (உத்தியோகத்தர்)
திரு S. மனோராஜ் (உத்தியோகத்தர்)

### மக்கள் வங்கி - அச்சுவேலி

திரு எஸ். சிவகுமார் (பிரதி முகாமையாளர்)
திரு சி. சசீவன் (உத்தியோகத்தர்)
திரு ச. கிரிடன் (உத்தியோகத்தர்)
செல்வி சி. துவாரகா (உத்தியோகத்தர்)
திரு க. கணேசவேல் (உத்தியோகத்தர்)

### மக்கள் வங்கி - பரந்தன்

திரு க. சிறீதரன் (முகாமையாளர்)
திரு பி. தேவநேசன் (பிரதி முகாமையாளர்)
திரு க. தேவராஜா (உத்தியோகத்தர்)
திரு க. லிங்கராஜ் (உத்தியோகத்தர்)
திரு பொ. ஜெகதீசன் (உத்தியோகத்தர்)
திரு ந. கோபி (உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு க. கோகுலன் | (உத்தியோகத்தர்) |
| ம. அகிலா | (உத்தியோகத்தர்) |
| தி. லதாஜினி | (உத்தியோகத்தர்) |
| எஸ். பத்மினி | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - யாழ். பிரதான வீதி**

| | |
|---|---|
| திரு தெ. ஆனந்த் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ந. கிருஷாந்தி | (பிரதி முகாமையாளர்) |
| திரு க. கமலக்ஷன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி க. சுஜீபா | (உத்தியோகத்தர்) |
| திருமதி தி. வானதி | (உத்தியோகத்தர்) |
| திருமதி T. அனுஜா | (உத்தியோகத்தர்) |
| செல்வி எஸ். சிந்துஷா | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - சங்கானை**

| | |
|---|---|
| திரு S. இராஜேந்திரம் | (பிரதி முகாமையாளர்) |
| திரு தி. புஷாளினி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி கோ. பிரதக்ஷி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி அ. சுகன்யா | (உத்தியோகத்தர்) |
| திரு செ. உமாசங்கர் | (உத்தியோகத்தர்) |
| செல்வி மு. ஹேமப்பிரியா | (உத்தியோகத்தர்) |
| திருமதி ப. பிரதீபா | (உத்தியோகத்தர்) |
| திருமதி ப. சுதர்சினி | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - திருமலை பிரதேச அலுவலகம்**

| | |
|---|---|
| திரு ம. பிறேம்குமார் | (பிரதி முகாமையாளர்) |
| செல்வி வி. ரம்யாளினி | (உத்தியோகத்தர்) |
| திரு வி. பார்த்தீபன் | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - திருமலை**

| | |
|---|---|
| திருமதி மு. வைஜெயந்தி | (பிரதி முகாமையாளர்) |
| திரு A. ஐங்கரன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ம. கிருஷ்ணானந்தி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி S. நிதர்ஷினி | (பிரதி முகாமையாளர்) |

**மக்கள் வங்கி - சேருநுவர**

| | |
|---|---|
| திரு க. மதிவதனன் | (முகாமையாளர்) |
| திரு எஸ். துஷாந்தன் | (உத்தியோகத்தர்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி - செங்கலடி**

திரு எஸ். சிவஞானராஜா (முகாமையாளர்)
செல்வி வ. கனகசபை (முகாமையாளர், காரைதீவு)

**மக்கள் வங்கி - வவுனியா**

திரு கு. கோடீஸ்வரன் (முகாமையாளர்)

**மக்கள் வங்கி - மானிப்பாய்**

திருமதி வி. பிரியகாந்தினி (முகாமையாளர்)
திருமதி ப. ஸ்ரீவித்யா (உத்தியோகத்தர்)
செல்வி சி. சியாமளா (உத்தியோகத்தர்)

**மக்கள் வங்கி - நாவலர் வீதி**

திருமதி சு. வனஜா (முகாமையாளர்)
திருமதி ரா. ஆர்த்திகா (உத்தியோகத்தர்)

E. செல்வேஸ்வரன்
(பாட்டா பாதணி முகவர்)

திருமதி C. சிவலிங்கம்
(கனடா)

த. கணேசமூர்த்தி
(இளநிலை அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

தம்பையா புவனேந்திரன்
(முகாமையாளர் இலங்கை வங்கி, அச்சுவேலி)

திருமதி K. பால்ராஜ்
(சபாபதிவீதி, வண்ணார்பண்ணை கிழக்கு)

பொ. பாலசிங்கம்
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

செல்வி ஹரிணி ஹரிதரன்
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)

செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)

பா. இராசேந்திரம்
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)

செ. மதியாபரணம்
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)

நீ. சுப்பிரமணியன்
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி தட்சாயினி செல்வமாணிக்கம்
(நாவலடி, உடுப்பிட்டி)
வே. இரத்தினசிங்கம்
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
சி. கணேசலிங்கம்
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
E.A. ஏகநாதன்
(இளைப்பாறிய நீதிபதி, யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
சிவஞானம் கிருபாகரன்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
மு. சரவணபவான்
(கலைமகள் விலாஸ், சங்கானை)
செல்வி நா. ஜெயராணி
(அதிபர், யா/ சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை)
இ. கோபாலசுந்தரம்
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
J. பிரபாகரன் மாஸ்ரர்
(நெல்லியடி)
க. நாகராசா
(பூம்பதிவீதி, வடலியடைப்பு)
இ. சொக்கலிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)
கு. கங்கைவேணியன்
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
ந. சத்தியரூபன்
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
க. சோமசேகரம்
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)
ஐ. சிவகுமார்
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
செ. தபேந்திரன்
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
க. இராசநாயகம்
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
R.S. தனபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாலன் மில், வட்டுக்கோட்டை)

**சி. சச்சிதானந்தம்**

(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)

**உரிமையாளர்**

(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**வே. பொன்னம்பலம்**

(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)

**உரிமையாளர்**

(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)

**இ. இராசநாயகம்**

(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)

**ஆ. சுந்தரலிங்கம்**

(இளை. பிரதம அஞ்சல் அதிபர், அஞ்சல் திணைக்களம்)

**நா. கந்தப்பு**

(தோப்பு, அச்சுவேலி)

**க. தர்மலிங்கம் J.P.**

(நீர்வேலி)

**மு. தர்மலிங்கம்**

(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)

**உரிமையாளர்**

(வே. கந்தையாபிள்ளை அன்சன்ஸ், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)

**ஜெ. இராஜகோபால்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**சேனாதிராசா சற்குணராசா**

(பண்டத்தரிப்பு)

**திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி**

(முருகமூர்த்தி வீதி, சங்கானை)

**தெ. கோபாலசிங்கம்**

(சிவபூமி முதியோர் இல்லம், சுழிபுரம்)

**து. மகேந்திரன்**

(கைதடி மேற்கு, கைதடி)

**த. சிவசுப்பிரமணியம்**

(லீலா வெதுப்பகம், சங்கானை)

**Dr சி. இராசலிங்கம்**

(இளை. வைத்திய பொறுப்பதிகாரி, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் வழி

– திரு S.குணாகரன் அவர்கள் –

வாழ்க்கை என்பது ஓர் அனுபவம். ஆளுக்கு ஆள் வேறுபடும். சுகமோ, துக்கமோ நாம் அடையும் அனுபவம் நம்மைப் பலப் படுத்துகிறது. காயப்படுத்துகிறது, சிரிக்க வைக்கிறது, அழ வைக்கிறது. முடிவில் இதில் எது வாழ்க்கை என்று சிந்திக்க வைக்கிறது. சிந்திக்கும் நாம் தெளிவடைந்தோமென்றால் அதுதான் இல்லை. மேலும் மேலும் குழம்பி முடிவில் தற்கொலையில் வாழ்வைப் பறி கொடுக்கிறோம்.

இறைவனால் படைக்கப்பட்ட மற்ற உயிரினங்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சி எதுவுமில்லை. விலங்குகள் தற் கொலை செய்து கொள்வதும் இல்லை. காரணம் அவைகளுக்கு முடிவைப் பற்றிய பயம் இல்லை. அதைப் பற்றி அறிந்து கொள் வதும் இல்லை. தான் அறிவாளி என்று கர்வப் படும் மனிதனால் வாழ்க்கையில் வெற்றிபெற முடிவதில்லை. காரணம் அறிவு மட்டும் வாழ்க் கைக்குப் போதாது. அதற்கு மேலும் ஒன்று தேவைப்படுகின்றது. அது என்ன? தன்னம் பிக்கை, மனோபலம் அது உள்ளவனுக்கு மட்டுமே அது சாத்தியமாகும்.

அப்படி ஒரு விஷயம் இருக்கிறதா என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். வாழ்க் கையைப் பற்றி தீர்மானமான விளக்கம் எது வும் இல்லாவிட்டாலும், வாழ்க்கையின் பிரச் சினைகளுக்கு மனோபலம் ஒன்று மட்டுமே தீர்வாக அமைகிறது. ஒவ்வொருவரின் வாழ்க்கை அனுபவங்களே அவர்களின் வழி காட்டி. அனுபவங்களிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி கற்றுக் கொண்டவன் வாழ்க்கையில் வெற்றிபெறு கிறான். கற்றுக் கொள்ளாதவன் தோல்வி அடைகிறான். மற்ற உயிரினங்களிலிருந்து மனிதன் பல விதத்தில் மாறுபடுகின்றான். சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள் வதில், தன் தேவைகளைத் தானே தேடி பூர்த்தி செய்வதில், நன்மை, தீமைகளை பகுத்தறியும் விதத்தில் பிறருக்கு வழி காட்டியாக இருப்பதில் முதன்மை பெற்று விளங்கும் மனிதன் சில நேரங்களில் மிரு கத்தைவிட கீழ்நிலைக்கு வந்து விடுகிறான். போகும் திசை தெரியாமல் மயங்கி நிற்கின் றான். அப்போதுதான் வாழ்க்கையில் பயம் ஏற்படுகிறது. தோல்விக்குப் பின்பு கிடைக்கும் வெற்றிக்காக காத்திருக்க அவனுக்கு பொறுமை இல்லை. தோல்வியே வாழ்க்கை என்று முடிவு செய்து, தனக்குச் சோகமான முடிவைத் தேடிக்கொள்கிறான். ஆனால் தோல்விகள் நமக்கு நல்ல அனுபவங்களைத் தந்து நம் மைப் பலசாலியாக்குகிறது.

நம்பிக்கை எனும் வானவில் நம்மிடம் எப்போதும் இருக்கவேண்டும். வானவில் தோன்றும்போது வானம் அழகாகிறது. நம் பிக்கை தோன்றும்போது வாழ்க்கை அழகா கிறது. ஒவ்வொரு மனிதனின் கையிலும் அழகான வாழ்க்கை இருக்கிறது. இதை வளப்படுத்தும் நம்பிக்கை எனும் வானவில் தான் தோன்ற மறுக்கிறது. அப்போது வாழ்க்கை வெறுமையாகிறது. அந்த வெறுமையை நிரப்ப யாராலும் முடியாது.

இரவும் பகலும் வருவதுமில்லை, போவதுமில்லை. அவை பூமி சுழல்வதால் ஏற்படும் மாற்றங்கள். சுகமும் துக்கமும் வருவதுமில்லை போவதுமில்லை. நாம் வாழ் வதால் வரும் மாற்றங்கள். பூமி இரவுக்காக வருந்துவதுமில்லை பகலுக்காக மகிழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அது ஓர் கர்மயோகியைப் போல தன் பணியைச் செய்து கொண் டிருக்கிறது. சூரியன் உயிர்களை வளர்க் கிறது. காக்கிறது. அது இல்லாத நேரத் திலும் உயிர்கள் அதை எதிர்நோக்கி காத் திருக்கிறது. ஆனால் இன்றைய அவசர மனித னிடம் விடியலுக்குக் காத்திருக்கும் பொறுமை இல்லை. கல்வியறிவு அதிகமில்லாத காலத் தில்கூட இருந்திராத மனச்சுமை, தற்கொலை கள் இப்போதுதான் அதிகமாக வருகிறது.

உங்களுடைய வாழ்க்கையில் மற்றவர் களுக்கு தேவையான முன் உதாரணம் இருக்கவேண்டும். தோல்விகளைத் தாண்டி வெளிவந்தால்த்தான் அங்கே வெற்றி நம்மை வரவேற்கக் காத்திருக்கும். வெற்றிக்காக உழைக்கிறோம். தோல்வி நம்முன்வந்து நிற்கும்போது துவண்டு போகின்றோம். தோல்விதான் முதலில் வரும். அது உலக இயல்பு. தோல்வியைக் கண்டு மிரண்டுபோய் வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறோம். ஏன் இந்த அவசரம். தோல் விக்குப் பின் வெற்றி என்ற வாக்குப் பொய்யா? மெய்யா? என்று பொறுத்திருந்து பார்க்கலாமே. வாழ்வாதாரத்தை தொலைத்து நிற்கும் அனை வரின் சிந்தனைக்கும் இது சமர்ப்பணம்.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 60

பல்லவி

சஞ்சலம் தீராயோ? சண்முகனே – என்னை
வஞ்சனை யாலுலைக்க வருதீநீர் காற்றுவெந்நோய்ச்

அநுபல்லவி

தஞ்சமென் றெனக்காரோ? தம்பினேன் ஏங்குகின்றேன்
செஞ்சவே யருளாயோ செல்வச் சந்நிதிக் கந்தா!

சரணம்

சஞ்சலித் திருகண்ணீர் சரீரமெங்கும் சோர
பஞ்சடிக் கமலமதை பாவியேன் நான்தொழுதேன்
நெஞ்சகம் குழையநின்றே நித்தமும் திருமுறையை
விஞ்சையி லோதிடுவார் விருப்பம் தருள்வேலா!

செஞ்சிலம் பலம்பும்தண்டைச் சேவடிதுணை யென்றே
அஞ்சலி செலுத்திநின்றேன் ஆறுமா முகத்தோனே!
வஞ்சக நெஞ்சினரும் வந்துசந்நிதி பணிந்தால்
எஞ்சலில் வாழ்வுதனை இகமருள் குமரானன்

(தஞ்சமென்)

-இராசையா குகதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகமான பொருள்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

இறைவன் எனும் இன்பக் கடலிலிருந்து வெளிப்பட்ட இனிமையான அமிர்தமாகிய ஆறுமாமுகப் பரம்பொருள், ஞானந்தானுருவாகிய நாயகன், கலியுகவரதன், முழுமுதற் பரம்பொருளாம் செல்வக் கணபதிக் கிளையோன், பெரும் பகைவனாகிய சூரபத்மனே மெய்மறந்து பாராட்டிய ஒப்பற்ற அழகன், என்றும் இளம்பரிபூரணன், தந்தைக்கு உபதேசித்த விந்தைமிகு தீரன், உமையவள் பெற்ற இலஞ்சியம், நீலமேக சியாமள வண்ணப் பெருமானே பட்சத்துடன் மெச்சுகின்ற பரம்பொருள், முத்திக்கொரு வித்துக் குருபரன், பிரணவ மந்திரத்தின் நாத தத்துவத்தை விளக்கும் சேவலைக் கொடியாகக் கொண்ட பெருமான், வேற்பெருமானாக செல்வச் சந்நிதியிலே கோயில் கொண்டு அருளாட்சி புரிகின்றான்.

சிவபெருமானுடைய ஈசானம், வாமதேவம், தற்புருஷம், அகோரம், சத்யோஜாதம் எனும் ஐந்து முகங்களுடன், அதோ முகமும் சேர்ந்து சிவசக்தி வடிவமாக ஆறுமுகப் பெருமான் உதித்தார்.



நெற்றிக் கண்ணனின் அருளாலே
ஆறு பொறிகள் தோன்றினவே
வாயுவும் தேயுவும் தாங்காமல்
சரவணப் பொய்கையில் சேர்த்தனரே
ஆறு தாமரை மலர்களிலே
ஆறு குழந்தைகள் தவழ்ந்தனரே
ஆறு குழந்தைகள் அழுதிடவே
அமரர் கண்டு களித்தனரே
கார்த்திகைப் பெண்கள் பாலூட்டிக்
கண்மணிமுருகனைக் காத்தனரே
தாய்மார் அறுவர் தாலாட்டில்
செல்வக் குழந்தைகள் மகிழ்ந்தனவே
அன்புடன் அபிராமி அரவணைக்க
அறுவர் ஓர் அம்சமாய் வந்தனரே
ஒருதிரு முருகன் வந்தானே
உலகம் உய்ய உதித்தானே
தேவர்கள் துயர்தனை தீர்த்திடவே
தேவாதி தேவன் வந்தானே
சூரபத்மனை சங்கரிக்க
திரு அவதாரம் செய்தானே.

உமாதேவியின் திருமுலைப் பாலையுண்டு ஞானஸ்கந்தன் உருவானான். பூரணப் பொருளாக விளங்குகின்ற திருமுருகன் ஆறு திருமுகங்களுடன் அடியார்களுக்கு அருள் பாலிக்கிறான். மனிதனுடைய உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகப் பெருமான் தனித்தனியே நின்று பாதுகாக்கின்றான். யோகிகள் அந்த ஆறு ஆதாரங்களில் அவனுடைய திருமுக மண்டலத்தைத் தரிசிக்கிறார்கள். ஆறு முகதத்துவம் மிகமிகப் பழமையானது. மிகமிகப் புதுமையானது. எல்லாக் காலத்துக்கும் உரியது. அதுவே ஆதியானது, அந்தமானது, ஆதியும் அற்றது, அந்தமும் அற்றது.

ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்

ஆறுமுகம் என்று தெளியேனே என்று திருப்புகழிலே பாடுகிறார் அருணகிரிநாதர். ஆறு முகத்தையும் கண்ணால் கண்டால் மட்டும் போதாது. கருத்தாலும் காண வேண்டும். ஆறுமுகத்தைப் பற்றிச் சொல்கின்ற பாடல்களை எல்லாம் கருத்தாகப் படிக்க வேண்டும். அப்போது பரமானந்த சாகரத்தில் அமுதமயமாக ஆறு திருமுகங்களையும் காணும் நிலையுண்டாகும். நக்கீரர் எம்பெருமானுடைய ஆறுதிருமுகங்களும் செய்கின்ற செயல்களை அழகாகச் சொல்கிறார்.

மா இருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்

உலகம் எங்கனும் பரந்து கிடக்கின்ற இருளை எல்லாம் அறவே போக்கி ஒளிதருவது ஒருமுகம்.

ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே.

ஆர்வலர், அன்புமிக்கோர்; பக்தர்கள் அவர்கள் தன்னை வாழ்த்துங்கால் அவர்க்கு இனிமையாக ஒழுகி, அவர்கள்பால் வைத்த காதலாலே மகிழ்ந்து, அவர்களுக்கு வேண்டும் பொருள்களை ஈந்தருளும் பேரருளாளனின் அருளும்முகம்.

ஒருமுகம்
மந்திர விதியின் மர புளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க் கும்மே.

மறைவழி நின்று வேள்விகளைச் செய்கின்ற அந்தணர்களுடைய வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி முருகனே முன்னின்று பாதுகாத்து, அவற்றுக்குரிய பலனையும் அவன் அளிப்பான். வேள்விகாக்கும் ஒருமுகம்.

ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக் கும்மே.

அறிவே உருவான ஞானபண்டித சாமி மெய்யடியார்களுக்குத் தோன்றுகின்ற ஐயங்களைப் போக்கித் தெளிவித்து, எஞ்சிய பொருளாகிய வீட்டின்பத்தை அருளி மீண்டும் பிறவியில் அழுந்தா வகையில் முருகப் பெருமான் காத்தருள்வான். "காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத்தேன் காட்டி" ஆட்கொள்வான் முருகன். மெய்ஞ்ஞானத் திருமுகம் ஒருமுகம்.

ஒருமுகம்
செறு நர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே.

*அழகைத் தேடுபவன் கூடவே ஆபத்தையும் தேடுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்களுக்கு வரும் துன்பத்தைப் போக்குவான் முருகன். அசுரர்கள் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டு நல்லவர்களுக்குத் துன்பத்தைத் தருகிறார்கள். அவர்களை அடியோடு அழிக்கும் திறல் முருகப்பெருமானுக்கேயுண்டு. இந்த வீரச் செயலைச் செய்கிறது ஒருமுகம். துஷ்ட நிக்கிரக, சிஷ்ட பரிபாலனம் செய்வது அவன்வேலை. வீரத் திருமுகம்.

ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே.

ஆறாவது திருமுகம் இன்பத்தை வழங்குகின்றது. அத்திருமுகம் குறச் சிறுமியாகிய வள்ளியெம்பிராட்டியோடு மகிழ்தலைப் பொருந்திற்று என்பது பாடலின் பொருள். வள்ளி ஆன்மாக்களுடைய பிரதிநிதி. முருகப்பெருமானின் இச்சா சக்தி. காமநுகர்ச்சி இல்லாத கடவுள். இவ்வாறு மகிழ்தலைப் பொருந்துதல் உலகில் இல்வாழ்க்கையில் உயிர்கள் அமர்ந்து இன்பம் பெறும் பொருட்டேயாகும். இன்பமுகம்.

எம்பெருமானுடைய முதல் முகம் இருளைப்போக்கி ஒளிசெய்யக் கடைசி முகம் இன்பம் தருகிறது. இருளாகிய ஆணவமலம் நீங்கப் பேரின்பம் வரும்.

ஆறு திருமுகங்களையும் நக்கீரர் அழகாக வசப்படுத்தியிருக்கிறார். அருணகிரிநாதரும், கந்தர் கலிவெண்பாவிலே குமரகுருபரரும் முருகனுடைய தெய்வத் திருமுகங்களை வரிசைப் படுத்திப் பாடியுள்ளார்கள். முருகப் பெருமான் ஆறு திருமுகங்களை உடையவராக இருப்பதால் அவருடன் சம்பந்தப்பட்ட பொருட்களையும் ஆறு ஆறாகச் சொல்வதில் இன்பம் அவனுடைய மந்திரம் சடாட்சரம். சரவணபவ ஆறு எழுத்துக்களுடன் கூடியது. அவரைப் பூஜிக்கும் சக்கரத்திலே ஆறு கோணங்கள் உண்டு. அடியார்களும் அவருடைய ஆறு முகத்தையும் ஆறுதடவை நினைந்து திருநீற்றைப் பூசிக் கொள்கிறார்கள்.

ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம்
ஆறுமுகம், ஆறுமுகம் - என்றுபூதி
ஆகம் அணி மாதவர்கள் --திருப்புகழ்

முருகனுடைய படைவீடுகள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என ஆறாகும். அவனுடைய திருக்கை வேலுக்கும் ஆறுமுகம் உண்டு. கந்தனின் பெருவிழா கந்தசஷ்டியும் ஆறு திருநாள்களைக் கொண்டது.

முருகன் அற்புதத் தெய்வம். அழகுத் தெய்வம். ஆறுமுக கோலத்துடன் அவன் தரும் காட்சி விளக்க முடியாதது. பேசமுடியாதநிலை. ஆனால் அப்பெருமானின் அழகுக் கோலத்தைத் தரிசித்த அருளாளர்கள் நமக்கு சொல்லால் வடித்துத் தந்துள்ளார்கள்.

ஆறுமுகமும் அணி முடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண் புயத் தழகிய மார்பில்
.............

இப்படிச் சொல்லோவியமாக கந்தசஷ்டி கவசம் அழகு ஒழுகு கோலத்தைக் காட்டுகிறது. இறைவன் திருக்கோலப் பேரெழில் என்றுமே குறையாதது. மங்காதது; மாறாதது. என்றுமே மாறாத அழகும் மங்காத இளமையும் கொண்டவன். அழியா அழகும், அடங்கா ஆற்றலும், அடியார்க்கு அருளும் அருமையும் சொல்லி முடியாதது. வினைதீர்க்கும் வெற்றி வடிவேலன் அறியாமை இருளை அறவே போக்கி மெய்ஞ்ஞான ஒளியினைத் தரும் ஞானமூர்த்தி துன்பத்தை துரத்தித் துயர்களை விலக்கி, கல்வியும், கலையும், புகழும், செல்வமும் திருவும் நல்கிடும் அருட்பெரு முருகன். கருணையே உருவான கண்ணுதற் கடவுள் நல்கிய புண்ணிய மூர்த்தி.

கருணைமுகம் ஓராறுடனும், காக்கும் கரம் ஈராறுடனும் ஆறுமுகப் பெருமான் நமக்கு ஆறுதலை அளிப்பான். திருப்புகழிலே ஏறுமயில் ஏறிவிளையாடு முகம், ஈசருடன் ஞானமொழி பேசும் முகம், கூறும் அடியார்கள் வினைதீர்க்கும் முகம், குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம், மாறுபடு சூரரை வதைத்த முகம், வள்ளியை மணம் புணர வந்த முகம் என்று ஆறுமுகத்தையும் அருணகிரிநாதர் கண்டு ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும் என ஆனந்தமடைகிறார்.

ஆறுமுகப் பெருமான்முன் நிற்கும்போது அகந்தை அழிகிறது. போகமுறும் வள்ளியும் புத்தேளிர் பூங்கொடியும் இருமருங்கும் எழில் பொழிய வீற்றிருந்து அருள்கிறார்கள். பச்சை மயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும், கச்சைத் திருவரையும், சீறடியும் செங்கையும் ஈராறு அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகிரணம் சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும் கொண்ட பெருமான் நமக்கு ஆறுதல் அளித்து எத்திசையும் நோக்கி அருள் சுரப்பான். அவனது

ஆறுதிருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தை குடி கொண்டேனே -கந்தர் கலிவெண்பா.

"ஓம் சரவணபவ" எனும் ஒருமந்திரம் சக்தியெலாம் தரும் திருமந்திரம். அச்சத்தை நீக்குகின்ற அன்பு மந்திரம். ஆபத்தில் காக்கும் அருமந்திரம். அறம், பொருள், இன்பம் அருளும் மந்திரம். என்றைக்கும் நிலைத்திருக்கும் கந்தன் மந்திரம். உச்சரிக்க எளிதான, உயிருக்கு உயிரான, முத்திக்கு வித்தான முழுமந்திரத்தை அந்திபகல் சிந்தனை செய் நெஞ்சமே. அந்த ஆறெழுத்து மந்திரத்தை ஆர் எடுத்து ஓதிடினும் கட்டழகு கொண்ட கந்தவடிவேலன், அந்தச் சுந்தரன், ஆறுமுகன் வந்து முன் நிற்பனே. தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பதற்காகவே, ஆறுமுகங்களுடன் ஒவ்வொரு திசையையும் நோக்கி ஆயத்தமாக இருக்கிறான். அந்தச் சரணாகத ரட்சகனைச் சரணடைதல் நம்கடன். அவன் நம் அன்பை ஏற்று ஆன்மாவைப் பிரபஞ்சச் சேற்றினின்றும் எடுத்து தன் தாமரைத் திருவடிகளில் சேர்ப்பான்.

சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா வானந்த வாரி போற்றி
அழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி



**பதவுரை:-**

தொழு தகை துன்பம் துடைப்பாய் போற்றி- நின்னைத் தொழும் தகுதியையுடைய அடியார்களின் துன்பங்களை நீக்குவோனே நினக்கு வணக்கம்; அழிவு இலா ஆனந்த வாரி போற்றி- கெடுதலில்லாத இன்பக் கடலே நினக்கு வணக்கம்; அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி- கேடும் தோற்றமும் நீங்கினவனே நினக்கு வணக்கம்; முழுவதும் இறந்த முதல்வா போற்றி- எல்லாவற்றையுங் கடந்த முதல்வனே நினக்கு வணக்கம்; மான் நேர் நோக்கி மணாளா போற்றி- மானினது நோக்கம் போன்ற நோக்கினையுடைய உமையம்மைக்கு மணவாளனே நினக்கு வணக்கம்; வானகத்து அமரர் தாயே போற்றி- வானிடத்துள்ள தேவர்களுக்கும் தாய் போன்றவனே நினக்கு வணக்கம்; பார் இடை ஐந்தாய் பரந்தாய் போற்றி- நிலத்தினிடத்து நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை என்னும் ஐந்து பண்புகளாக விரிந்து நின்றவனே நினக்கு வணக்கம்; நீர் இடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி- நீரினிடத்து சுவை ஒளி ஊறு ஓசை என்னும் நான்கு பண்புகளாய் விளங்கினவனே நினக்கு வணக்கம். தீ இடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி- நெருப்பினிடத்து ஒளி ஊறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை என்னும் மூன்று பண்புகளாக விளங்கினவனே நினக்கு வணக்கம்; வளி இடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி- காற்றினிடத்து ஊறு ஓசை என்னும் இரண்டு பண்புகளாக மகிழ்ந்து நின்றவனே நினக்கு வணக்கம். வெளி இடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி- வானிடத்து ஓசையாகிய ஒரு பண்பாய் நிறைந்துள்ளவனே நினக்கு வணக்கம்; அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி- அன்பினால் உருகுபவரது உள்ளத்தின்கண் ஊறும் அமுதமானவனே நினக்கு வணக்கம்; கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி- கனவினிடத்தும் அன்பரல்லாத தேவர்கட்கும் காண்டற்கரியவனே வணக்கம். நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி- நனவினிடத்தும் நாய்போல இழிந்த அடியேனுக்கு வெளிப்பட்டு அருள் புரிந்தவனே நினக்கு வணக்கம்.

இறைவன் தன்னைத் தொழும் தகுதியையுடைய அடியார்களின் துன்பங்களை நீக்குவோனாதலின் "தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" என்றார். "துஞ்சாப் பலிதேருந் தோன்றால் போற்றி, தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் (தே 219:8) அருளியவாறுங் காண்க. தொழுதகை- வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனி, தொழு என்பதனை முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டு, "தொழு தகை துன்பம்" என்பதற்குத் தொழுதலைத் தடுக்கும் துன்பம் எனவும், தொழுத கை துன்பம் எனப் பிரித்துத் தொழுத கையினையுடைய அடியார்க்கு வரும் துன்பம் எனவும் உரைக்கலாம். தொழுதல்- கும்பிடுதல். "தொழுதகையுள்ளும் படையொடுங்கும்" (குறள் 828) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தகைதல் - தடுத்தல் என்னும் பொருட்டாதல், "கானந் தகைப்ப செலவு" (கலி 3:22) என்புழிக் காண்க.

கடனீரும் வற்றும் ஊழிக்காலத்தும் கெடுதலில்லாத ஆனந்தமாகிய நீரானிறைந்த கடல் இறைவனாதலின் "அழிவிலா ஆனந்த வாரி" என்றார். "பந்தமறுக்கு மானந்த மாக்கடலே" (கோயிற் 9) "ஆனந்த மாக்கடல்" (திருக்கோவை 146) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

இறைவன் தேடும் தோற்றமும் இல்லாதவனாதலின் "அழிவதுமாவதுங் கடந்தாய்" என்றார். "பிறப்போ டிறப்பென்றும் இல்லாதான் காண்" "தோற்றக்கே டில்லாதான் காண்" (நாவு 243:5; 277:3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

எல்லாப் பொருள்களிலும் இறைவன் கலந்திருந்தும் அவற்றால் தாக்குண்ணாது அவற்றிற்கும் அப்பாற்பட்டவனாய் நிற்றலின் "முழுவது மிறந்த" என்றார். "பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர் விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகி" (திருவெம் 18) எனவும் "பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகி, பேதங்கள் அனைத்துமாய், பேதமில்லாப் பெருமையனை" (கண்ட 10) எனவும் வருவன காண்க. இறத்தல்- கடத்தல். முதல்வா- முதல்வனே.

மானேர் நோக்கி- மாண்பிணையினது வெருவின நோக்கம் போலும் நோக்கினை யுடையாள். "மானோக்கினவர்" என்பதற்கு "மானினது நோக்கம் போலும் நோக்கினையுடையார்" (கலி 30:11 உரை) எனவும், "பிணையெழின் மானோக்கின்" என்பதற்கு "மாண்பிணையினது அழகினையுடைய வெருவின நோக்கம் போலும் நோக்கினையும்" (கலி 58:2 உரை) எனவும் வரூஉம் உரைப்பகுதிகள் ஈண்டறியற்பாலன. மானேர் நோக்கி என்றது ஈண்டு உமையம்மை யரை. "மானேர் நோக்கி உமையாள்" "மானேர் நோக்கி உமையாள்பங்கா" (சத 55:85) என பிறாண்டு வருவனவுங் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண ஆளன்- மணாளன் என மருவிற்று. மணாளன்- மணவாளன்; கணவன். "கணவன் கொழுநன் காந்தன் கேள்வன்..... மணவாளன் றன் பெயர்" எனப் பிங்கலந்தையில் (5:191) வருதலும் காண்க. "மானேர் நோக்கி மணவாளா" (குழைத்த 4) என அடிகள் அருளியமையுங் காண்க.

அமரர்- அமர; என்னும் வடசொற்றிரிபு. மரணமில்லாதவர் என்பது பொருள். அமரர்க்கும் என நான்கனுருபும் உம்மையும் விரிக்க, விண்ணவர்க்கன்றி அமரர்க்கும் என எச்சவும்மை. தாயே என்றார் தாய் போலிரங்கி அருள் செய்யுந் தன்மைபற்றி,

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" சிவபுரா 61
"தாயே யாகி வளர்த்தனை போற்றி" போற்றி 87
"தாயிலாகிய இன்னருள் புரிந்த தலைவனை" சத 39
தாயான ஈசற்கே" கோத் 12
"தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்" பூவல் 3
"பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்பரிந்து" பிடித் 9

என அடிகள் பிறாண்டு அருளியமையும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன.

பாரிடை ஐந்து- நிலத்தின் சிறப்புக் குணமாகிய நாற்றமும், ஏனை நீர் தீ வளி வெளி என்பவற்றின் சேர்கையாற் றோன்றிய பொதுக் குணமாகிய சுவை ஒளி ஊறு ஓசை என்பனவுமாம். பரத்தல்- விரிந்து நிற்றல்.

நீரிடை நான்கு- நீரின் சிறப்புக் குணமாகிய சுவையும், ஏனைத் தீ வளி வெளி என்பவற்றின் சேர்க்கையாற் றோன்றிய பொதுக்குணமாகிய ஒளி ஊறு ஓசை என்பனவுமாம். நிகழ்ந்தல்- விளங்குதல் "வளனற நிகழ்ந்து" (பதிற் 49) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

தீயிடை மூன்று- தீயின் சிறப்புக் குணமாகிய ஒளியும், வளி வெளி என்பவற்றின் சேர்க்கையாற் றோன்றிய பொதுக்குணமாகிய ஊறு ஓசை என்பனவுமாம். திகழ்தல்- விளங்குதல். "அயந்திகழ் நறுங் கொன்றை" (கலி 50:1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

வெளியிடை இரண்டு- காற்றின் சிறப்புக் குணமாகிய ஊறும் "ஏனைய விசும்பின் சேர்க்கையாற் றோன்றிய பொதுக்குணமாகிய ஓசையுமாம்.

வெளியிடை ஒன்று- விசும்பின் சிறப்புக்குணமாகிய ஓசை.

"பெண்ணகத் தரையர் காற்றிற் பெருவலி யிருவராகி
மண்ணகத்தைவர் நீரினால்வர் தீயதனில் மூவர்
விண்ணகத் தொருவர் வீழிமிழலையுள் விகிர்தனாரே"
64:6

"மின்னுருவை விண்ணகத்திலொன்றாய்மிக்கு வீசுங்காறன்ன
கத்தி லிரண்டாய்ச் செந்தீத், தன்னுருவின் மூன்றாய்த் தாழ்
புகலினான் காய்த், தரணிதலத்தஞ்சாகி யெஞ்சாத் தஞ்சமன்
னுருவை... வேஊரானைப் போற்றாதே யாற்றநாள் போக்கினேனே"
268:5

"மண்ணதனி லைந்தை மாநீரினான்கை வயங்கெரியின் மூன்றை
மாருதத் திரண்டை, விண்ணதனி லொன்றை.... கற்பகத்தைக்
கண்ணாரக் கண்டே னானே" 274:3

எனத் திருநாவுக்கரசர் தேவாரத்து வருவனவுங் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் நாற்றம் முதலிய ஐந்து பண்புகளையும், நீரிடைச் சுவை முதலிய நான்கு பண்புகளையும், தீயிடை ஒளி முதலிய மூன்று பண்புகளையும், வளியிடை ஊறு முதலிய இரண்டு பண்புகளையும், வெளியிடை ஓசை என்னும் ஒரு பண்பினையும் அமைத்தோன் இறைவனாதலின், "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய்" "நீரிடை நான்காய் நிகழ்ந்தாய்" தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய்" வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய்" வெளியிடை ஒன்றாய் விளைந்தாய்" என்றார்.

அளிபவர்- அன்பினால் மனம நெகிழ்பவர். அளி- அன்பு. "அளிபவருள்ளத் தானந்தக் கனியே" (திருவிசைப்பா, கோயில் 1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அமுதே என்றார் இறைவன் இன்பஞ் செய்தல் பற்றி.

யாவராயினும் அன்பரன்றி யறியொணாமலர்ச் சோதியானாதலின், "கனவிலுந் தேவர்க் கரியாய்" என்றார். "தேவர் கனவிலுங் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள்" (பொற் 16) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. கனவிலும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. "நனவிலும் நாயேற் கருளினை" என்றார் இறைவன் வெளிப்படப் போந்து அருள் செய்தமையின்.

"கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனத் தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சஞ்
சினவேற்கண் நீரமல்கத் தெள்ளேணங் கொட்டாமோ" தெள் 10

என அடிகள் அருளியமை காண்க. நனவிலும் என்ற உம்மை இழிவு சிறப்பு.

(தொடரும்...

## அன்றைய கந்தபுராணமும் இன்றைய ஞானச்சுடரும்

ஆற்றங்கரையானின் அருட்கடாட்சத்துடன் துணிந்து பயணிக்கும் அடியவர் கூட்டத்தில் அடியேனும் ஒருத்திநான். என்னை வழிப்படுத்துகின்ற சந்நிதியானின் அருள்வாக்குகளாக வெளிவரும் ஞானச்சுடர் தனது 18ஆவது அகவையில் கால் பதிப்பதை எண்ணி பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மிகச் சிறந்த முருக பக்தரான கச்சியப்ப சிவாச்சாரியார் ஊடாக கந்தபுராணத்தை எழுதிப் பாடவைத்ததுபோல் இன்று சந்நிதி வேலவன் மோகனதாஸ் சுவாமியுடன் இருந்து ஞானச்சுடர் மலரினை மக்கள் மத்தியில் மலர வைத்து எமது சைவ மக்களை அறநெறியில் வாழ வழிகாட்டுகின்ற அற்புதத்தை நாம் ஞானச்சுடர் மலரின் ஊடாகக் காண்கின்றோம்.

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், விளம்பரங்கள் இல்லாமல் மிகத் துல்லியமாக ஒரு சமூகம் எவ்வாறு வழிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தி வரும் இம்மலரானது பலநூறு ஆக்கங்களுடன் பல நூற்றாண்டு வெளிவர எல்லாம் வல்ல சந்நிதியானைப் பிரார்த்திக் கின்றேன்.

-கணபதி நிறுவனம்-
(உரும்பராய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிற் கல்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இப்பூமியில் காணப்படுகின்ற எல்லா வகைத் தோற்றங்களுள்ளும் மனிதப் பிறவியே அருமையும், பெருமையும், சிறப்பும் வாய்க்கப் பெற்றுள்ளது. தேவர்கள்கூட இறைவனை அடைய வேண்டுமாகில், மனிதப் பிறவி எடுப்பதன்மூலமே எய்தப்பெற முடிகின்றது. இறைவன்மீது அன்பு கொள்வதற்கும், பக்தி செய்வதற்கும், பக்தி வலையில் இறைவனைச் சிக்கச் செய்வதற்கும், மனிதப் பிறவியே வாய்ப்பளிக்கிறது. இதனாலேயே "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று சைவம் கொள்கின்றது.

மனித உறுப்புக்கள், அங்க அடையாளங்களுடன் பிறவியை எடுத்துவிட்டால் மாத்திரம் மனிதனாகிவிடமுடியாது. அது வெறும் மனிதத் தோற்றம்தான். மானிடச் சட்ட சார்த்திய விலங்கு என்றே கொள்ள வேண்டும். மனிதன், மனிதனுக்கே உரித்தான மனிதப் பண்புகளைப் பெற்று, மனித விழுமியங்களை மதித்து வாழும்போது தான் உண்மையான மனிதன் ஆகின்றான். மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அடைகின்றான். மனிதப் பிறவியின் மற்றொரு சிறப்பு, மனிதனால் மட்டுமே வையத்தில் வாழும் நெறியறிந்து, அல்லவை தேய அறம் பல பெருக்கி, வாழ்வாங்கு வாழ முடிகின்றது என்பதாகும். மனித வாழ்க்கை வேறு, விலங்கு வாழ்க்கை வேறு. வாழ்க்கைக் குறிக்கோள்கள் அமைத்து, நெறி முறைகளை வகுத்து, இப்படித்தான் வாழ வேண்டும் என்பதைத் தெளிந்து சீலமுடன் வாழ்வது மனித வாழ்க்கை. இது மிகவும் உயர்வான வாழ்க்கை. எப்படியும் வாழலாம் என்று கொண்டு, வாழ்வின் குறிக்கோள்கள் இன்றி மனம் போன போக்கிலும், புலன்கள் செல்லும் வழியிலும் சென்று, சீரின்றி வாழ்வது விலங்கு வாழ்க்கை. இது தாழ்வான வாழ்க்கை. மக்கள், மனித வாழ்க்கையை வாழப் பழகிக் கொள்ள வேண்டும்; விலங்கு வாழ்க்கையைத் தவிர்க்க வேண்டும். உதாரணத்திற்குக் கூறின் பிறர் நலம்பேணல், தன்னல மறுப்பு என்பன மனிதப் பண்புகள். இவற்றிற்கு எதிர்மாறானவை விலங்கு வாழ்க்கை இயல்புகளாகும்.

மனிதன் மனிதனாகிவிடுவது பெற்ற பிறப்பினால் அன்று; அவன் கற்ற கல்விச் சிறப்பினால் ஆகும். கல்வியை, "கேடில் விழுச் செல்வம்" என்கிறார் வள்ளுவப் பெருமான். கல்விச் செல்வத்தைப் பெற்றுக் கொள்ளாதவன் விலங்குக்குச் சமமாவான். எனவே, கற்ற கல்வியினாலேயே, மனிதன் விலங்குத் தன்மை நீங்கப் பெற்றவனாய், மனிதத் தன்மை உணரப் பெற்றவனாய் விளங்குகின்றான். கல்விச் செல்வத்தைத் தேடி, நாடிப் பெற்றுக் கொள்ளவேண்டிய காலம் ஒருவனின் இளமைப்பருவம், இந்துக்கள், பிரமச்சரியம் என்று குறித்த காலப்பகுதி. இந்த இளமைப் பருவம் கல்வியைக் கசடறக் கற்பதற்குரிய காலம். அரிதான இக் காலத்தைக் கல்விக் காகவே செலவிட வேண்டும். இந்த இளமைப் பருவம், வேறு தீய சக்திகளினால் விரயப்படுத்தாதவாறு, பாதுகாக்கப்பட வேண்டும். சமூக நலனில் அக்கறை கொண்ட அனைவரும் இதில் கவனம் செலுத்துவது கடமையாகும்.

மனித வாழ்க்கையின் மிக முக்கிய பருவம் இளமைப்பருவம். முழு வாழ்க்கைக்கும் அச்சாணி போன்றது இளமைப் பருவம். இப்பருவத்தைத் தொடர்ந்து வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்க்கைக் காலத்தில், வாழும் முறை அறிந்து குடும்பம் நடத்தவும், மன்னுயிர் ஓம்பவும், அதன்பின் முதுமை, மூப்புக் காலங்களில் வாழ்க்கை நெறி உணர்ந்து நிறைவு கொள்ளவும் தேவையான அறிவு, ஆற்றல்கள், மனப்பாங்கு, விழுமியங்கள், அனுபவங்கள் ஆகிய சகலவற்றையும், இந்த இளமைப் பருவத்தில் பெற்றுக்கொள்ளவும் கற்ற கல்வி உதவுகின்றது. எனவே தான், "வாழ்க்கைக்கு உறுதுணையாய் நிற்பது தூய நற்கல்வி" என்றார் திருமூலர். "கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்" என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர். இத்தகைய கல்வி இளமையிலேயே கற்கப்பட வேண்டும் என்ற கருத்தில் "இளமையிற் கல்" என்று எப்பவோ கூறிவிட்டார் தமிழ் மூதாட்டி ஔவையார். எனவே இளமை வீணாக்கப்படலாகாது. பயனுள்ள முறையில் கல்வி கற்பதில் இளமையைச் செலவிட வேண்டும்.

கற்பன கற்றும், அறிவன அறிந்தும், தெளிவன தெளிந்து கொள்ளவேண்டிய அருமையான காலம் மனிதனின் இளமைப் பருவம். இயல்பாகவே, இப்பருவம் சுறுசுறுப்பு, ஆர்வம், உயர்ப்பு, வலிமை, வண்மை நிறைந்த காலம். இயற்கையிலேயே சாதகமான நிலைமைகள் காணப்படும் இளமைப் பருவத்திலேயே உடல்வலிமை, மன வலிமை, அறிவு வலிமை, உணர்வு வலிமை, ஆத்மீக வலிமை ஆகிய ஐவகை வலிமைகளையும் ஒருவன் பெற்றுவிட வேண்டும். கல்வியின் நோக்கமே இந்த ஐந்து வலிமைகளையும் ஒருசேர வழங்குவதுதான். இவற்றுள் ஒன்றின் வலிமையை வழங்காவிடினும் கல்வி பூரணத்துவம் அடையாது. ஒன்றின் வலிமை குன்றினாலும் வாழ்க்கை பூரணத்துவம் பெறாது. "கற்றலும், கற்றவை கேட்பதும், கேட்டதன் கண் நிற்றலும் கூடப் பெறின், மக்கட் பிறவியிலும் ஒரு சீரிய பிறவி இல்லை" என்கின்றார் ஒரு பெரியார். கற்றல், கேட்டல், நிற்றல் என்ற மூன்றும் ஒருங்கு சேர்ந்து நிகழும்போதே, மனிதனின் விலங்குத்தன்மை நீக்கம் பெறுகின்றது; மனிதத்தன்மை அடையப்பெறுகின்றது. சுருங்கக் கூறின், மனிதன் மனிதனாகின்றான். இதனையே சுவாமி விவேகானந்தர், சமயத்தின் மூலமும், கல்வியின் வாயிலாகவும் "மனித ஆக்கம்" செய்யப்பட வேண்டும் என முழங்கினார். இத்தகையோருக்கே மனிதத் தன்மைகள், மனித உணர்வுகள், மனித சுதந்திர உரிமைகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளவும், பேணிப் பாதுகாத்துக் கொள்ளவும் முடிகின்றது. எனவே நிறை மனிதன், சான்றோன் உருவாக வேண்டும். இத்தகைய விழுமிய நிலைக்கு, வித்திட்டு வளர்க்க உரிய பருவம் இளமைக் காலமேயாகும். இளமையை வீணாக்கினால் இவற்றையெல்லாம் அடையமுடியாது. கடந்து விட்ட காலம், கொட்டிவிட்ட பால், விட்டு விட்ட இளமை என்பவற்றை மீளப்பெற முடியாது. இன்று சுடர் மணிகளாகப் பிரகாசிக்கின்ற பல்துறை மேதைகள், தலைவர்கள், அறிஞர்கள், அருளாளர்கள் அனைவரும் முற்கால இளைஞர்கள். அவர்கள் இளமைப் பருவத்தில் செம்மையான வாழ்வினை மேற்கொண்டமையினால் இன்று நன் முத்துக்களாக விளங்குகின்றனர். எனவே இக்கால இளைஞர்களே எதிர்கால மேதைகளாக வரவிருப்பவர்கள். இளமையில் எடுக்கும் முயற்சிகளுக்கு ஏற்பவே எதிர்காலம் அமையப் போகின்றது. இதனை உணர்ந்து, சிந்தித்துச் செயற்படவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி





– வாரியார் சுவாமிகள் –

47\. ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா உலகம் குளிர்வித் தவனே.

## பதவுரை

சீறாவரு- கோபித்து வந்த, சூர் சிதைவித்து- சூரபன்மனை அழித்து, கூறா இமையோர் உலகம்- துன்பத்தைக் கூறி முறையிட்ட தேவர்கள் உலகத்தை, குளிர்வித்தவனே- குளிருமாறு செய்தருளியவரே! ஆறு ஆறையும் நீத்து- முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, அதன் மேல் நிலையை- அவைகட்கு அப்பால் உள்ள அநுபூதியாகிய சாயுச்சிய நிலையை, அடியேன் பேறா- அடியேன் பெறும் பேறாக, பெறும் ஆறு உளதோ- பெற்றுக்கொள்ளுகின்ற வழி எப்போது உண்டாகுமோ!

## பொழிப்புரை

கோபித்து வந்த சூரபன்மனை அழித்து, துன்பத்தைக் கூறி முறையிட்ட தேவர்களின் உலகத்தைக் குளிருமாறு செய்தருளியவரே! முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, அவற்றுக்கு அப்பாலுள்ள அநுபூதி சாயுச்சிய நிலையை அடியேன் பெறும் பேறாகப் பெறுகின்ற வழி உண்டாகுமோ? உண்டாகுமாறு செய்தருளுவீராக.

## விரிவுரை

**ஆறாறையும்:-**

ஆறாறு- முப்பத்தாறு என்பது ஆகுபெயராய் முப்பத்தாறு தத்துவங்களையும் குறிக்கும். மண்முதல் நாதம் ஈறான 36 தத்துவங்கள்.

| | | |
|---|---|---|
| ஆன்ம தத்துவம் | 24 | இது அசுத்த தத்துவம் |
| வித்தியா தத்துவம் | 7 | சுத்தாசுத்த தத்துவம் |
| சிவ தத்துவம் | 5 | சுத்த தத்துவம் |
| | 36 | |

**ஆன்ம தத்துவம்:-**

| | | |
|---|---|---|
| பஞ்சபூதங்கள் | 5 | மண் நீர் கனல் காற்று விண் |
| ஞானேந்திரியங்கள் | 5 | மெய் வாய் கண் மூக்கு செவி |
| கன்மேந்திரியங்கள் | 5 | வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மாத்திரைகள் 5 சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்
அந்தக் கரணங்கள் 4 மனம் புத்தி அகங்காரம் குணம்
24

(குணத்துக்குப் பதிலாக சித்தம் என்று கொள்ளும் ஒரு மரபும் உண்டு)

வித்தியா தத்துவங்கள் 7: காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி.

சிவ தத்துவங்கள் 5: சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதம், ஞானம் மிகுந்து கிரியை குறைந்தது சுத்தவித்தை. கிரியை மிகுந்து ஞானம் குறைந்தது ஈசுரம். இரண்டும் ஒன்றுபட்டது சாதாக்கியம்.

கிரியை நாடல் சக்தி (விந்து), ஞானம் ஒன்றல் சிவம் (நாதம்)
சுத்தவித்தை ஞானமிகும் தொன்மையாம், ஈசுரந்தான்
அத்தன் தொழிலதிகம் ஆக்கியிடும் - ஒத்தல்இவை
சாதாக் கியமென்றும் சத்தி சிவம்கிரியை
ஆதார ஞானஉரு வாம்.

-உண்மை விளக்கம். (21)

எந்த எந்த சமயத்தவர்கள் எந்த எந்த தத்துவங்களை அறிகின்றார்களோ அந்தந்தத் தத்துவத்தின் எல்லை அந்தந்தச் சமயத்தாருக்கு முத்தித்தானமாகும். புறப் புறச் சமயிகளும், புறச் சமயிகளும் மண்முதல் புருட தத்துவம் வரையுள்ள தத்துவங்களை மட்டும் கொண்டு அத்தத்துவங்களில் முத்தித் தானமாகக் கொள்வர்.

ஏகான்மவாதிகள் 25 தத்துவங்களுடன் நிற்பர். சைவ சித்தாந்தம் ஒன்றுதான் 36 தத்துவங்களையும் கண்டு அவற்றைக் கடந்து அப்பாலுள்ள பரமுத்தியைக் கூறுகின்றது.

"ஆறாறுமீதில் ஞானோபதேசம் அருள்வாயே"

-(மாலாசை) திருப்புகழ்.

"பூதமும் கரணம் பொறிகளையும் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிற்குநாள் உளதோ"

-பட்டினத்தார்.

"ஆறாறின் தன்மை அறியா திருந்தேனுக்
காறாறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி
ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆறாறுக் கப்புறம் ஆகிநின் றானே

-திருமந்திரம். (2020)

**பேறா அடியேன் பெறுமாறுளதோ:-**

பேறாக என்ற சொல் கடைக்குறைந்து பேறா என நின்றது. அடியேன் பெறுதற்கரிய பேறு ஆகுமாறு பெறும் வாய்ப்பு உண்டாகுமோ?

"முருகா! பெறுமாறு அருள்செய்" என்று வேண்டுகின்றார்.

**சீறாவருசூர்:-**

சீறா- செய்யா என்ற வாய்ப்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம். சீறி வந்தான் சூரபன்மன். தட்ச யக்ஞத்தில் கலந்து சிவபராதம் அடைந்த மாலயனாதி வானவர்கள், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக 108 யுகங்கள் சூரபன்மனால் துன்புற்றார்கள். இது அண்டத்தில், பிண்டத்திலும் அருளிலாய நன்மையும், மலத்திலாய தீமையும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டுப் போர் புரிகின்றன. முருகனைச் சரணடைந்து தீய குணங்களான அசுரர்களை அழிக்க வேண்டும்.

**இமையோர் கூறா:-**

இமையோர் தாங்கள் அசுரர்களால் பட்ட வேதனைகளை இறைவனிடம் முறையிட்டு வேண்டி நின்றார்கள்.

ஏற்றெழு வன்னிமேல் இனிது துஞ்சலாம்
தோற்றிய வெவ்விடம் எனினுந் துய்க்கலாம்
மாற்றலர் அலைத்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்றரி தலம்இப் புன்மையே.

-கந்தபுராணம்.

**குளிர்வித்தவனே:-**

இமையோருடைய உலகில் அசுரர்களால் வந்த வெப்பத்தை மாற்றி இன்பத்தால் அமரர்களை முருகன் குளிர்வித்தருளினான்.

உலகம் என்பது ஆகுபெயராய் உலகில் வாழ்ந்த தேவரைக் குறிக்கின்றது.

(தொடரும்...

## திருமதி சிவஞானம் சறோஜினிதேவி அவர்களை வாழ்த்துகிறோம்

யாழ் மாவட்டம் வட்டுக்கோட்டையில் பிறந்து திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சிவஞானம் சறோஜினிதேவி அவர்கள் தமது இலக்கிய அறிவினாலும், சமயம் சார்ந்த நூல் வெளியீடுகள் மூலமும், சொற்பொழிவுகள் மூலமும் அனைவரதும் பாராட்டுதலைப் பெற்று வருகிறார். இவரது படைப்புக்கள் யாவும் இலக்கியம், அறிவியல், சமயம் சார்ந்திருப்பது சைவ உலகிற்குக் கிடைத்த பெரும்பேறாகும்.



உள்நாட்டு - வெளிநாட்டு வானொலிகளில் இவர் ஆற்றிவரும் சமய சொற்பொழிவுகள் அனைவரையும் கவருவ தாக உள்ளது. “தினக்குரல்” தினசரிப் பத்திரிகையிலும் “ஞானச்சுடர்” மாதாந்த சமய சஞ்சிகையிலும் இவரது ஆக்கங் கள் பல பிரசுரமாகியுள்ளன.

இவரது சமய இலக்கிய பணிகளைப் பாராட்டி “சைவப்புலவர்”, “சைவ சித்தாந்த பண்டிதர்” போன்ற பல்வேறு பட்டங்கள் வழங்கப்பட்டிருந்தபோதும், அண்மையில் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய “திருமுறை நெறிச்செல்வர்” என்ற பட்டமளிப்பும் கௌரவிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமதி சிவஞானம் சறோஜினிதேவி அவர்கள் நீடூழி வாழ்ந்து தமது சமய இலக்கியப் பணியினைத் தொடரவேண்டுமென சந்நிதியான் ஆச்சிரமம் வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05.12.2014 அன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் எழுத்து வடிவம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

01. ஆரம்பம்

கார்த்திகையில் கார்த்திகை நாளான இன்றைய தினம் சைவநெறி தொடர்பாக உங்களோடு சேர்ந்து சிந்திக்க வைத்த குரு அருளுக்கும் திரு அருளுக்கும் எனது பணிவான வணக்கங்கள். இன்றைய நன்னாளில் சைவநெறி பற்றிச் சிந்திக்க ஒரு வாய்ப்பை அளித்த மோகனதாஸ் சுவாமி அவர்களுக்கு எனது நன்றிகள். மேலும் சந்நிதியான் ஆச்சிரமத் தொண்டர்களுக்கும் இங்கு கூடியிருக்கும் பெரியோர்களுக்கும் விஷேடமாகத் திரு குப்பிளான் சண்முகத்துக்கும் அவரது துணைவியாருக்கும் எனது பணிவான வணக்கங்கள்.

இன்றைய தினம் முருகப்பெருமானுக்கும், சிவபெருமானுக்கும் விசேடமான நாளாகும். எல்லாம்வல்ல பரம்பொருள் நாம் உய்திபெற வேண்டும் என்பதற்காக முருகப் பெருமானாகவும், சிவலிங்கமாகவும் தோன்றிய தினம் கார்த்திகை விளக்கீடு ஆகிய இன்றைய தினம் ஆகும். கந்தபுராணத்தில் முருகன் தோன்றியது பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

"அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகம் உய்ய"

இதேபோலப் பெரியபுராணத்தில் சிவலிங்கம் தோன்றியது பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம்சிவ லிங்கம்
நாணாது நேடிமால் நான்முகனும் தேடநடுச்
சேணாரும் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெரிந்தாராய்"

மோகனதாஸ் சுவாமி அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டபோது எவ்வாறான தலையங்கம் பொருத்தமாக இருக்கும் என அவரிடம் விசாரித்தேன். அவர் "பொதுவான ஒரு தலையங்கம்" என ஆலோசனை கூறினார்கள். உடனே எனக்குப் பெரிய புராணத்தில் உள்ள சாக்கிய நாயனார் புராணத்தின் "செய்வினையும் செய்வானும்...." எனத் தொடங்கும் பாடல் ஞாபகத்துக்கு வர, அதிலுள்ள "சைவநெறி" என்பதையே தலையங்கமாகப் போடலாம் எனத் தெரிவித்தேன்.

"சைவநெறி" என்ற தொடரைப் பெரியபுராணத்தில் இருந்து எடுத்துக்கொண்டுள்ள படியினால் அப்புராணத்தைப் பற்றி முதலில் சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன். தெ.பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பெரியபுராணம் "உலகப் பொது நூல்" என எழுதியுள்ளார். அவர் எழுதிய அக்கட்டுரையில் அவ்வாறு உலகப் பொதுநூல் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதற்கான பல காரணங்களைக் காட்டியுள்ளார். அக்காரணங்களில் இரண்டை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட லாம் என்று நினைக்கின்றேன். ஒன்று, அந் நூல் ஆரம்பத்திலும் இறுதியிலும் நடுவிலும் "உலகெலாம்" என்ற வார்த்தையைக் கொண் டிருக்கிறது. எனவே எல்லா உலகத்துக்கும் எல்லா மக்களுக்கும் பொதுவான ஒரு பேருண்மையை எடுத்துக் கூறுகிறது. அந்தப் பேருண்மையே அப்பாலுக்கு அப்பாலாயுள்ள இறைவன். அந்த உண்மைப் பொருள் ஒன்று தான். அதனை பலர் பல பெயர்களால் அழைக்கின்றனர் என்கிறது வேதம். அதனை "சிவம்" என்ற பெயரால் சேக்கிழார் அழைக் கின்றார். எல்லாவற்றையும் சிவமாகக் கண்டு சிவமயம் ஆகின்ற அடியவர்களைப் பற்றிய புராணம் என்பது இரண்டாவது விடயம். சில ரிடம் இறையருள் கடாட்சம் ஏற்பட்டு அவர் களை மையமாகக் கொண்டு பலர் முன்னேறி சிவமயமாவதை அந்நூல் பேசுகிறது. அப்படி அவர்கள் சில மனிதர்களை மட்டுமன்றி தாங் கள் சென்ற, வாழ்ந்த இடங்களையும் சிவமய மாக்கினார்கள்.

இதேபோல, வச்சிரவேலு முதலியார் அவர்கள் பெரியபுராணத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். அதில் அவர் பெரியபுராணம் ஒரு புராணநூல் மட்டுமன்றி அது ஒரு காப்பிய நூல், நாடகநூல், வர லாற்று நூல், பக்தி நூல், இசை நூல், தத்துவ நூல், கவிதை நூல், நிருவாக நூல், அரசியல் நூல், சமூக நூல், சமய நூல், உளவியல் நூல், அறநூல் எனப் பல்வேறு உதாரணங்களோடு விளக்கியுள்ளார்.

அடுத்து, சாக்கிய நாயனார் புராணத் தில் இருந்து "சைவநெறி" என்ற தலையங் கத்தை எடுத்ததை எண்ணி பௌத்தத்தை விட சைவத்தை மேலானதாகச் சொல்லுவேன் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கக் கூடும். அதனால் நீங்கள் ஏமாறவும் கூடும் என்பதை முதலில் எடுத்துக் கூறிக்கொள்ள விரும்பு கின்றேன். என்னைப் பொறுத்தவரை யில் நான் எல்லாச் சமயங்களையும் ஓரளவு படித்துப் பார்த்துள்ளேன். ஒவ் வொரு சமயத்தினருமே மற்றச் சமயங்களி லிருந்து தத்தம் சமயத்திற்கு மாறிய பல பெரியவர்களை உதாரணம் காட்டித் தத்தம் சமயமே மேலானது என்று எழுதியும் பேசியும் வருகின்றனர். எல்லாச் சமயத்திலும் இருந்து உதாரணம் காட்டமுடியுமாயினும் இப் போதைக்கு பௌத்த சமயத்திலிருந்தே உதாரணம் தருகின்றேன். புத்தர் பெருமான் பிறப்பில் ஒரு இந்து. இந்துவாக வாழ்ந்து இறுதியாகப் பரிநிர்வாணமடையும்போதும் ஓர் இந்துவாகவே பரிநிர்வாணம் அடைந்தார் என்பார் தத்துவ ஞானியாயும், இந்திய ஜனாதி பதியாயும் இருந்த சர்வபள்ளி இராதாகிருஷ் ணன். அது அப்படி அல்ல என்று மறுத்துப் பலர் எழுதியுள்ளனர். சித்தாத்தர் துறவுபூண்டு முதலில் இந்து பிராமணர்களைக் குருவாகக் கொண்டு ஆன்மீக சாதனை முயற்சிகளை மேற்கொண்டு அவற்றால் அடைந்த நிலை திருப்தியளிக்கவில்லை. எனவே தானே முயன்று தனது வழியில் மிக உயர்ந்த பரி நிர்வாண நிலையை அடைந்தார். அவரது வரலாற்றைக் கூறும் பல நூல்கள் உண்டு. அவற்றிலே இவ்விபரம் காணலாம். உதாரண மாக புத்தர் அடைந்த நிலை இந்து சமயத் தில் கூறும் உபநிடதங்கள் காட்டும் முத்தி யைவிட எவ்வளவோ உயர்ந்தது என்று எழுதியுள்ளார்கள். இதேவேளை அவ்வாறான ஒரு வரலாற்றில் வருகின்ற ஒருகதை மிகப் படிப்பினை உள்ளதால் அதனையும் இவ்விடத் தில் கூறலாம் என்று தோன்றுகிறது. புத்தர் ஞானம் பெற்றபின் ஒரு கிராமத்தினூடாகச் சென்று கொண்டிருந்தார். அக்கிராமத்துப் பிரா மணன் ஒருவன் அவரைத் தகாத வார்த்தை கள் கூறித் திட்டிக் கொண்டிருந்தான். அவர் மிக அமைதியாக அவற்றைக் கேட்டுக் கொண்டே சென்றார். பிராமணன் களைத்துப் போய் தனது திட்டலைக் குறைத்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது புத்தர் அவனைக் கருணை யுடன் பார்த்து "நான் மீண்டும் இவ்வழி யிலேயே திரும்பி வருவேன்; நீ ஆயத்தப் படுத்தி அப்போதும் திட்டுவாயாக" என்றார். உடனே அந்தப் பிராமணன் வெட்கமடைந்து "நீங்கள் சற்றும் கோபிக்காமல் எவ்வாறு அப்படிச் சொல்ல முடிந்தது" என்று திருப்பிக் கேட்டான். அதற்கு அவர் "நீ ஒருவனுக்குப் பிச்சை என்று ஒரு ரூபாய் கொடுக்க அதனை அவன் எடுக்காவிடில் என்ன செய்வாய்! என்று கேட்டார். அவன் தான் அதைத் திருப்பி எடுத்துக் கொள்வேன் என்று பதில் அளித் தான். உடனே புத்தர் "நானும் அப்படியே உனது திட்டுதல்களை ஏற்றுக்கொள்ள வில்லை'' என்று கூறினார். பிராமணன் முன்பைவிட மேலும் வெட்கம் அடைந்தான்.

நான் சமய நூல்களைக் கற்கும்போது எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான விட யம் எதுவாக இருக்கும் என்று சிந்தித்ததுண்டு. ஒரு தடவை "21ஆம் நூற்றாண்டில் சமயங் கள்" என்ற ஆங்கில நூலை வாசிக்க நேர்ந்த போது அதற்கான விடை கிடைத்தது. அந் நூலாசிரியர் எல்லா முக்கிய மூல சமய நூல்களிலும் இருந்து எங்கெங்கே அந்த விடயம் சொல்லப்பட்டிருக்கிறது என்று சான்று களைத் தந்திருந்தார். நீங்கள் அதனைக் கேட்க ஆவலுள்ளவர்களாக இருப்பீர்கள். ஆதலால் அதனை இப்போ கூறுகிறேன்.

"நீ மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக்கூடாது என்று நினைக்கிறாயோ அதை முதலில் அவர்களுக்குச் செய்யாதே". என்பதே அந்த விடயமாகும். இத னைக் கேட்டதோடு மட்டும் நிறுத்தி விடாதீர்கள். அதனை நடைமுறைப் படுத்த மறவாது என்றும் கடைப்பிடித்து வருவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

எல்லாச் சமயத்திலும் நல்ல விடயங் களும் உண்டு; பொருந்தாத விடயங்களும் உண்டு. சமயம், சமய தத்துவம் என்பது நாம் ஆன்மீகத்தில் முன்னேற ஒரு கருவி மட்டுமே. அதற்கு நான் ஓர் உதாரணம் கூறலாம் என்று நினைக்கின்றேன். ஆகாய விமானம் ஆகாயத்தில் பறக்குமுன் ஓடு பாதையில் ஓடுவதைப் பார்த்திருப்பீர்கள். உயரப் பறந்ததும் அதற்கு ஓடுபாதை தேவை யில்லை. இறங்கும்போது தேவைப்படும். இப் படியே ஆன்மீகத்தின் மிக உயர்நிலைக்குப் போக ஒரு வழி மட்டுமே சமயம். அதனை விட்டாலே உயரப் போகலாம். உண்மையான ஞானிகள் எந்தச் சமயத்தையும் சார்ந்தவர்கள் அல்லர். அதனை அவர்கள் கூறி வைத்த நூல்களிலே தேடினீர்களாயின் காணலாம். ஆனால் அவர்களும் சமயங்களுக்கு எதிராகச் செயற்பட்டிருக்கிறார்களே என்று எல்லாச சமயங் களில் இருந்தும் உதாரணங்கள் காட்டலாம் என்று எண்ணுவீர்கள். அது காலத்தின் கோளாறு என்று பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கூறியதையே இங்கு கூற முடியும். குற்றங்களை விட்டுக் குணம் கொள்ளுவது எங்கள் ஒவ்வொருவரையும் பொறுத்தது.

(தொடரும்...

## எல்லாம் அவன் செயல்

ஒவ்வொரு நாளும் மாலையில் சூரியன் அஸ்தமிப்பதை அனைவரும் பார்க்கிறார்கள். அவ்விதம் பார்க்கும்போது அன்றைய பகல் முடிந்து, இரவு வந்துவிட்டது என்று மட்டும் நினைக்கிறார்கள். ஆனால் அந்த மாலையுடன் தனது ஆயுளில் ஒரு நாளை மரணத்தை நெருங்கியிருக்கிறோம் என்ற உண்மையை நினைத்துப் பார்ப்பதில்லை. காலம் என்ற சக்கரம் வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. காலன் ஒருவன் நமது கணக்கைக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பதையும், குறுகிவரும் ஆயுட்காலத்தில் நற்செயல்களைச் செய்து புண்ணிய பலன்களைச் சேமித்துக்கொள்ள வேண்டும் என்பதையும் மனிதன் உணர்வதில்லை.

-அருள்ஒளி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று எமது சமயநிலை

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

பாமர மக்களைப் பண்புள்ளவராகவும், பண்புள்ளவர்களைத் தெய்வமாகவும் மாற்றுவது சமயம். இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும். அந்தச் சமயத்தில் அந்தந்தக் கால கட்டத்தில் பல அவதார புருஷர்கள் தோன்றி சமயத்தை வளர்த்தார்கள். இறைவன் மீது பல பதிகங்கள் பாடி, அற்புதங்கள் பல செய்து, தலங்கள் தோறும் யாத்திரைகள் மேற்கொண்டு தலங்களைச் சிறப்பித்து மக்களிடையே சமயத்தைப் பரப்பினர்.

உலகிலே நம் இந்து சமயத்திலே தான் ஏனைய மதங்களைவிட ஞானிகள், மகான்கள் தோன்றியுள்ளனர். இந்த மகான்கள் மனிதருள் மறைந்திருக்கும் தெய்வீகத்தை சொற்பொழிவுகள் மூலமாகவும், நூல்கள் பல எழுதியும் பணி செய்துள்ளனர். மகாத்மா காந்தி, விவேகானந்தர், நாவலர் ஐயா போன்றவர்கள் உதாரணமானவர்கள்.

நம் இந்து சமய வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் நாவலர் ஐயா அவர்களே. ஆங்காங்கு திண்ணைப் பள்ளிக்கூடங்கள் அமைத்து பிள்ளைகளைச் சேர்த்து தகுதியான ஆசிரியர்கள்மூலம் கல்வியோடு சமய அறிவையும் வளர்த்தவர்கள். மாணவரின் கல்வி வளர்ச்சிக்காக சமயப் பாடசாலைகளை நிறுவியவர். நாவலர் பாடசாலைகள் இன்றும் இயங்குகின்றன. சைவ வினாவிடை, பாலபாடம், சிறுவர்கட்கான புத்தகங்களை அச்சியந்திரசாலை அமைத்து வெளியிட்டவர் ஐயா அவர்கள். இந்தியாவிலிருந்து ஓதுவார்களை அழைத்து திருமுறைகளைப் பண்ணோடு பாடச்செய்ததோடல்லாமல் சமயப் பிரசங்கங்கள், புராண படனங்கள் செய்வித்ததன் பயனாக மக்களை விழிப்படையச் செய்தவர். கொடிய பஞ்ச காலம் நிகழ்ந்தபோது வீடுகள் தோறும் பிடியரிசி சேர்த்துக் கஞ்சித்தொட்டித் தருமம் செய்தவர். ஐயாவுடைய நற்பணிகளால், மக்கள், இளைஞர், சிறியோர் கவரப்பட்டு அவருடைய தூய வாழ்க்கையையும், பணிகளையும் பின்பற்றினார்கள். நாவலர் சமயம் வளர்க்க எண்ணினார்; தமிழும் கூடவே வளர்ந்தது. யாழ்ப்பாணக் கலாசாரம் சைவமும் தமிழுமே.

ஐயாவின் வழியில், மௌன தவ முனிவர், திரு கைலாசபதி (உப அதிபர்)யின் அருகிருந்து உபதேசங்களும், ஞானமும் பெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசானாக இருந்தபோது (நைஷ்டிகப் பிரம்மசாரியாராக) தான் வாழ்ந்த சைவாசிரிய கலாசாலை வீதியில் அமைந்த இல்லத்தில் மாலை நேரங்களில் பல அறிஞர்கள், மாணவர்களைச் சேர்த்து ("ஈரப்பலாச்சங்கம்" என்பது அதன் பெயர்) தமிழுடன் சமயமும் போதித்துப் பல பண்டிதர்களை உருவாக்கியவர்..

சைவாசிரியரைப் பயிற்றுவிக்க ஆசிரிய கலாசாலையை அமைத்து வருடாவருடம் ஐம்பது ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை ஹின்டுபோட் இராஜரட்ணம் ஐயாவைச் சேரும்.

இன்றைய நிலையை நோக்குவோம். நம் முன்னோர்கள் ஆசார சீலர்களாக, கடவுளுக்குப் பயந்தவர்களாக, நீதி தர்மம் தெரிந்தவர்களாக, பெற்றோரை, ஆசிரியரை தெய்வமாக மதித்து நடந்தார்கள். அவ்வாறே தம் பிள்ளைகளையும் சந்ததியினரையும் ஒழுகச் செய்தார்கள். இன்று கடவுள் யார்? எங்கே இருக்கிறார்? விபூதி ஏன் பூச வேண்டும்?

மூடனுக்கு உபதேசித்தல் நட்டம் வருவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்கும் காலம். இன்றைய தலைமுறையில் ஞானிகள், யோகிகள், தவ சிரேஷ்டர்கள், மகான்களை அண்டி ஆசிபெற்று அவர்கள் வழியைப் பின்பற்றி நடக்க வாய்ப்பில்லை. ஏன், சினிமா, தொலைக் காட்சி, கைபேசி, களியாட்டம் எனப் பொழு தைக் களிக்கிறார்களேயன்றி சான்றோர்களின் சொற்பொழிவுகள், உபந்நியாசங்களைக் கேட் கவோ, புராண இதிகாசங்கள், திருமுறைகள், சமய இலக்கியங்களைப் படிப்பதற்கோ நேர மும் இல்லை. விருப்பமுமில்லை.

ஆலய தரிசன விதிகள் பற்றி நாவல ரவர்கள் விரிவாகச் சொல்லியுள்ளார். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையாக அமைந்த சிறிய கோயில்களுமுண்டு பெரிய கோயில் களும் மடாலயங்களும் நம் நாட்டில் நிறைய உண்டு. முற்காலத்தில் எந்தக் கோயிலா யினும் மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதாக இருந்தது. மக்கள் கடவுளுக்குப் பயந்தனர். பஞ்சமா பாதகங்களை தவிர்த்தனர். ஆலயம் புனிதமாக இருந்தது. இன்று சிறிதேனும் பய மின்றி கன்னக்கோலிட்டு கர்ப்பக்கிருகத்துள் புகுந்து விக்கிரகத்தைப் புரட்டி பொன் தகடு, சுவாமியின் ஆபரணங்கள், பூசைப் பாத்திரங் கள் உண்டியல் பணம் யாவற்றையும் அப கரித்துச் செல்கிறார்கள்.

நம் முன்னோர்கள், பண்புள்ளவர்களாக, ஒழுக்கசீலர்களாக மும்மணிகட்கு (மாதா, பிதா, குரு இவர்களே தெய்வம்) பயந்தும் பணிந்தும் நடந்தார்கள். தமது பிள்ளைகட்கு, நல்ல பழக்க வழக்கங்களை, ஒழுக்கமான வாழ்க்கைமுறை, தெய்வ வழிபாடு தான தருமங்கள், பெற்றோர் பெரியோரை மதித்தல், சிவனடியாரை மதித்தல் போன்றவற்றை எடுத் துச் சொல்லி தாமும் முன்மாதிரியாக வழி காட்டி நடந்தனர்.

ஆலயங்கட்கு பிள்ளைகளைக் கூட்டிப்போய் வழிபாட்டு முறைகள், ஆலயத் தில் செய்யவேண்டுவன தகாதன பற்றி எடுத்துச்சொல்லி அவ்வழி ஒழுகச் செய்தனர். ஆலயங்களில் நடைபெறும் பூசை கள், விழாக்கள், தேர், தீர்த்தம், கூட்டுப் பிரார்த்தனை, பஜனை. சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம், விசேஷ நிகழ்வுகளுக்குக் கூட்டிச் சென்று சமய நிகழ்வுகள் பற்றிய அறிவை வளர்த்தனர்.

இன்றைய அவசர உலகில் பணம் தேடும் நோக்கில் தாய் ஒருபுறம், தந்தை ஒரு புறம் வேலைக்குப்போக, நல்லது கெட் டது அறியாத பிள்ளைகள் தம்வழி போகிறார் கள். மாலையாகி வீடுவந்தும் பிள்ளைகளில் கரிசனை காட்டுவதில்லை. தொலைக்காட்சி யில் நாடகம் பார்ப்பதே தொழிலாகிறது. நாகரிக மோகம் மிகுந்து நம் இந்துக் கலா சாரம், பண்பாடுகள் அருகி வருகின்றது. அநியாயங்கள், அக்கிரமங்கள், ஊழல்கள், பஞ்சமா பாதகங்கள் யாவும் நம் இந்துசமயத் தில் தவிர்க்கப்பட்டவை. நம் முன்னோர் காலத்தில் தெய்வ வழிபாடு, பெரியோரை மதித்தல், தான தருமங்கள், சிவனடியார் களை ஆதரித்தல், வழிப்போக்கன் இளைப் பாற மடங்கள் கிணறுகள் அமைத்தல், மிருக சாதிகள் நீர் அருந்த தொட்டிகளில் நீர் நிறைத்து ஆவுரோஞ்சுகல், மக்கள் சுமைகளை இறக்கி வைக்க சுமை தாங்கிகள் அமைத் தனர். இன்றைய பண்பாடு அவ்வாறில்லை. சமயாசாரசீலர் என்ற வரிசையில் ஆலயங் களில் மாலை மரியாதை பொன்னாடை. சமயம் வளர்க்கிறார்களாம். அந்தக் காலத் தில் கவிஞர்கள், புலவர்கள், அரசர்கள், வள்ளல்களிடம் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடி பொன்னாடையும், பொற்கிழியும் பெற்றுச் சென்றனர். நாயன்மார்கள் தலங்கள்தோறும் சென்று பதிகங்கள் பாடி இறைவன் பெருமை களையும் அருட்செயல்களையும் எடுத்துச் சொல்லி மக்களை நெறிப்படுத்தினர்.

நம் இந்து சமயத்தில் பிராமணோத் தமர்களுக்கு உயரிய மதிப்பு மரியாதை தெய்வத்திற்குச் சமன். மக்களுடைய பிரச் சினைகளை பாராளுமன்றம் ஜனாதிபதியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் சென்று தீர்வு காணும் பிரதிநிதிகள் போல மக்களை இறை வனோடு தொடர்புபடுத்தி இறைவனின் அருளை கருணையைப்பெற வைப்பவர் அவர்களே. தெய்வ சாந்நித்தியம் மிக்க ஆல யத்தினுள் வைத்து பொன்னாடை போர்த்தி மாலை மரியாதை செய்யுமளவுக்கு கலாச் சாரம் மாறிவிட்டது. இவ்வுபசாரங்களை ஆலயத்துக்கு வெளியே மேடையமைத்துச் செய்யலாம். ஆலயங்கள் ஆகம விதிப்படி இயங்க வேண்டும்.

இன்று சில பல ஆலயங்கள் காட்சிச் சாலைகளாகவும், கேளிக்கை மையங்களாக வும் ஆகிவிட்டன. ஆலயங்களினுள்ளே நடக் கும் அநாசாரங்களைப் பார்ப்போம். ஆலய தரிசனவிதி பற்றி நாவலர் ஐயா சொல்லி யுள்ளார். யாத்திரைக் கோஷ்டிகள், கல்லூரிப் பெண்கள் (பிறமதத்தவர்) கூட்டமாக வரு கிறார்கள். குளித்து தோய்ந்து உலர்ந்த ஆடையணிந்து வருகிறார்களா? ஆசௌச மான இடங்களுக்குச் சென்று வந்தனரா? அவர்களில் எத்தனைபேர் விலக்கானவர்கள்- விலக்க வேண்டியவர்கள் யார்? என யாருக் குத் தெரியும்? இப்படிச் செய்வது சரியல்ல வென்பது தெரியாது.

பல ஆலயங்கள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கானவர்கள் வருகிறார்கள். பக்திப் பரவசமாக வழிபாடு செய்பவர் பலர். சிலர் வேடிக்கை பார்க்க வந்து கேளிக்கை யில் ஈடுபடுகிறார்கள். மணியோசை, சங்கொலி, அர்ச்சகரின் மந்திர உச்சாடனம் கர்ப்பூர தீபம் ஒருபுறம்; கைத்தொலைபேசி குறுந்தகவல் கிண்டலடித்தல் இப்படியானவை ஆலயத்தில் செய்யத்தகாதன. ஆகமவிதிப்படி ஆலய நிகழ்வுகள் நடக்குமாயின் தெய்வ சாந்நித்தியம் கூடும். "தெய்வம் சீறின் கைதவம் மாளும்" இன்று நாட்டில் நடை பெறும் அநர்த்தங்கள், சுனாமி, வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, பூமியதிர்வுகள் ஏன் நடக்கின்றன. சினிமாப் பாணியில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தந்தை பிள்ளை சிறுவர் முதியோர் என்ற பாகுபாடு இல்லை. கணவன் மனைவியை, மனைவி கணவனைக் கொன்று புதைத்தல் இப்படியான விபரீதங்கள் நிகழ்கின்றன. ஆலயங்களிலே உண்டியல் உடைபடுகின்றன மூலவரின் விக்கிரகத்தைப் புரட்டுகிறார்கள். வாகனங்களை உடைக்கிறார் கள். சுவாமியின் மூர்த்தி கரம் போய்விட்டதா வென மக்கள் கேட்கிறார்கள். "முற்பகல் செய்ய பிற்பகல் விளையும்" "ஓடி மீள்கென ஆடல் பார்த்திருப்பவர் இறைவன்". இப்படிப் பட்ட துஷ்டர்களை துஷ்டச் செயல்களைச் செய்யத்தூண்டி காலம் வரும்போது விபத்துக் கள், விபரீதங்கள் கொடுத்து தம் பிழைகளை உணர்த்துகிறார். இந்துமதம் பஞ்சமா பாதகங் களை தவிர்க்க வலியுறுத்துகிறது. ஆனால் இன்று அவை தலைகீழாய்விட்டது. கடவுள் யாவற்றையும் கணித்துக்கொண்டிருக்கிறார். பல அனர்த்தங்கள் அழிவுகள் வந்தும் உணர் கிறார்களில்லை.

நமது சமயம் வாழ்க்கை முறையின் மூலம் வரையறுக்க முடியாது. சமயம் வாழும் வழியைக் காட்டுகிறது. அதனால் அதன் பண்பை வாழ்ந்துதான் அறியவேண்டும். ஒரு இந்து நல்லவனாக வாழவேண்டிய பண்பு களை இந்து மதம் எடுத்துக் கூறுகிறது.

**ஆன்மீகச் சிந்தனை**


கஷ்டங்களும், தடைகளும் அதிகமாக இருக்கும்போதுதான் விடாமுயற்சியும் அதிகம் தேவைப்படுகிறது. இறைவனது கருணையால் எல்லாம் சாதகமாகவே அமைகின்றன. இறைவனைச் சரணடைந்து அவனது நினைவில் நாட்களை கழித்து வாருங்கள். அதனால் எல்லா நலன்களும் உண்டாகும். இதில் சந்தேகம் இல்லை. மேலும் மனமுருகிப் பிரார்த்தனையும் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 18. சார்ந்ததன் வண்ணமாதல்

இருளில் இருளாகி எல் இடத்தில் எல் ஆம்
பொருள்கள் இலதோ புவி.

**பொருள்:**

இருள் உள்ளபோது இருளேயாகியும், ஒளி வந்தபோது ஒளியேயாகியும் இவ்வாறு சார்ந்ததன் வண்ணம் ஆகின்ற பொருள்கள் இவ்வுலகில் இல்லையோ?

**சொற்பொருள்:**

இருளில்- இருள் உள்ள காலத்தில், இருளாகி- இருளேயாகியும், எல் இடத்தில், ஒளி வந்த பொழுதில், எல் ஆம்- ஒளியேயாகியும், பொருள்கள்- இங்ஙனம் சார்ந்ததன் வண்ணம் ஆகின்ற பொருள்களை, புவி- இவ்வுலகம், இலதோ- உடையதாய் இல்லையோ?

**விளக்கம்:**

உயிர் எதனை எதனைச் சார்கிறதோ அதன் அதன் தன்மையைத் தன் தன்மையாகக் கொள்ளும். உயிர் சார்தற்குரிய பொருள்கள் இரண்டே. அவை சத்து, அசத்து என்பன. சத்து என்பது சிவம். அசத்து என்பது பாசம். உயிர் சத்தாகிய சிவத்தைச் சார்கிறபோது சிவத்தின் தன்மையைப் பெற்றுச் சிவமாகவே நிற்கும். "நாம் ஒழிந்து சிவமானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்னும் அனுபவ மொழி இதனை உணர்த்தும். சத்தைச் சார்தலின்றி அசத்தாகிய பாசத்தைச் சார்கிறபோது பாசத்தின் தன்மையைப் பெற்றுப் பாசமாகவே இருக்கும். இவ்வாறு உயிர் இரு தன்மையும் உடையதாய் நிற்கும் என்று முந்திய செய்யுளில் உணர்த்தினார் ஆசிரியர்.

அதனை ஏற்காது மறுப்போர் பின்வருமாறு கூறுவர். சத்து, அசத்து என்னும் இருவகைப் பகுப்பே உள்ளன. பொருள்கள் யாவும் இப்பாகுபாட்டில் அடங்கி நிற்பன. அம்முறையில் உயிரைச் சத்து என்று சொல்ல வேண்டும்; அல்லது, அசத்து என்று சொல்லவேண்டும். இவ்விரண்டினுள் ஒன்றாய் நில்லாமல், உயிர் இவ்விரண்டின் தன்மையும் உடையதாய் நிற்கும் என்றால் பொருந்தாது என அவர்கள் கூறுவர். அவர்களுக்கு விடையாக இச்செய்யுளைக் கூறுகின்றார் ஆசிரியர்.

இருவகைப்பட்ட தன்மைகளை அடைகிற பொருள்கள் உலகில் பல உண்டு. எடுத்துக் காட்டாகக் கண், பளிங்கு, வானம் ஆகிய பொருள்களைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் இரவு நேரத்தில் இருளைச் சார்ந்து இருளாய் நிற்கும். ஒளி வந்த காலத்தில் அவ்வொளியைப் பெற்று ஒளியாய் நிற்கும். அவ்வாறே பளிங்கு இரவில் இருளைக் கவர்ந்து இருள் வடிவாகவே இருக்கும். பகலில் சூரியவொளியைக் கவர்ந்து ஒளிவடிவாய்த் திகழும். அதுபோல வானம் இரவு நேரத்தில் கரிய இருள் சூழ்ந்து இருளாய் விளங்கும். பகலில் சூரியனின் பொன்னொளியைப் பெற்று ஒளிமயமாய் விளங்கும்.

இப்படிக் கண் முதலிய பல பொருள்கள் இருளில் இருளாகியும் ஒளியில் ஒளியாகியும் இரு மாறுபட்ட தன்மைகளை உடையனவாய் நிற்பதை அனுபவமாகப் பார்க்கிறோம். அவற்றைப்போல உயிரும் தம்முள் மாறுபட்ட சத்தையும் அசத்தையும் சார்ந்து அவ்விரண்டின் தன்மைகளையும் அடையக் கூடியதாய் உள்ளது.

சத்து என்பது உயர்ந்தது. அசத்து என்பது இழிந்தது. உயிர் அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட பொதுமைப் பொருளாகும். இடைப்பட்டதாய் நிற்பதால் அவ்விரண்டையும் சார்தற்கு உரியதாகின்றது; அவ்விரண்டின் தன்மையையும் பெறுவதாகின்றது; சார்ந்த தன் வண்ணமாய் நிற்பதாகின்றது.

இங்ஙனம் இச்செய்யுளில், சார்ந்ததன் வண்ணமாகின்ற பொருள்கள் இவ்வுலகில் இல்லையோ எனக் கேட்டு, அவை உண்டு என்பதை வலியுறுத்தி, அங்ஙனமே உயிரும் ஆணவ இருளோடு கூடி அறியாமையுற்றும் திருவருள் ஒளியோடு கூடி நல்லுணர்வு விளங்கியும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பது என உணர்த்துகிறார் ஆசிரியர்.

### 19. ஆன்ம அறிவுக்கு கூகையின் கண் உவமை

ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
யாம்மன்கண் காணா தவை.

**பொருள்:**

கூகையின் கண் பகலில் சூரியவொளியில் கலந்து நின்றாலும் அவ்வொளியை அறியாது இருள் வயப்பட்டிருக்கும். அதுபோல, அநாதியில் உயிர்கள் பேரறிவாகிய திருவருள் ஒளியோடு கூடியிருந்தும் அவ்வொளியை அறியாதனவாய் ஆணவ இருளின் வயப்பட்டு இருளாய் நிற்கும்.

**சொற்பொருள்:**

மன்- இறைவனது, கண்- பேரறிவாகிய திருவருளை, காணாதவை- (அதனோடு அநாதியே கூடியிருந்தும்) அறியாது நிற்கும் உயிர்கள், ஊமன் கண்போல- கூகையினது கண் சூரியனது ஒளியிற் கலந்து நின்றாலும் அதனை அறியாது நிற்பதுபோல, ஒளியும்- ஒளியிடத்தும், இருளே மிக ஆம்- அறியாமையிருளில் மூழ்கி இருளாயிருக்கும் தன்மையையே மிகப் பெற்றிருக்கும்.

**விளக்கம்:**

**திருவருளை உணராமை:**

உயிர்கள் முதலிலேயே திருவருளோடுதான் கூடியுள்ளன. ஆயினும் அத் திருவருளை உணரமாட்டாமல் உள்ளன. அதற்கு என்ன காரணம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை நோக்க உயிர் பருப்பொருளாகும். உயிரினது அறிவு பரு அறிவாய் நிற்றலின் நுண்ணிய அறிவாகிய திருவருளை அது முதலிலேயே பற்றமாட்டாதாயிற்று.

உயிர் யாதொரு பொருளையும் யாரொருவர் உணர்த்தினாலும் அதனைச் சிறிது சிறிதாக அறியுமேயன்றி ஒருங்கே முழுதுமாக அறியமாட்டாது. படிமுறையில் பலகாலும் மெல்ல மெல்ல அறிந்தே முடிவில் நுண் பொருளை அறிய வல்லதாகும். இத்தன்மையையுடைய தாகிய உயிரறிவு நுண்ணியதாகிய திருவருளை முதலிலேயே பற்றமாட்டாதிருப்பதிலே என்ன வியப்பு? இப்படிப்பட்ட சிற்றறிவுடைய உயிரை ஆணவமலம் மறைத்துக்கொள்ளுதல் அன்றே ஏற்பட்டது. எனவே உயிர்களுக்கு இயல்பிலே உள்ள அறிவுக் குறைபாடும் அதனால் வந்த மல மறைப்புமே அவை திருவருளை உணராமைக்குக் காரணம் எனலாம்.

அறிவுக் குறைபாடே பக்குவமின்மை எனப்படும். இயல்பிலேயே பக்குவமின்றி நிற்பன வாகிய உயிர்கள் அது காரணமாக அநாதியே சத்தோடு (திருவருளோடு) கூடி நின்றும் சத்தில் அழுந்திச் சத்தாய் நில்லாது, அசத்தாகிய ஆணவத்தைச் சார்ந்து அதன் வண்ணமாய் அசத்தாய் நின்றன என அறியலாம்.

**ஊமன் கண்:**

அநாதியே திருவருள் உடனிருந்தும் அதனைச் சார்தலின்றி இருளில் அழுந்திய உயிரின் அறிவிற்குக் கூகையின் கண்ணை உவமை கூறினார் ஆசிரியர்.

ஊமன் என்பது கூகையைக் குறிக்கும் ஓர் அரிய சொல். "அரை யிரவில் ஊமன் பாராட்ட உறங்கிற்றே" என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுள் அடியில் (செ:66) இச் சொல்லாட்சியைக் காணலாம்.

**மன் கண்:**

கண்- அறிவு.

மன் என்பதற்குத் தலைவன் என்பது பொருள். "வானாடர் காணாத மன்" என இச் சொல்லை இப்பொருளில் ஆசிரியர் ஆண்டுள்ளார். தலைவனாகிய இறைவனது அறிவு மன் கண் எனப்பட்டது. இனி, மன் கண் என்பதற்கு நிலைபெற்ற பேரறிவு என்றும் பொருள் கூறலாம்.

"ஊமன் கண்ணிற்குப் போல, மன் கண் காணாதவற்றுக்கு ஒளியும் மிக இருளே யாம்" என அமைத்துக் கொள்ள வேண்டும்.

**இச் செய்யுளை இங்கு வைத்த முறைமை:**

உயிர்கள் திருவருளை உணரா என்ற இக் கருத்தை இனிவரும் அதிகாரமாகிய "அருளது நிலை"யில் பல செய்யுட்களில் கூறியுள்ளார். உணர்வை உணரா உயிர், புரையை உணரா புவி என அங்கே ஆசிரியர் கூறியுள்ளமை காணலாம். அக்கருத்தே பட, மன் கண் காணாதவை எனவும், ஒளியும் மிக இருளே யாம் எனவும் கூறுவதாகிய இச்செய்யுளையும் அவ்வதிகாரத்தில் வைப்பதுதானே முறை? அவ்வாறு செய்யாமல் இச்செய்யுளை இவ்வதிகாரத்தில் வைத்தது என்ன காரணம் பற்றி? என்னும் வினா சிந்திப்போர் உள்ளத்தில் எழாமற் போகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் உடம்போடு கூடாமல், பிறவிக்கு வராமல், இருந்த அம் முதல் நிலை அநாதிநிலை எனப்படும்; தத்தமக்கு ஏற்ற உடம்பினைப் பெற்றுப் பிறவியெடுத்த நிலை சகல நிலை எனப்படும். அநாதி நிலையில் ஆணவமாகிய இருள் உயிர்களை மறைத்து முழு அறியாமையை உண்டு பண்ணும். சகல நிலையில் இவ்விருள் உயிர்களுக்கு விபரீத உணர்வாகிய மயக்க உணர்வை உண்டுபண்ணும்.

இவ்விரு நிலைகளுள் சகல நிலைபற்றி வரும் மயக்கவுணர்வையே அருளது நிலை என்ற அதிகாரத்தில் எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். மயக்க உணர்வால் திருவருளை மறந்த சிறுமையையே உணர்வை உணரா உயிர், புரையை உணரா புவி, என அங்கே விளக்கிச் சொல்லுகிறார்.

அநாதியில் உயிர்கள் ஆணவ இருளில் அழுந்தி அறியாமையாய் நின்று திருவருள் ஒளியை உணராத சிறுமையையே ஊமன் கண்ணை உவமை காட்டி இச்செய்யுளில் விளக்க முற்படுகிறார் ஆசிரியர். கூகையினது கண் இயல்பான அதன் அமைப்பினால் பகலில் சூரியவொளியைக் காணமாட்டாமல் இருளில் நிற்கிறது. அதுபோல உயிர்களும் அவற்றினது அறிவு நிலையில் இயல்பாக உள்ள குறைபாட்டினால் நுண்ணிய திருவருள் ஒளியைப் பற்றமாட்டாமல் இருளில் அழுந்தி நிற்பன ஆகின்றன. இதனால், உயிர்களின் அறிவுநிலை பற்றியும், அது காரணமாக அநாதியே இருளில் அழுந்தித் திருவருளை உணர மாட்டாது நிற்கும் சிறுமை பற்றியும் கூறுவதாகிய இச்செய்யுளை உயிர்களின் இயல்பு பற்றியதாகிய இவ்வதிகாரத்தில் வைத்தது பொருத்தமே என்பது விளங்கும்.

எனவே, பொதுவாக நோக்கும்போது இச்செய்யுளின் கருத்தும், அருளது நிலையில் உள்ள செய்யுட்களின் கருத்தும் ஒன்றுபோலத் தோன்றினாலும் இச் செய்யுளின் உட்கிடை வேறு; அவற்றின் உட்கிடை வேறு.

அருளது நிலை என்ற அதிகாரத்தில், சகல நிலையில் உயிர்கள் மயக்கவுணர்வில் அழுந்தியதால் திருவருளை உணராமை கூறப்பட்டது. இச்செய்யுளில், அநாதி நிலையில் உயிர்கள் அறியாமையில் அழுந்தியதால் திருவருளை உணராமை கூறப்பட்டது. இச்செய்யுளில், அநாதி நிலையில் உயிர்கள் அறியாமையில் அழுந்தியதால் திருவருளை உணராமை கூறப்பட்டது. இவ்வாறு வேறுபடுத்தி உணர்ந்துகொள்ள வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், "ஊமன் கண்" என்னும் இச் செய்யுளை அருளது நிலை என்ற அதிகாரத்தில் வைக்காமல் இங்கு வைத்த ஆசிரியரின் கருத்தும், முறைமையும் இனிது விளங்குவதாகும்.

(தொடரும்...

## ஆன்மீகச் சிந்தனை

நம்மால் இயன்ற உதவியை மற்றவர்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் செய்து வாழ்வது ஜீவகாருண்யம் எனப்படும். இதயத்தில் இறைவனைக் கோயில் கொள்ளச் செய்து, மக்களை இறைவனாகக் கருதி, கைகளால் தொண்டு புரிய வேண்டும். பிறருக்கு நன்மை செய்யும் நிலையில் நாம் இருக்கும்போது, அவ்விதம் நன்மை செய்யும் வாய்ப்பை நாம் தவறவிட்டு விடக்கூடாது. நாம் வாழும் வாழ்க்கை பிறருக்கு இல்லாமையாலும் கல்லாமையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதேனும் ஒரு விதத்தில் உதவுவதாக இருக்கவேண்டும். பிறர் நலப்பணியே இறைபணி என்பது சுவாமி விவேகானந்தரின் கொள்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற திருவாசகவிழா

– திரு சி. தில்லைநாதன் அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வருடந்தோறும் மார்கழி மாதத்தில் நடாத்திவரும் திருவாசகவிழா இம்முறையும் பக்திபூர்வமாக சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பெருந்திரளான அடியார்கள்குழாம் மத்தியில் நடைபெற்றது.





அன்றைய தினம் காலை 10 மணியளவில் சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூசையைத் தொடர்ந்து மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவாசக ஏடுகள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன. தொடர்ந்து மறவனூர் T.M. வாசகர் குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் உயர் சைவத்திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆரம்பமான விழாவில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். அவர் தனது உரையில், "சந்நிதிச் சூழலில் சைவசமயம், தமிழ்மொழி, மற்றும் பண்பாட்டு அடையாளங்களை பேணிக்கொண்டிருக்கின்றது சந்நிதியான் ஆச்சிரமம். ஆச்சிரமத்தில் வருடந்தோறும்



மணிவாசகரின் திருவாசகம் என்னும் தேன் பருகும் நிகழ்வு திருவாசக விழாவாக வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. 1999 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை திருவாசகவிழா விமானக் குண்டுவீச்சுக்கள், ஷெல் மழை, இடப்பெயர்வுகள் மத்தியில் நடைபெற்று வருவதுடன், ஆன்மீக வளர்ச்சிக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. இது ஒரு சாதனை. வைகாசி மாதத்தில் வைகாசிப் பெருவிழாவையும் ஆச்சிரமம் நடாத்திவருகின்றது. சந்நிதியான் ஆச்சிரமத்தின் இத்தகைய ஆன்மீகப் பணிகளை மாணவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆச்சிரமம் பசிக்கு உணவை மட்டுமல்லாமல் உள்ளத்துக்குத் தமிழ் மொழியுடன் கூடிய ஆன்மீக சிந்தனைகளை வழங்கி மனிதனைப் பக்குவப்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் திகழ்கின்றது. இவ்வாறான அற்புதமான பணிகள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஊடாக இடம்பெற்று வருகின்றது. இப்பணிகளில் கல்விசார், கல்விசாராதோர் பேரவையுடன் இணைந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

திருவாசகத்தை எல்லோரும் ஓதவேண்டும். ஒரு பாடலையாவது வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும். திருவாசகத்தின் ஒவ்வொரு வாசகமும் தேன் போன்றது. அதனால்த்தான் திருவாசகத்தை தேன் என்றார்கள். திருவாசகத் தேனை அனைவரும் பருகவேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் ஆலயத்துக்கு எப்படிச் செல்லவேண்டும். எப்படி வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பொய்மையான உடம்பு இறைவனிடம் எதைக் கேட்க வேண்டும் என்பதை எல்லாம் திருவாசகம் சொல்கின்றது. பசிக்கின்ற பிள்ளையைப் பற்றித் தாய்க்குத் தெரியும். அதைப்போல இறைவனுக்கும் வழிபடுபவரின் எண்ணங்கள் வேண்டுதல்கள் புரியும்.

சந்நிதி ஆலயத்தில் வாழ்ந்த சித்தர்கள் ஞானம்பெற்ற மரமாக பூவரசமரம் ஆலயத்தின் மேற்குப் புறத்தில் உண்டு. இந்தப் பூவரசு மரம் உப்புத்தண்ணீர் ஊடாக பூரித்து நிற்கின்றது. அம்மரத்தின் கிளை ஒன்று குண்டுவீச்சினால் முறிந்து விழுந்தது. அக்கிளை மரத்தை எடுத்து வந்து ஆச்சிரம வாசலில் மோகனதாஸ் சுவாமிகள் நாட்டி வைத்தார். அக்கிளை மரம் செழித்து வளர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தை அழகு படுத்துகின்றது.

அதன் வளர்ச்சிபோல சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகள் அன்னதானம் வழங்குவதோடு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நின்றுவிடாமல் மனித மேம்பாட்டுக்கான பல்வேறு பணிகளை எமது மதத்தினருக்கு மட்டுமன்றி மற்றைய மதங்களைச் சேர்ந்தோருக்கும் செய்து வருகின்றது. மண் சரிவால் பாதிக்கப்பட்ட பண்டாரவளை மக்களுக்கு உதவிகளை வழங்கியதோடு, அவர்கள் மத்தியில் ஆன்மீகப் பலத்தை ஏற்படுத்தும் பணிகளை மேற்கொண்டது. ஒரு பெரு விருட்சமாக ஆன்மீகத்தின் அடையாளமாக சந்நிதியான் ஆச்சிரமம் இருந்து வருகின்றது. இந்த வரலாற்றுப் பணிகளை மாணவர்கள் மாத்திரமன்றி அனைவரும் அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டும். ஆச்சிரமப் பணிகள் மேலோங்க வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்" எனத் தெரிவித்தார்.

சின்மயா மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் ஜாக்கிரத் சைதன்யா சுவாமிகள் சிறப்புரை ஆற்றுகையில், திருவெம்பாவைக் காலத்தில் சைவத்திற்கு பெருமை சேர்த்த மணிவாசகப் பெருமானின் திருவாசகவிழா ஆற்றங்கரையில் நடப்பது மகிழ்ச்சி தருகின்றது.

இன்றைய காலத் தேவைகளை உணர்ந்து சைவத் தமிழ் மக்களுக்குப் பல பணிகளை ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் பணி உலகெங்கும் பரவி நிற்கிறது. அன்னதானப் பணியுடன் பலவித உதவிப் பணிகள் ஆச்சிரமத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. யாருக்கு என்ன தேவையோ அதனை அறிந்து நிறைவேற்றும் நிறுவனமாக சந்நிதியான் ஆச்சிரமம் திகழ்கின்றது.




தமிழ் வேதம்12 திருமுறைகளைக் கொண்டது. அதில் திருவாசகம் 8ஆவது திருமுறையாகத் திகழ்கின்றது. சிவபெருமானின் பெருமையை எடுத்துச் சொல்லும் இலக்கியப் பாடல்கள்தான் திருவாசகம். இறைவனே எழுதிய பாடல்களாக அப்பாடல்கள் இருக்கின்றன. தான் பெற்ற அருளை ஒரு ஞான நிலையில் இருந்து பல பதிகங்களாக மாணிக்க வாசகர் திருவாசகத்தைத் தந்துள்ளார். மாணிக்கவாசக சுவாமிகள் மாணவனாக இருந்த காலத்தில் பஞ்சாட்சர மந்திரமான "ஓம் நமசிவாய" மந்திரத்தை ஓதிக்கொண்டிருந்தார். அதனால் மனம் அலையாமல் ஒருநிலைப்பட்டது. மனம் ஒருநிலைப் பட்டதால் அவர் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். அவரது சிந்தனை தூரநோக்குள்ள சிந்தனையாக இருந்தது. பாண்டிய மன்னன் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்க அழைக்கும் நிலைக்கு அவரது ஆற்றல் வெளிப்படையாக இருந்தது. அவரை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றது. ஆகவே தினமும் ஒரு திருவாசகத்தைப் படித்து 5 நிமிடநேரம் "ஓம் நமசிவாய" என்ற மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றல் மற்றும் சக்தியைப் பெற்றுக்கொள்ள முடியும். சைவசமயி என்று சொல்லக்கூடிய விதத்தில் சிவதீட்சை செய்து மந்திரத்தைச் சொல்லும்போது சக்தி மேலும் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் சக்தி வாய்ந்த சிவன் இருக்கிறார். சிவனை மனதில் இருத்திக்கொண்டால் நாம் ஏன் பயப்பட வேண்டும். எல்லாமே நன்றாக நடக்கும். நாம் அனைவரும் இணைந்து செயற்பட்டால் சைவ எழுச்சியும் மறுமலர்ச்சியும் ஏற்படும். ஈழதேசத்தில் இந்த எழுச்சிக்காக இணைந்து செயற்பட முன்வாருங்கள் என அழைப்பு விடுத்தார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் சைவத்திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையுரையில் எதிர்கால சமூகம் சீரான சமய விழுமியங்களோடு வாழவேண்டும். அவ்விழுமியங்களால் நாம் உயர்ந்து நிற்க முடியும். அதற்காகவே மாணவர்கள் மத்தியில் சமய அறிவுப்போட்டிகளை முன்னெடுக்கின்றோம். மாணவர்கள் மத்தியில் சமய அறிவு ஆற்றல்களை ஊக்குவிக்கவே போட்டிகளில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் பரிசில்களை வழங்குகின்றோம் எனக் குறிப்பிட்டார்.



திருவாசகவிழாவையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட பண்ணிசை மற்றும் சமய எழுத்துப் பரீட்சைகளில் வெற்றி பெற்றோர்களுக்கும் பங்குபற்றியோர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. வெற்றிபெற்ற மாணவர்களின் பண்ணிசையும் இடம்பெற்றன.



உடுப்பிட்டி இலக்கணாவத்தை முன்பள்ளி மாணவர்களின் சிறப்புக் கலைநிகழ்வுகளுடன் திருவாசகவிழா இனிதே நிறைவுற்றது.

## திருவாசகப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள்

### 5ஆம் ஆண்டு

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சுரேஷ்குமார் கம்சிகா<br>(கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்) |
| 2ம் இடம் | இ. நிருத்திகன்<br>(கற்பகப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உடுப்பிட்டி) |
| 2ம் இடம் | வி. நஜனி<br>(றோ.க.த.க. பாடசாலை, முல்லைத்தீவு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் இடம் அரிகரன் ஜேயந்தினி
(கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

3ம் இடம் மு. லக்ஷனா
(வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்)

## 6ஆம் ஆண்டு

1ம் இடம் வி. டிலக்ஷிகா
(றோ.க.த.க. பாடசாலை, முல்லைத்தீவு)

2ம் இடம் யோகதாசன் அபிஷா
(கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

3ம் இடம் கு. மதுஷா
(தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்)

## 7ஆம் ஆண்டு

1ம் இடம் கு. தயாளருபிணி
(வேம்படி மகளிர் கல்லூரி)

2ம் இடம் கு. தயாளநீதினி
(வேம்படி மகளிர் கல்லூரி)

3ம் இடம் லிங்கேஸ்வரன் அபிராமி
(கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

## 8ஆம் ஆண்டு

1ம் இடம் சா. ஆர்த்திகா
(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

2ம் இடம் ஏகாம்பரம் கோபிநாத்
(கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

3ம் இடம் பாலேந்திரா சிவராஜினி
(கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

## 9ஆம் ஆண்டு

1ம் இடம் இ. லதாங்கி
(கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

2ம் இடம் நாகேந்திரன் சங்கீதன்
(ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

3ம் இடம் சசிக்குமார் நிலானி
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

## தரம் 10

1ம் இடம் ச. சாளினி
(நிலாவெளி மத்திய மகா வித்தியாலயம், திருகோணமலை)

2ம் இடம் கு. சயிந்தன்
(தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 16. தன்னிகரற்ற ரமணன்

கனகம்மா பகவானை ஆராதித்து, அதன் சந்நிதியில் திளைத்ததுமன்றி, முருகனாருக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பைப் பெற்ற பாக்கியசாலியுமாவார். அந்த அரிய வாய்ப்பு அவருக்கு மிக உபயோகமாக இருந்தது. முக்கியமாக பகவான் ஊனக்கண்களில் இருந்து மறைந்த பின்னர் தங்களை அநாதைகளாக உணர்ந்து தவித்த அடியார்களுக்கு முருகனார் தம் தவ வாழ்க்கையாலும், உயரிய உள்ளத்தாலும் பரந்த கல்வியறிவாலும், குரு சாந்நித்தியத்தை சேமித்துத் தந்து உதவ முடிந்தது. எங்கும் நிறைந்த பகவானின் ஆன்மீக இருப்பே அதன் சமூகம் என்று அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டி சமாதானமடையச் செய்தார். கனகா, பத்மா, ஆனந்தம்மா முதலானவர்கள் முருகனாரின் அண்மையினால் பயனடைந்தனர். அவர் தினசரி நடத்திய ரமண நூல் திரட்டின் விளக்க உரைகள் அவர்களைத் தூய உணர்வாகிய ரமண உலகிற்கே கொண்டு சென்றன.

நான் கேட்டுக் கொண்டதன் பேரில் கனகம்மா, ஆனந்தம்மா விஷயமாகச் சில தகவல்களைத் தெரிவித்தார்.

"ஆனந்தம்மாள் பகவானிடம் விருபாட்ச குகை நாட்களிலிருந்தே அதனிடம் வந்து கொண்டிருந்தவர். திருவண்ணாமலையில் பெற்றோருடன் வசித்த அவர், சிறு வயதிலேயே பகவானிடம் அன்பு பூண்டவர். சிறுமி ஆனந்தம்மா, விருபாட்ச குகையில் பகவான் சந்நிதியில் உட்கார்ந்து தியானம் செய்யும் வழக்கம் கொண்டிருந்தாள். அவளுடைய நாட்டமெல்லாம் ஆன்மீக வாழ்விலேயே பதிந்து இருந்தாலும், எல்லாப் பெற்றோரையும் போல் அவளுடைய பெற்றோரும் அவளுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டனர்.



மணமான பின்னும் அவளுடைய விருபாட்ச குகைப் பிரயாணமும், பகவத் தரிசனமும் நிற்கவில்லை. காலாகாலத்தில் ஒரு பிள்ளை பிறந்தது. அவளுடைய எண்ணமெல்லாம் பகவானையே சூழ்ந்திருந்ததால், குழந்தையும் குடும்பத்தினரும் அசட்டை செய்யப்பட்டனர். குழந்தையை விட்டுவிட்டு குன்றேறி தியானம் செய்யக் கிளம்பி விடுவாள். உறவினரும், பெற்றோரும் எவ்வளவு முயன்றும், மன்றாடியும் இந்த வழக்கத்தை மாற்ற முடியவில்லை. சில வருடங்களுக்குப் பிறகு அவளுடைய கணவர் காலமாகிவிட்டார். பகவானும் குன்றை விட்டுக் கீழிறங்கி, இந்த ஆச்ரமத்துக்கு வந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தம்மா பிள்ளையை சகோதரனிடம் விட்டுவிட்டு, தன் ஜாகையை திருவண்ணாமலை ஊரிலிருந்து, ரமண நகரில், ஆச்ரமத்துக்கு எதிரில் மாற்றிக் கொண்டார். அங்கு கூரை வேய்ந்த மண் குடிசை எழுப்பி, அதில் கடுமையான கட்டுப் பாட்டுடன் வசிக்கலானார். எளிய சொற்ப ஆகாரம், ஆன்மீக சம்பந்தமான விஷயங்கள் மட்டுமே பேசுதல், பகவானைத் தவறாமல் தரிசித்தல் முதலியவற்றை மேற்கொண்டார். அவர் தோற்றத்தின் தூய்மை, பெருமதிப்பைத் தூண்டுவதாக இருந்தது. காவி உடை, ருத்தி ராட்ச மாலை, முண்டனச் சென்னி, நீறணிந்த நெற்றி, பகவானையணிந்த உள்ளத்தின் வெளித் தோற்றம் இவை சின்னங்கள். அவரு டைய தேவைகளோ மிகக்குறைவு. ஆனந்தம் மாளை மிகவும் மதித்த தனம்மாள் என்பவர் அவருக்கு சமையல் செய்து உதவினார். தனம்மாள் ஊரைவிட்டு எங்காவது போவ தானால், சில நாட்களுக்கான சாதத்தை வடித்து, அதை ஒரு பானையில் போட்டு தண்ணீர் விட்டு வைத்து விடுவாள். அவ்வளவுதான். பசித்தால் ஆனந்தம்மாள், அதில் கொஞ்ச மெடுத்து சாப்பிட்டுப் பசியாறுவார். ருசிக்கு உப்பையும் தொட்டுக் கொள்வார்.

எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும், ஆனந்தம்மாவால் எந்த ஆன்மீகப் புத்தகத் திலிருந்தும், எந்தப் பாகத்தையும் விளக்கிக் கூறமுடியும். அவரைப் பார்க்கவரும் அன்பர் கள் ரமண நூல்திரட்டிலிருந்தாவது, ரிபுகீதை யிலிருந்தாவது ஏதாவது ஒப்பித்தால் அவ ருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. எல்லாவற்றையும் விட பகவான் முன் அமர்ந்து தியானம் செய் வதில்தான் அவருக்கு இணையற்ற ஆனந்தம், புனித மலையான அருணாசலத்தை வலம் வருவதையும் அவர் மிக விரும்பினார்.

வேதாந்தத்தை நன்கு கற்றறிந்த பள்ளி ஆசிரியை மதுரம்மாள், மதுரையிலிருந்து அடிக்கடி ஆச்ரமம் வருவார். ஆனந்தம்மாளின் பெருமையை உணர்ந்து, அவருக்குத் தமிழ் சமய நூல்களை வாசித்துக் காண்பிப் பார். அவற்றுள் அவருக்குக்கூட குழப் பம் ஏற்படும் கடினமான இடங்களை ஆனந்தம்மாள், பகவானின் போதனை யைப் பின்பற்றி எளிதாக விளக்கி விடுவார். படிப்பறிவுக்கு எட்டாததை அவருடைய நேர் அனுபவம் விளக்கிவிடும்.

அந்நாட்களில் அனேக தீவிர சாதகர் கள் பலாக்கொத்தில் வசித்தனர். (முருகனார், முனகல வெங்கட்ராமையா, அண்ணாமலை சுவாமி, குஞ்சு ஸ்வாமி இன்னும் பலர்) இவர் களுக்காக குடும்பஸ்தர்களான அடியார்கள் விஷேசமாக வீட்டில் தின்பண்டங்கள் தயாரித் துத் தருவது வழக்கம். ஒரு சமயம் நான் பகோடா தயாரித்துப் பலாக்கொத்து சாதுக் களுக்கு விநியோகித்தேன். அன்று ஒரு பொட் டலம் எடுத்துக்கொண்டு ஆனந்தம்மாளின் குடிசைக்குச் சென்றேன். அவர் வழக்கம்போல் என்னை அன்புடன் வரவேற்றார். நான் பட் சணத்தைக் கொடுத்ததும் அதைத் தொடா மலே, அது என்ன? என்று கேட்டார். பலாக் கொத்து சாதுக்களுக்காக பகோடா செய் தேன். இதுதான் கடைசிப் பொட்டலம். உங் களுக்காகக் கொண்டு வந்தேன் என்றேன். அவர் அதைத் தின்றுவிட்டு சற்று இறுகிய முகத்துடன், 'இந்த தினுசெல்லாம் சாதுக் களுக்குத் தேவை என்று நினைக்கிறாயா? அந்த மூலையில் தனம்மாள் சில தினங்களுக் காக பழையது வைத்து விட்டுப் போயிருக் கிறாள். அவ்வளவுதான் எனக்கு வேண்டியது. சாதகருக்கு சமயம் மதிப்பற்றது. 'நாம்' இருக்கும் இருப்பிலேயே இருக்க வேண்டும். அந்த 'இருப்பு' மாத்திரமே முக்கியம். சாதுக் களுக்குத் தின்பண்டம் தயாரிப்பதில் நேரத்தை வீணாக்காதே. இவையெல்லாம் தொல்லை தரும், மனதைச் சிதற வைக்கும் எண்ணங் களால்தான் நேரிடுகின்றன. எண்ணங்கள் எழாத இடத்தில் 'இரு' என்று சொல்லி, சற்றுப் பொறுத்து, 'ஏனிந்த மாதிரி சமயத்தை வீணடிக்கிறாய்? பகவான் சொல்வது என்ன?

*மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவது துன்பங்கள்.* 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஹிதோபதேசம் செய்தார். அவர் சொன்ன விதமும், தோரணையும் அவற்றில் இருந்த சக்தியும் இத்தனை வருடங்களுக்குப் பிறகும் என் மனதில் பசுமையாக இருக்கின்றன. நான் அவற்றைப் போற்றுகின்றேன். ஆம் நாம் எதற்கு ஒரு 'நல்ல செயல்' என்று சொல்லப்படுவதைச் செய்து, அத்தனை நேரம்கூட வீணாக்க வேண்டும்? நம் குருநாதன் 'நமக்'குள்ளேயே அடங்கி இருப்பதிலேயே நாம் முழு நேரமும் செலவழிக்க வேண்டும் என்று விரும்புகிறதல்லவா? அநாவசியமான சிக்கல்களிலிருந்து காப்பாற்றி, மனதை வெளியே போகவிடாமல் தடுத்து, உள்ளுக்கிழுத்து, சதா சர்வதா உள்ளே மூழ்கும்படி பலமாகத் தூண்டிய ஆனந்தம்மாளை நெஞ்சு நிறைந்த நன்றியுடன் நினைக்கிறேன்.

அவர் பகவான் சந்நிதியிலேயே தான் அனேகமாகக் காலம் கழித்தார். குடிலுக்குத் திரும்பினாலும் தியானத்திலிருப்பார் அல்லது யாராவது வந்தால் புத்தகம் ஏதாவது படிக்கச் சொல்லிக் கேட்பார். என்னிடம் அதிகம் அன்பு வைத்திருந்தார். 'நீ சிறு வயதிலேயே பகவானிடம் வந்துவிட்டாய். அது ரொம்ப நல்லது. கிடைத்தற்கரிய வாய்ப்பு. ஒவ்வொரு நொடியையும் சாதனையிலேயே செலவிடு. பரிபூரண ஆன்மானுபூதியே- தன்னை அடைதலே- உன் குறிக்கோளாக இருக்க வேண்டும். மற்றவை எல்லாமே மனது விரிக்கும் வலைகள்தான் இடைவிடாது எப்பொழுதும் விழிப்புடன் இரு. என்றும் உன்னுடையதான ஆன்மாவை 'அடைந்து' விடு. பகவான் என்றென்றும் உன்னுடன் இருக்கும்!"

ஆனந்தம்மாளின் பரிசுத்த வாழ்க்கையிலிருந்தும் அறிவுரைகளிலிருந்தும் இளம் சாதகர்கள் கற்கக் கூடியவை நிறைய இருக்கின்றன.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெப்ரவரி | 07 | தை | 24 | சனி | சண்டேசுரர் |
| பெப்ரவரி | 11 | தை | 28 | புதன் | திருநீலகண்டர் |
| | | | | | தாயுமானவ சுவாமிகள் |
| பெப்ரவரி | 27 | மாசி | 15 | வெள்ளி | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| மார்ச் | 07 | மாசி | 23 | சனி | திருவள்ளுவர் |
| மார்ச் | 19 | பங்குனி | 05 | வியாழன் | பரமகுருசுவாமி |
| மார்ச் | 20 | பங்குனி | 06 | வெள்ளி | குழந்தைவேற்சுவாமி |
| மார்ச் | 22 | பங்குனி | 08 | ஞாயிறு | செல்லப்பாசுவாமி |
| மார்ச் | 27 | பங்குனி | 13 | வெள்ளி | நல்லைக்குருமணி |
| | | | | | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் |
| | | | | | தவத்திரு வே. முருகேச சுவாமிகள் |
| மார்ச் | 31 | பங்குனி | 17 | செவ்வாய் | யோகர்சுவாமி |

### ஆன்மீகச் சிந்தனை

நீங்கள் தூய உள்ளத்துடன் இறைவனைத் தியானித்தால், இறைவன் உங்கள் உள்ளத்திலேயே இருப்பதைத் தெளிவாக நீங்கள் உணரமுடியும். மனதை ஆன்மீக சாதனைகளால் ஒருமுகப் படுத்தினால் மனதின் ஆழத்தில் இறைவன் உணரப்படுகிறான். பக்தியால் நமது மனித மனம் பக்குவம் பெறும்போது எல்லா உயிர்களிலும் இறைவன் இருப்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். தன்னை நம்பி வாழ்பவர்களுக்கும், தன்னைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் இறைவன் அருள்புரிவான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! எல்லோரும் அச்சிறார்களின் இல்லத்தில் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டிருக்கிறார்கள். சுவாமிகளும் ஒரு சிலரும் வெளியில் உள்ள கதிரைகளில் இருந்து அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள். சாப்பிட்டு முடித்தவர்கள் வெளியில் வந்து கைகழுவிக் கொண்டிருக்கிறார்கள். நானும் கை கழுவியபின் சுவாமிகளை நெருங்கும்வேளை மாஸ்ரர் என்ன ஏதோ முருகன் அருளால் வந்த காரியங்கள் இனிதே நிறைவேறியுள்ளன. காலையில் கதிரேசன் கோயில் பள்ளியில் அறநெறிச் சிறார்களுக்கு உதவிகள் வழங்கியபின் பண்டாரவளை கோணாமுட்டி அறநெறி பாடசாலைப் பிள்ளைகளின் ஆசிரியைகள் அங்கு வந்து தாமே



பொருட்களைக் கொண்டு சென்று வழங்குவதாகச் சொல்லி வருகிறார்களாம். எனவே பத்து மணிக்குள் எல்லாம் நிறைவுறும் போலுள்ளது. நாம் ஒருமுறை கதிர்காமத்தானிடம் போவோம். அங்கு பூசைகள் ஆறு மணிக்குத்தான். எனவே நாம் போவோமா? பூசைதான் பார்க்காவிட்டாலும் ஒருமுறை அவனது மண்ணை மிதித்து விட்டாவது வருவோம் என்று அனைவரிடமும் அபிப்பிராயம் கேட்கிறார்கள். எனக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஒருவித திகைப்பு ஏற்பட்டது.

ஆம்! எம் அன்பு அடியவர்களே! இத்தொடரை கண்டோம் கதிர்காமம் என்று இட்டபொழுதே என்னுள் ஒரு முடிவு ஏனையவர்களைப்போல அல்ல நான் ஒருமுறையாவது உன்னைப் பார்த்துவிட்டேன் எனக்கு இதுவே போதும். நான் இனி உன்னிடம் வரப்போவதில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஏது அவ்வாய்ப்பு இனிக் கிடைக்கப்போவதுமில்லை என்ற முடிவுடன்தான் மேற்கூறப்பட்ட தலைப்புடன் எழுதத் தொடங்கினேன். ஆனால் முருகன் இப்படி ஓர் ஆடலை நிகழ்த்தி மீண்டும் தன்னிடம் வலிந்து அழைப்பான் என்று கனவிலும் நினைத்ததில்லை. எனவே என் மனத்துள் ஆம் போவோம் என்ற விடை இருந்தாலும் முந்திரிக்கொட்டை போல ஏன் முன் விடை பகர்வான் என்று சற்று மௌனத்தைக் கடைப்பிடிக்க, ஏனையோர் அதுக்கென்ன ஐயா போவோம் என்றதுடன் நானும் அவர்களின் கருத்துக்கு மிக ஆனந்தமாக ஒத்தூதினேன். அப்பொழுதுதான் எங்களுடன் வந்த ஓர் அடியவர், என் முன்னையநிலை போல வாழ்க்கையில் ஒருதடவைகூட கதிர்காமம் வந்ததில்லை என்பதையும் அறியமுடிந்தது.



எனவே இப்பொழுது அடுத்தநாளைய பிரயாணத்திட்டத்தின்படி கதிர்காமத்தானிடம் சென்று வீடு திரும்புவதாக முடிவாயிற்று. இரவு 10.00 மணியளவில் அனைவரும் பதுளை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்திற்கு வருகிறோம். ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டபடி அக்கோவிலின் காவலாளியும் எமக்காகக் காத்திருந்து எமக்குரிய மண்டபத்தைக்காட்டி நீங்கள் மேல்மாடியிலோ 2ஆம் கீழ் மாடியிலோ தங்கலாம் என்றார். நாம் அனைவரும் உடுப்புகளை மாற்றி கைகால் சுத்தம் செய்து படுக்கைக்கு ஆயத்தமாகினோம்.

அப்போதுதான் அவ்வாலயத்தின் பிரதம சிவாச்சாரியாருடன் சிறியேன் அளவளாவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரும் எமது கீரிமலை வட்டுக்கோட்டைத் தொடர்புள்ளவராகவும் இருந்ததை அறிய முடிந்தது. எங்களது அந்தணக் குருமார்களைக் குருவாக அவர்களிடம் பயின்ற அக்காலங்களை நினைவு கூர்ந்ததுடன் தாம் இங்கேயே இப்போ நிரந்தர வதிவிடமுடையவராகிய செய்தியையும் கூறினார்கள்.

ஆலயமும் மிகவும் நேர்த்தியாக பரிபாலனசபையார்மூலம் பராமரிக்கப்பட்டு வருவதையும் அறியமுடிந்தது. அவரின் ஆலோசனைக்கமைய 2ஆம் மாடி மிகவும் வசதியானதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளதை அறிந்து அனைவரும் 2ஆம் மாடியிலேயே உறங்குவதற்குச் சென்றோம். அதிகாலை 4.00 மணிக்கே சிலர் எழுந்துவிட்டனர். காலைக் கடன்களை முடித்து அனைவரும் 6.00 மணியளவில் ஆயத்தமானார்கள்.

பூசைகள் 7.00 மணிக்கு என்பதால் அனைவரும் காலைத் தேனீரை அருகிலுள்ள ஓர் தேனீர்ச்சாலையில் அருந்தியபின் கதிர்வேலாயுதனின் பூசையில் கலந்துகொள்ள வந்தோம் அந்தக் காலை வேளையில் ஒரு சிறு கூட்டத்துடன் முன்னவனின் பூசையைத் தொடர்ந்து மூலவனுக்கு பூசைகள் ஆரம்பமாகின. அழகிய நவீன LED சர விளக்குகளின் அலங்காரம் சுற்றுப்பிரகார விதானம் முழுவதும் பலவித வர்ண ஜாலங்களில் மின்னி மின்னி சொக்கட்டான் பந்தலைப்போல விதானங்களை அழகு செய்துகொண்டிருந்தன. நாங்கள் இங்கே வெள்ளை கட்டுவதுபோல அவர்கள் உட்பிரகாரக் கூரை முழுவதும் இச்சர வர்ண விளக்குகளால் அலங்கரித்து இருந்தமை அடியேன் பார்த்த எவ்வாலயத்திலும் இல்லாது அமைந்துள்ளதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.




அதுமட்டுமல்ல, ஆலய அமைவிடம் மிகமிக அற்புதமானது. முழுக்க முழுக்க மிகவும் மூவின மக்களும் கூடும் சன நடமாட்டமுள்ள உயிர்ப்புள்ள அடர்ந்த சூழல். கடைகள், சந்தைகள், வாகன நெரிசல்கள் மிகமிக அதிகம். இவ்விடத்தில் மூன்று மாடிகளைக் கொண்டு பஞ்சதள ராஜகோபுரங்களுடன் அழகிய பண்டிகை வேலைப்பாடமைந்த பண்டிகைகளுடன் சிற்பங்கள் நிறைந்த சிங்காரக் கோலத்துடன் மூலவனாக வேலன் தானிருந்தாலும் அங்கே நாம் தரிசித்த சிறு மலையில் (றொக்கில்) அமைந்துள்ள காளித்தாயின் ஆலயத்தில் காணப்பட்டதுபோல் அத்தனை பரிவார மூர்த்திகளையும் கொண்டு சிறப்பான பூசை நடைபெறுவது எம்மூர் முருகன் ஆலயங்களுக்கில்லாத தனிச் சிறப்பு என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். இப்போ நாம் சென்றவேளை மகரஜோதித் திருவிழாவாம். ஐயப்ப அடியார்களின் திருவிழாக் காலமாக இருந்தமையினால் ஐயப்பனுக்குரிய சிறு பரிவார ஆலயத்தில் 18 படிகளைக் கொண்டு தற்பொழுதைய சில்வர் உறையிட்ட படிகளாளமைந்த வண்ணம் ஐயப்ப மூர்த்தி அழகாக வீற்றிருக்க அவருக்கும் இதோ எங்கள் சிவாச்சாரியாரே பூசை செய்யும் காட்சியையும் கண்டு எம்மவர்கள் தரிசித்தார்கள். உண்மையில் நான் அதிகம் ஐயப்ப வழிபாட்டில் என்னை ஈடுபடுத்திக் கொண்டதில்லை. காரணம் நான் படித்தறிந்த வகையில் மிகவும் விரத நிர்ணயம்கூடிய ஒரு விரத வழிபாட்டை இவரை வணங்குபவர்கள் கொண்டிருக்கவேண்டும் என்பதாலும் எம்போன்ற குடும்பஸ்தர்களால் இந்த நிர்ணயங்களைக் கடைப்பிடிக்க முடியாது என்ற ஒரு பயத்தினாலும் நானாகவே இவ்வழிபாட்டில் ஈடுபடாது ஒதுங்குவதுண்டு. எனவே அடியேனையும் ஒருவராக்கி தன்னையும் பரிவாரங்களையும் வழிபடும் பாக்கியத்தையும் எம்மோடிணைந்தவர்கள் பெறும் வாய்ப்பையும் தந்ததாக இப்பயணம் அமைந்ததையும் இங்கு காட்டியே ஆகவேண்டும். இங்கும் ஒரு 15 நிமிடங்கள் கூட்டுப் பிரார்த்தனை அமைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கூடினோம். பாடினோம். தொடர்ந்து 2ஆம் மாடியில் உள்ள இவர்களது அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளைப் பார்ப்பதற்குச் சென்றோம்.



அங்கே பிள்ளைகளும் ஆசிரியைகளும் சில பெற்றோர்களும் வந்திருந்தார்கள். பிள்ளைகள் கோல உடையில் மிக அழகாக அமர்ந்து தமது காலைப் பிரார்த்தனையை நடாத்தினார்கள். அவர்களது பிரார்த்தனை அமைப்புக்கூட சற்று வித்தியாசமாக தமது மலையகச் சூழலுக்கு ஏற்றவகையில் அமைந்திருந்ததை கல்விப்புலத்தைச் சார்ந்தவன் என்பதனால் பிரித்தறிய முடிந்தது. அதற்கும் ஓர் காரணம் உண்டு. இவர்களை வழிநடாத்தி நிர்வகித்துக் கொண்டிருப்பவர் ஓர் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆவர். பிரார்த்தனை முடிவில் சிறியேனால் சிறார்களுக்குப் பொருந்தும்வண்ணம் ஓர் சிற்றுரை வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து கல்விப்பணிப்பாளர் அவர்கள் தமது கருத்துரையை நல்கினார்கள்.

உண்மையில் சந்நிதியான் ஆச்சிரமம்போன்று சைவ மகாசபையினர் வெறும் சொல்லளவில் மட்டும் நிற்காது சொல்லியவண்ணம் தொடர்ந்து வந்து பணிசெய்து பகிர்ந்தளித்து வருவதை வெகுவாகப் பாராட்டியதுடன் அவர்களது சைவச் சிறார்களுக்கான கல்வி அறிவூட்டலில் உள்ள கஷ்டங்களைச் சொன்னபொழுதுதான் ஏனைய மதத்தினரின் தாக்கம் வருங்கால எம் மலையக மக்கள்மீது எவ்வளவு காத்திரமான பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பது புலனாகியது. அறியாமையும், அவல நிலையும் வறுமையும் இம்மக்களை மதம் மாற்றுவதற்கு மிகவும் உயர்ந்த வாய்ப்பாக அமைந்துள்ளதையும் அது வேகமாக அண்மைக் காலங்களில் நிறைவேறி வருவதையும் தகுந்த ஆதாரங்களுடன் காட்டினார்கள். இவர்களை விழிப்படையச் செய்யவேண்டியது சைவ நிறுவனங்களின் தலையாய பணியாக அமையவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். இது எமக்கு இவர்களுக்கு உதவியே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தை மேலும் வலுவூட்டியது. இப்பேச்சு எமது சுவாமிகளைத் தொட்டதோ என்னவோ. அவர் தமது உரையில் நாங்கள் இதுமட்டுமல்ல மாதத்தில் ஒருமுறையேனும் இங்குள்ள உதவி தேவையான பிள்ளைகளை பாடசாலை பாடசாலையாகத் தேடிச்சென்று எம்மாலான உதவிகளைச் செய்வதற்கு எம்முள் ஓர் உந்துதலை முருகன் தந்துள்ளான் என்று பேசவைத்தது என்பதை தங்கள் அனைவர்க்கும் இம்மலரூடாகத் தெரிவித்து மகிழ்கிறேன். அதனைச் செய்ய எங்கள் ஆற்றங்கரையானின் திருவருள் எம்மோடு இருக்கும் என்பதும் சிறியேனின் பணிவான கருத்து. மகா சபைத் தலைவரும் தமது கருத்துரை வழங்கியதுடன் அவரும் மோகனதாஸ் சுவாமிகளும் அங்குள்ள பிள்ளைகளுக்கும் கலந்து கொண்ட பிள்ளைகளின் பெற்றோர்க்கும் தனித்தனியாக சத்துணவும் சுகாதாரம் பேணும் பொருட்களையும் வழங்கினர்.

இதேவேளை பண்டாரவளை கோணாமுட்டி அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளும் வந்திருந்தார்கள். அவர்களுக்குரிய உதவிப் பொருட்களும் வழங்கப்பட்டு அவர்களையும் பொருட்களையும் ஓர் ஓட்டோவின் உதவியுடன் பதுளை பஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பஸ் ஏற்றிவிடும் வரைக்கும் இம்முறை எமது பயணம் சிறப்பாக அமைந்தது. அப்பிள்ளைகளும் ஆசிரியர்களும் எம்முடன் இணைந்து ஆலயத்தில் ஓர் கூட்டுவழிபாடு செய்ய அழைத்தனர். நாம் அனைவரும் அங்கு சென்று ஓர் ஆனந்தமான பஜனையை கதிர்வேலாயுதனின் சந்நிதியில் வைத்து இன்புற்றோம். இதேவேளை அங்குள்ள ஓர் ஆசிரியை மிகமிகக் குறைந்த வேதனத்தில் கடந்த 20 வருடங்களாகத் தன் சேவையினை தொடர்கிறார்கள் என்ற செய்தியையும் வாசகர்கள் கவனத்திற்குத் தருகின்றேன். உண்மையில் இங்குதான் சமூக விழிப்புணர்வுகள் உதவிகள் வலுவூட்டப்பட வேண்டும் என்பதை எமது இப்பயணம் தெளிவாக்கிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைமைகள்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

இதை உடமையென்றும் எழுதுவர். உடைமை பொருள் பொதிந்த சொல். சொத்து சுதந்திரம். பொருள் பண்டமெல்லாம் உடைமைகள். சொத்தை, உடைமையை இழந்த நிலை யாருக்கும் வரக்கூடாது. வாழ்க்கை நிலையாமையை ஆன்றோர் அறிமுகம் செய்துள்ளனர். திருமந்திரம், திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களிலே இந்நிலை பேசப்படுகிறது. தேடிய செல்வமும் சுற்றமும் எதிர்பாராமலே அழிந்துபோம். நிலையற்ற வாழ்வை நிலைபரமென்று எண்ணக்கூடாது. நிலையில்லா உலகில் நிலையானவற்றைத் தேட வேண்டும். பௌத்தம், சமணம் இந்த அடிப்படை உண்மையைத் தாரகமாகக் கொண்டவை. சைவமும் ஏற்றுக்கொண்டது. கல்வி செல்வம் இரண்டையும் ஒப்ப நோக்கில் கல்வி பிறவிதோறும் தொடரும் என்பர். குன்றத்தனைய நிதியைப் படைத்தோர் அன்றைப் பொழுதே அறியினும் அழிவர். குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர். எனவே நகையாடையணி, பொருள் பண்டம் வரும் - போகும். வாழ்க்கையின் உறுதிப்பொருள் களையும், ஆசார ஒழுக்க சீலங்களையும், நாம் பேணிப்பாதுகாத்து நடைமுறைப் படுத்தல் வாழ்வை ஜொலிக்கச் செய்யும். மனிதத்துக்கு ஏற்புடைத்தான உடைமைகளை வள்ளுவனார் எடுத்துரைத்துள்ளார். மனிதம் பூத்து, இனிதமான வாழ்வை மேற்கொள்ள அவை இன்றியமை யாதன அன்றோ? அவற்றை வள்ளுவர் குறள்மூலம் அடக்கமுடைமை, அருளுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, பொறையுடைமை இவற்றோடு ஆளுமையுடைமை, ஆற்றலுடைமை என்பனவற்றையும் மனித வாழ்வியலோடு நாம் இணைத்து செப்பமான வாழ்வியலை முன்னெடுப்பதே மனித இயக்கத்தின் சாதனை எனலாம். சீர் சிறப்பான வாழ்வியலின் ஆதாரங்களை ஒன்றிணைத்து மனிதம் முன்னேற்றப் பாதையில் வீறுநடைபோட மனிதாய நலன்களைப் பேணுவோம். இந்நெறியிலே அடக்கமுடைமை பற்றிச் சிந்திப்போம். இதை அவ்வையார் எப்படிப் பார்க்கிறார்.

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாங் கொக்கு மூதுரை 16

கொக்கானது தண்ணீர் பாயும் வாய்க்காலில் இருந்து ஓடுகின்ற சிறு மீன்கள் ஓடிச் செல்ல. அவற்றைத் தவிர்த்து பெரிய மீன்களைப் பிடிப்பதற்கு வெகு அமைதியுடன் துக்கத்தில் ஆழ்ந்திருப்பதுபோல தக்ககாலம் வரும்வரை அடக்கத்தோடு இருப்பவரை அறிவில்லாதவர் என நினைந்து அவரை வெல்ல நினைக்கவும் வேண்டா - நினைத்தால் பெரிய கேடாகும்.
உறுமீன்- பெரியமீன்

ஐம்புலன்களுள்ளிட்ட மனதை அவைபோகும் வழியினின்று கட்டுப்படுத்துவதே அடக்கம்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

குறள் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனை அடக்கமாகிய அறம் தேவர் உலகத்தில் நுகர (அனுபவிக்க) வைக்கும், அடங்காமையாகிய பாவம் இருளில் ஆழ்த்திவிடும். எனவே அடக்கம் ஆயிரம் பொன்பெறும்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து

குறள் 6

ஆமையைப் போல் ஒருவன்- ஒரு பிறப்பின் கண் ஐம் பொறிகளையும் அடக்க வல்லானாயின் அப்பாதை ஒருவனுக்கு எழு பிறப்பிலும் வேலியாக இருக்கும்.

அருளோ- பொருளோ மேன்மையானதெனப் பட்டிமன்றம் நடத்தும் காலம். வள்ளுவர் இதுபற்றிக்கூறும் வழியைப் பார்ப்போம்.

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட் செல்வம்
பூரியார் கண்ணுமுள

குறள் 241

செல்வங்கள் பலவற்றுள் ஆராய்ந்து சிறப்பானது எனப் போற்றப்படுவது- அருளால் வருஞ் செல்வம் அஃதொழிந்த பொருளால் வரும் செல்வம் இழிந்தார் கண்ணும் உள- ஆகலான் - பூரியார்- கீழ்மக்கள்

அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு

குறள் 244

உயிர்களிலே இரக்கம் இல்லாதவர்க்கு வீட்டுலகத்து மகிழ்ச்சி இல்லை பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லாதது போல.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

குறள் 71

அன்பிற்கும் பிறரை அறியாமல் அடைத்து வைக்கும் தாழுளதோ. (கதவு) தம்மால் அன்பு செய்யப்பட்டவரது துன்பங் கண்டவிடத்து- அன்புடையார் கண் (கள்) பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்ளார்ந்த அன்பினை எல்லோரும் அறிய வெளிப்படுத்தும்.

அன்பின்வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு

குறள் 80

அன்பு முதலாக அதன்வழி நின்ற உடம்பே - உயிர் நின்ற உடம்பாகும். அவ் அன்பு இலாதார்க்கு அமைந்த உடம்பானது- எலும்பைத் தோலாற் போர்த்த உடம்புகளாகும். வெறும் போர்வை. மற்றைய உயிர் இனங்களும் தோலாற் போர்க்கப்பட்டவைதானே. இனி ஆள்வினையுடைமை பற்றிச் சிந்திப்போம். இடைவிடா தெடுக்கும் முயற்சித் திறமை இவ்வதிகாரத்திற் பேசப்படுகிறது செயற்றிறன் கைநேர்த்தி கைப்படிமான மென்றுங் கூறலாம்.

முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்.

குறள் 616

விடாமுயற்சி எனினும் பொருந்தும் - மன்னர்களின் இடையறா முயற்சியின் பயனே செல்வச்செழிப்பு, முயற்சியின்றி சோம்பேறியாய் இருப்பின்வறுமைதான் வந்து சேரும். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் அன்றோ.

தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்.

குறள் 619

நாம் எடுத்த முயற்சி பயனைத் தராவிடினும். இந்த உடல் உழைப்பு ஊதிபம் உண்டு. அன்றோ பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல். இந்தப் பண்புடைமை. மானிடத்தின் ஒரு உச்சநிலை.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது வின்றேல்
மண்புக்கு மாய்வது மன்

குறள் 996

பண்பு உடையார் கண்ணே படுவதால் உலகியல் எக் காலத்தும் நிலைபெற்று வளர்கிறது. அ்.து இல்லாமற் போனால் மண்ணிற்புதைந்து அழிந்துபோகும்.

அரம்போலுங் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பிலாதார்

குறள் 997

நல்ல மனிதத் தன்மை இல்லாதவர் அரம் போன்ற கூர்மையுடையவராய் இருந்தாலும்- ஓரறிவுடைய மரத்தைப் போன்றவர்களே.

பொறுத்தார் பூமியாள்வார் என்பது பழமொழி பூமியைப் பொறுமைக்கு இலக்கியமாய்க் கூறுவர் தாயைப் போன்ற பொறுமை எவருக்குமே இல்லை.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார் பொறுத்தல் தலை

குறள் 151

தன்னைத் தோண்டுகின்றவனையும் விழாமற் பாதுகாப்பது இப்பூமி அ்.தேபோலத் தம்மை அவமதிப்பவரையும் பொறுத்தல் உயர்ந்த பண்பாம். எனவே இந்த உடைமைகளைப் பேணி வாழின உயர்வாம் இன்றேற் தாழ்வாம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர்**
**அ. சண்முகதாஸ் அவர்கள் அகவை எழுபத்தைந்து கண்டு கனடா பெரிய சிவன் கோவிலில் கடந்த 24.01.2015 அன்று பவளவிழாக் கண்டதையொட்டிய**

**வாழ்த்துப்பா**

*(நேரிசை வெண்பா)*



அகமென்னும் கோவிலின்கண் ஆடும் சிலையே
முகமலர்ந்த சண்முகதாஸ் ஐயா - செகத்திலெமை
அன்பால் தழுவி அருந்தமிழ் தந்தமையை
என்றும் மறவோமே நாம்.

முன்னோர் நெறிநின்று மூத்த தமிழ்வளர்க்கும்
பொன்னார் அமுதப் பேரெழிலே - வண்மைசேர்
சந்நிதியில் நல்கியவை சந்ததமும் தேனமுதாம்
அந்நிதியில் வாழ்ந்திடுவோம் நாம்.

அன்பு மாணவன் : ச.லலீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

**369. மாகேசுவரபூசை எப்படிச் செய்தல் வேண்டும்?**

மாகேசுவரர்களைத் தூரத்தே கண்டவுடனே, சிரசின்மீது அஞ்சலி செய்து, விரைந்தெதிர் கொண்டு அழைத்து வந்து, அவர்களுடைய திருவடிகளைத் தீர்த்தத்தினால் விளக்கி, அத்தீர்த்தத்தைச் சிரமேல் தெளித்து, அவர்களைப் பந்தியாக இருத்தி, ஓதுவார்கள் தேவாரம் பண்ணுடன் ஓத, அன்னங்கறி முதலியவற்றைப் படைத்து, பத்திர புஷ்பங்களால் அருச்சனை செய்து, தூபதீபம் கொடுத்து, அவர்களெதிரே பூக்களைத் தூவி, நமஸ்காரம் பண்ணி, எழுந்து நின்று, ஆசீர்வாதம் முற்றிய பின் திருவமுது செய்வித்தல் வேண்டும். அவர்கள் திருவமுது செய்து கரசுத்தி செய்துகொண்டபின், அவர்களெதிரே இயன்ற தக்ஷிணை வைத்து நமஸ்காரம் செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, மீட்டும் நமஸ்காரம் செய்து, சேஷம் புசித்தல் வேண்டும்.

**370. மாகேசுவரப்பூசைப் பந்திக்கு யோக்கியரல்லாதவர் யாவர்?**

சிவ நிந்தகர், குரு நிந்தகர், சங்கம நிந்தகர், சிவசாத்திர நிந்தகர், சிவத்திரவிய அபகாரிகள், அதீக்ஷிதர், நித்திய கருமம் விடுத்தவர் முதலாயினர்.

**371. மாகேசுவர பூசையிலே மாகேசுவரரை யாராகப் பாவித்துப் பூசித்தல் வேண்டும்?**

மாகேசுவரபூசை எந்தத் தேவரைக் குறித்துச் செய்யப்படுகின்றதோ, அந்தத் தேவராகப் பாவித்துப் பூசித்தல் வேண்டும்.

**372. பூசை செய்யப்படும்போது மாகேசுவரர்கள் யாது செய்தல் வேண்டும்?**

பூசிப்பவர்கள் எத்தேவரைக் குறித்துப் பூசிக்கின்றாரோ அத் தேவரைத் தாம் இடையறாது மெய்யன்போடு தியானித்துக் கொண்டிருந்து அப்பூசையை அவருக்கு ஒப்பித்தல் வேண்டும்.

**373. பந்தி வஞ்சனை செய்து புசித்தவரும், படைத்தவரும், படைப்பித்தவரும் யாது பெறுவர்?**

கண்டமாலையால் வருந்துவர்; ஊர்ப் பன்றிகளாய்ப் பிறந்து மலத்தைத் தின்பர்; நரகங்களில் விழுந்து நெடுங்காலம் வருந்துவர். ஆதலினால், வஞ்சனை ஒரு சிறிதும் இன்றி எல்லாருக்கும் சமமாகவே படைத்தல், படைப்பித்தல் வேண்டும். பந்தி வஞ்சனை செய்து படைக்கப்பட்டவைகள் பிசாசுகளுக்கும் இராக்ஷதர்களுக்கும் அசுரர்களுக்குமே பிரீதியாகும்; தேவப் பிரீதியாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**374. மாகேசுவர பூசாகாலத்திலே மாகேசுவரர் அல்லாதவர் வரின், யாது செய்தல் வேண்டும்?**

குருடர், முடவர், குழந்தைகள், வயோதிகர், வியாதியாளர், வறியவர் என்பவர்கள் வரின், அவர்களை விலக்காது, இன் சொற்களினாலே மிக மகிழ்வித்து, அவர்களுக்கும் அன்னங் கொடுத்தல் வேண்டும். வறியவருக்குக் கொடுத்தலே கொடை; செல்வருக்குக் கொடுத்தல் திரும்ப வாங்குதல் பொருட்டுக் கடன் கொடுத்தல் போலும்.

**375. மாகேசுவர பூசை அவசியமாக எவ்வெக் காலங்களிலே செய்தல் வேண்டும்?**

தீக்ஷை பெற்றுக்கொண்டபொழுதும், சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக்கொண்ட பொழுதும், விரதம் அநுட்டிக்கும் பொழுதும், உபவாசம்செய்து பாரணம் பண்ணும் பொழுதும், சிவசாத்திர சிவபுராணங்கள் படிக்கத் தொடங்கிய பொழுதும், படித்து முடித்த பொழுதும், புண்ணிய ஸ்தல யாத்திரைக்குப் புறப்படும் பொழுதும், புண்ணியஸ்தலத்தை அடைந்த பொழுதும், யாத்திரை செய்து திரும்பி வீடு சேர்ந்த பொழுதும், திருக்கோயில் பிரதிட்டை, சம்புரோக்ஷணம், மகோற்சவம் முதலியவை நடக்கும் பொழுதும், வியாதியினாலே பீடிக்கப்பட்டு மருந்து உட்கொள்ளத் தொடங்கும் பொழுதும், வியாதி நீங்கிய பொழுதும், மாகேசுவரபூசை அவசியமாகச் செய்தல் வேண்டும். (பாரணம்- உபவாசத்துக்குப்பின் செய்யும் போசனம்)

**376. அவ்விஷேச தினங்களில் மாகேசுவரபூசை செய்பவர்களும், மாகேசுவரபூசையிலே அருச்சனை ஏற்று அமுது செய்யப்புகும் மாகேசுவரர்களும் அத்தினத்திலே எப்படிப்பட்டவர் களாய் இருத்தல் வேண்டும்?**

மாகேசுவரபூசைக்கு முன்னே யாதொன்றும் புசிக்கலாகாது. அன்றிரவிலே பசித்ததாயின், அன்னம் புசியாது பால், பழம் முதலியவற்றுள் இயன்றது உட்கொண்டு சுத்தர்களாகிச் சிவபெருமானையே சிந்தித்துக்கொண்டு நித்திரை செய்தல் வேண்டும். முதல் நாள் ராத்திரியும் அப்படியே செய்தல் வேண்டும்.

**377. முன் செய்த பாவங்களினால் வந்த மகாரோகங்களினாலே பீடிக்கப்படுவோர் மாகேசுவரபூசை எப்படிச் செய்தல் வேண்டும்?**

ஒரு மண்டலமாயினும், பாதி மண்டலமாயினும், விதிப்படி சிரத்தையோடு புண்ணிய ஸ்தலத்திலே புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானம் செய்து, சிவலிங்கப் பெருமானுக்கு விசேஷபூசை செய்வித்து, மாகேசுவரபூசை பண்ணிச் சேஷம் புசித்துக்கொண்டு வரல்வேண்டும். அதன் பின்னரே மருந்து உட்கொள்ளல் வேண்டும்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆச்சிரமம் அளித்த ஆறுதல்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

வடக்கிலிருந்து தெற்குவரை "யாமிருக் கப் பயமேன்" என்ற முருக மந்திரத்தை ஒலிக்க வைத்த சந்நிதியானின் திருவிளை யாடல்களை, உரத்துச் சொல்வதற்கு வாய்த்த பேற்றினை, சந்நிதியான் ஆச்சிரமம், சிரமம் பாராது செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இடர், துன்பம், அனர்த்தம், வறுமை, நோய் என்று- எங்கு- எப்போ- யாருக்கு வந்தாலும், சந்நிதியான் ஆச்சிரமம், ஒருபோதும் உதவி செய்யப் பின்னின்றதேயில்லை. காரணம் ஆச்சிரமத்தை இயக்குபவன் வேறுயாருமல்ல சந்நிதியானே என்பதாகும்.

ஞானச்சுடர் கார்த்திகை மலரில், "மலையகத்தில் மண்சரிவினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கும், மண்சரிவு அபாயத்தை நோக்கிய மக்களுக்கும் ஆன்மீக சமூகப் பணிகளை ஆச்சிரமம் நீடித்துள்ளது" என்ற செய்தி மிகுந்த ஆறுதலைத் தந்துள்ளது. சைவமகா சபை, அளவோலை (அழகொல்லை) விநாயகர் ஆலயம், கிளிநொச்சி மலையாள புரம் கற்பக முத்துமாரி அம்மன் ஆலயம், யாழ் சிவத்தமிழ் மானிட விடியற் கழகம், யாழ் வன்னிப் பிராந்திய சிவதொண்டர் அமைப்பு, திருகோணமலை சிவன் மானிட மேம் பாட்டு நிறுவனம், அம்பாறை சிவநெறிக்கூடம், அம்பாறை சைவநெறிக்கூடம் ஆகிய அமைப் புக்களும் ஒன்றிணைந்து மலையகத்தின் கண்ணீரைத் துடைத்திட எடுத்த முயற்சிக்கு இறைவன் தொடர்ந்தும் கை கொடுப்பான் என்பது திண்ணமே.

திரு சி. தில்லைநாதன் அவர்கள் வரைந்த கட்டுரையும், அமைந்த ஐந்து (5) படங்களும் ஞானச்சுடருக்கு ஒரு கௌர வத்தைக் கொடுத்ததெனலாம். கார்த்திகையின் அடையாளமாக சுடர் தன்னை ஒரு சுவடாக்கி யுள்ளது. சம்பந்தப்பட்ட மக்களுக்கு எது வேண்டுமோ, எது தேவையோ அதையுணர்ந்து, உணவாக, உடையாக, உரையாக, உணர் வாக, நூலாக, இசையாக, இடமாக, பிரார்த் தனையாக, பஜனையாக, பரோபகாரமாக, ஆரோக்கியமாக அவர்களுடன் வாழ்ந்து, அளவளாவி, உளமான்யமளித்து, "நாமிருக் கிறோம்" என்ற வாழ்வளித்து, அவர்களின் ஆன்மீக, சமூக, கல்வி மேம்பாட்டிற்காக உத வும் திடசங்கற்பத்தை ஆச்சிரமம் மேற் கொண்டமை கோடி புண்ணியமாகும்.

துயருற்ற, இடர்பட்ட மக்கள் யாராக இருந்தாலும் தொடர்ந்து அவர்களை நெருங்கி, அணுகும்போதும், ஆறுதல்படுத்தும் போதும், உதவிடும் போதும், சம்பந்தப்பட்ட மக்களுக்கு, ஆழமான "தெம்பு" ஏற்படுகிறது. எப்படியென்றால், 'எங்களுக்கும் உறவுகள் உண்டு, தெய்வம் எங்களைக் கைவிடாது!, நாமும் இந்த உலகத்தில் தலைநிமிர்ந்து வாழலாம், எமது பிள்ளைகளுக்கும் வாழ்க்கை யுண்டு, மனிதாபிமானம் கொண்ட மக்கள் எம்மைக் கைவிடமாட்டார்கள், எங்கள் சமயம் எமக்காகக் கைகொடுக்கும், எமக்காகப் பிரார்த் தனை செய்யும், நாம் தோற்றுப் போகமாட் டோம், நாம் படிக்க வேண்டும், உழைக்க வேண்டும் என்ற புனர்வாழ்வு அவர்கள் மனதில் குடிகொள்ளும். அதுவே போதும். அதைத்தான் இறைவனும் எதிர்பார்க்கின்றான். அதையே சமயமும், சமூகமும் எதிர்பார்க் கிறது. இதையே சந்நிதியான் ஆச்சிரமம் முப்போதும் செய்கிறது. இனியும் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும். அதற்குத் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் என்றும் வரமளிப்பான். நாமும் கரங்கொடுப்போமாக. மேலும் நாம் ஆயத்தம் செய்யவேண்டிய பூர்வாங்க ஏற்பாடுகளால், அல்லலுறும் அம்மக்களுக்கு ஆறுதலைக் கொடுக்க முடியும்.

1) ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்நெறி ஆகிய ஏழுமடங்கிய நூலொன்றினை ஒவ்வொருவருக்கும் கையளித்தல். அதில் உலக நீதியான “ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்” என்ற பாடல் தொகுப்பை பாட வைத்து உலகநீதியை வாழ்வாக்குதல் உளத்தைச் சாந்தப்படுத்துதல்.


2) திருவங்கமாலை - பதிகம்,
திருநீற்றுப்பதிகம் - பதிகம்,
திருக்கேதீஸ்வரப் பதிகம் - பதிகம்,
திருகோணமலைப் பதிகம் - பதிகம்,
சிவபுராணம் இவை யாவும் அடங்கிய நூல் தயாரிக்கப்பட்டு இசையோடு வழங்குதல். (பஜனைப் பாடல்களும் அடங்கும்படி)

3) உள, உடல் நோய் சிகிச்சை வழங்குதல்,

4) சத்துள்ள உலருணவுகள் வழங்குதல்,

5) தூய திருநீறு, ஏட்டுச் சுவடிகள் வழங்குதல்,

6) பொருத்தமான ஏனையனவற்கு இடமளித்தல். வேண்டத்தக்கதறிந்து, வேண்ட முழுதும் தருவாய் முருகா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | | |
|---|---|---|---|
| சி. பத்மநாதன் | மக்கள் வங்கி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ப. பார்த்தீபன் | மக்கள் வங்கி | சுண்ணாகம் | 5000. 00 |
| திருமதி K. வைஜெயந்தி | மக்கள் வங்கி | திருகோணமலை | 5000. 00 |
| A. ஐங்கரன் | மக்கள் வங்கி | திருகோணமலை | 5000. 00 |
| E. செல்வேஸ்வரன் | | பாட்டா பாதணி முகவர் | 5000. 00 |
| க. மதிவதனன் | மக்கள் வங்கி | சேருநுவர | 10000. 00 |
| கு. கோடீஸ்வரன் | மக்கள் வங்கி | வவுனியா | 10000. 00 |
| திருமதி C. சிவலிங்கம் | | கனடா | 5000. 00 |
| திருமதி சு. விஜயகுமார் | டச்சுவீதி | கோப்பாய் | 10000. 00 |
| சு. சுரேந்திரரட்ணம் | டச்சுவீதி | கோப்பாய் | 5000. 00 |
| குலேந்திரன் செல்வராணி குடும்பம் | | லண்டன் | 2500. 00 |
| மு. கனகரத்தினம் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி, 1புட்டி பருப்பு, 2புட்டி உருளைக்கிழங்கு, மரக்கறிவகை |
| சி. உசங்கர் | | கொக்குவில் மேற்கு | 3000. 00 |
| திரு தில்லைச்சிவம் | | மண்கும்பான் | 10000. 00 |
| S. குணரட்ணம் | | தொண்டைமானாறு | 6000. 00 |
| பாலமுரளி மதுமிலன் | | லண்டன் | 5000. 00 |
| சி. திருஞானசம்பந்தர் | | காரைநகர் | 5000. 00 |
| கருணாநிதி நித்திலா | | சுவிஸ் | 1மூடை அரிசி |
| அ. கோகிலாதேவி | | அல்வாய் | 2000. 00 |
| க. யோகரட்ணம் | சாரையடி | பருத்தித்துறை | 12000. 00 |
| த. மங்களேஸ்வரி | தும்பளை | பருத்தித்துறை | 5000. 00 |
| ந. ரஜீவன் | | சுழிபுரம் | 500. 00 |
| பா. விஷ்ணுதாஸ் | | இணுவில் | 500. 00 |
| ச. நவரத்தினராசவேல் | | புத்தூர் | 1000. 00 |
| இ. உதயகுமார் | | சிறுப்பிட்டி வடக்கு | 2000. 00 |
| ஜெ. கீர்த்தனா | | நவாலி | 1புட்டி அரிசி |
| நா. பஞ்சலிங்கம் | | குப்பிளான் | 10000. 00 |
| சே. ராஜதிலகம் | | இடைக்காடு | 5000. 00 |
| இ. திருஞானசம்பந்தர் | | மலேசியா (தொண்டைமானாறு) | 25000. 00 |
| வசந்தா சிவதாஸ் | | அமெரிக்கா (தொண்டைமானாறு) | 10000. 00 |
| வியாவில் ஐயனார் தேவஸ்தானம் | | காரைநகர் | 4மூடை அரிசி |
| சி. அஷிதன் | | வட்டுக்கோட்டை | 2000. 00 |

*முழு மூச்சுடன் இறங்கினால் முடியாதது ஒன்றுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| K.K. சிதம்பரநாதன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சி. சசிதரன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சி. கௌதமி | அச்சுவேலி | 1000. 00 |
| செ. கௌசிகா | அச்சுவேலி | 500. 00 |
| வா. மனோராஜி | லண்டன் | 20000. 00 |
| சி. தரண்ஜன் | சுழிபுரம் | 1000. 00 |
| K. சதாசிவம் குடும்பம் | நல்லூர் | 1000. 00 |
| க. பரமகுருநாதன் | நல்லூர் | 1000. 00 |
| ஐயாத்துரை மனோண்மணி | மல்லாகம் | 1500. 00 |
| வாகீசன் விற்பனை நிலையம் K.K.S. றோட் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| செ. அருமை | இளவாலை | 1000. 00 |
| வி. இராசேஸ்வரி | பருத்தித்துறை | 1000. 00 |
| S. லோஜினி | தெல்லிப்பழை | 1000. 00 |
| த. சற்குணராசா | காரைநகர் | 1000. 00 |
| ச. குருகுலசிங்கம் | சோழங்கன் | 1000. 00 |
| வ. ராசநாயகம் | கரவெட்டி கிழக்கு | 5000. 00 |
| கு. பிரதீபன் | பருத்தித்துறை | 3000. 00 |
| சிவகுமார் குலவதனி | உடுப்பிட்டி | 4000. 00 |
| சி. தவேந்திரன் | கரவெட்டி | 5000. 00 |
| S. வரதராஜா | நல்லூர் | 500. 00 |
| K. நவரட்ணஜோதி | திருகோணமலை | 15000. 00 |
| ந. விநாயகசுவாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பொ. சிவஈஸ்வரன் | நீர்வேலி | 500. 00 |
| ந. மனோகரன் | தாவடி | 500. 00 |
| தே. கேசவன் | புத்தூர் | 4000. 00 |
| செல்வம்ஸ் | சங்கானை | 1மூடை அரிசி |
| திரு ஸ்ரீகாந்தன் | கரணவாய் | 2000. 00 |
| க. கதிர்காமத்தம்பி | கொற்றாவத்தை | 1000. 00 |
| சீ. தங்கரூபன் | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. சிவராசா | சுண்ணாகம் | 1000. 00 |
| வீ. சத்தியவேணி | புங்குடுதீவு | 1500. 00 |
| வை. கலைநாதனி | ஆவரங்கால் | 500. 00 |
| சி. மெய்யழகன் | வரணி | 2000. 00 |
| ம. நாகேஸ்வரி | கரணவாய் | 2000. 00 |
| சி. கதிரவேல் கெருடாவில் | தொண்டைமானாறு | 3000. 00 |
| K. கிருஸ்ணபாலன் | நெல்லியடி | 3000. 00 |
| ச. ஆறுமுகநாதன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| இ. தயாபரன் K.K.S வீதி | கோண்டாவில் | 3000. 00 |
| திரு ரட்ணசிங்கம் | உடுப்பிட்டி | 1500. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காயின் சிறப்பு

– செல்வி செ. ஐடா அவர்கள் –

எந்தக் கருமத்தைத் தொடங்கும் போதும் அந்தக் கருமம் விக்கினமின்றி வெற்றி யுடன் முடிய வேண்டுமெனப் பிள்ளையாரை நினைத்துத் தேங்காய் உடைத்து வழிபாடு செய்கின்றோம்.

சுபகாரியங்கள் ஆரம்பமாவதற்கு முதல் வழிபாடு பிள்ளையார் பூசை ஆகும். யாவும் சுபமாக முடியவேண்டுமென "வக்ர துண்ட மகாகாயம் கோடி சூரிய சமர்ப்பயாமி" என்ற மந்திரத்தைச் சொல்லி தேங்காயை உடைப் பர். சடங்குகளாயின் உறவு முறையினருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்கள் தான் தேங்காயை உடைப்பார்கள்.

திருமண வைபவங்களில் பெண்ணை மாப்பிள்ளைக்கு கன்னிகாதானம் பண்ணிக் கொடுக்கும் பொழுதும் திருமாங்கல்யம் கட்டும் பொழுதும் தேங்காய் உடைக்கப்படும். வீட்டிலிருந்து சுபகாரியங்கள் நிகழ்த்துவதற் குப் புறப்படும்பொழுது வாசலில் சிதறுதேங்காய் உடைத்துவிட்டுத்தான் புறப்படுவர். எந்தச் சுப காரியங்களோ அன்றி சடங்குகள், கிரியைகளோ எல்லாவற்றுக்கும் தேங்காய் பிரதானமானது. கிரியைகளுக்கு குடுமியுடன்தான் தேங்காய் பாவிக்கப்படல்' வேண்டும்.

ஆலயங்களில் அர்ச்சனை செய்யச் சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் ஆலய வாயி லில் தேங்காய் உடைத்து வழிபாட்டினைச் செய்யலாம். ஆலயத்திற்குச் செல்லும்பொழுது அர்ச்சனைக்காகவோ அன்றி வழிபாட்டிற் காகவோ தேங்காயைக் குடுமியுடன் எடுத்துச் செல்கின்றோம். தேங்காய் எமது தலையைக் குறிக்கின்றது. குடுமியிலுள்ள தும்புகள் எப் பொழுதும் எம்மைப்பற்றியிருக்கும் வாழ்வுச் சிக்கல்களைக் குறிக்கின்றன. இறை சந்நி தானத்தை அடைந்து பூசை ஆராதனைகள் நடாத்துமிடத்து தேங்காய் உடைக்கப்படு கிறது.

இறைவன் அருள் எம்மிற் பதிந்து மனம் சாந்தி அடைகின்றது. இதனைக் குறிக்குமுகமாக உடைக்கப்பட்ட தேங்காயின் குடுமி அகற்றப்படுகின்றது. மூன்று கண்ணுள்ள தேங்காய்ப் பாதி பிரசாதமாக எமக்கு அளிக் கப்படுகின்றது. இறைவன் முக்கண்களாலும் எமக்கு அருள் பாலித்துள்ளார் என்பதையும் எம்முள் ஞானமாகிய கண் திறந்துவிட்டது என்பதனையும், எமது அறியாமை என்ற திரை அகற்றப்பட்டுவிட்டது என்பதனையும் இது குறிப்பதாகும். முக்கண் உடையபாதி பிரசாத மாகக் கிடைத்தவுடனே எம்மிடம் ஆத்மபலம் கூடுகின்றது. உளப்பூரிப்புடன் ஆலயத்தில் இருந்து திரும்புகிறோம்.

தேங்காய் உரிக்காத நிலையில் தேங் காயின் மேலேயுள்ள பச்சைமட்டை மாயா மலம். அதாவது பலவித வர்ணவித்தை களைக் கொண்டுள்ள உலகம். உரித்து எடுக் கின்ற நார் கன்மமலம். முழுத்தேங்காயின் பச்சை மட்டையை உரித்து உள்ளே உள்ள தும்பு நார் பகுதிகளைக் கவனமாக எடுக்க வேண்டும். உள்ளே தேங்காயின் ஓடு ஆணவ மலம். ஆணவமலம்தான் எல்லாச் செயல்களை யும் செய்யத் தூண்டுகின்றது. சரியான முறை யில் ஓடு உடைக்கப்பட்டால்த்தான் தேங்காய் எமது தேவையைப் பூர்த்தி செய்யும். எனவே எம்மிடமுள்ள இந்த மூன்று ஆசைகளும் நீங்கப் பெற்றால் "சித்த சுத்தி" கிடைக்கும் என்பதைத் தேங்காயை உடைத்தபின் கிடைக் கும் வெண்மையான பருப்பு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. மும்மலங்களான ஆணவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மம், மாயை மூன்றும் பீடித்து எம்மை ஆட்டிப்படைக்கின்றன. இம் மலங்களை அகற்றி இறையருள் பெறு வதையே தேங்காய் உடைக்கும் கிரியை உணர்த்துகின்றது.

பிள்ளையாருக்கு மோதகம் போன்று தேங்காயும் முக்கிய நிவேதனப் பொருளாகும். தேங்காய் உடைத்தல் என்பது உளவுணர் வுடன் தொடர்புபட்டது. சரியான முறையில் தேங்காய் பாதியாகிவிட்டால் உள்ளத்தில் பூரிப்பு ஏற்படுகின்றது.

ஆலயத்தில் வழிபடும் பக்தர்களில் பெரும்பாலானோர் தேங்காயின் மேல் கற்பூரத் தைக் கொழுத்தி வைத்து வீதி வலம் வந்து அதனைச் சிதறு தேங்காயாக உடைப்பர். பூசைப் பொருட்கள் யாவற்றையும் ஆலயப் பூசைக்காகக் கொண்டு செல்லாவிட்டாலும் தேங்காயை எடுத்துச் செல்வதற்கு எவரும் மறக்க மாட்டார்.

சுபகாரியங்களில் பயன்படுத்தப்படும் தேங்காயில் மஞ்சள்பூசி வைக்கப்படும். நிறை குடத்திற்கு மேல் வைக்கப்படும் தேங்காய்க்கு மஞ்சள் பூசி, சந்தனம், குங்குமம் இட்டு உச்சி யில் பூவும் வைக்கப்படும். கும்பங்களுக்கும் தேங்காய் முக்கியமானது.

இளநீர் அபிடேக திரவியங்களில் ஒன் றாகும். இதனால் அபிடேகம் செய்யப்படு வதால் கிடைக்கப்பெறும் பலன் நன்மகட் பேறாகும். முதன்முதலாகப் பிறந்த குழந்தையை ஆலயத்துக்குக் கொண்டு செல்லும்பொழுது தென்னங்கன்றினை ஆலயத்திற்கு அளிக்கும் மரபு இன்றும் எம்மிடையே உள்ளது.

பக்தர்கள் தமது காரியங்கள் தடை யின்றி நிறைவேற்றுவதற்காக குலதெய்வங் களுக்கு நேர்த்திவைத்து சிதறு தேங்காய் உடைக்கும் வழக்கமும் உண்டு. புத்தாண்டு தினத்தன்று பிரதேச வழக்கமாக போர்த் தேங்காய் அடிக்கும் வைபவம் இன்றும் சில கிராமங்களில் நடைபெற்று வருவதைக் காண லாம். ஆலய உற்சவங்களில் தேர்த்திருவிழா வன்று தேரை இழுப்பதற்கு முன் சிதறு தேங் காய் அடிக்கப்படும். முக்கியமாக நிறுவனங் களின் முன்னால் தேர் வருமிடத்து சிதறுதேங் காய் அடிப்பார்கள். சிதறு தேங்காயாக அடிக்கு மிடத்து குடுமியினை அகற்றுதல் கூடாது குடுமியுடன்தான் அடிக்கப்படல் வேண்டும்.

கல்லில்மோதி உடைப்போர்க்குச் சிதறுதேங்காய் நிவேதனமாவதுபோல நாமும் எவர்க்கும் நன்மை செய்தல் வேண்டும் என் பது இதன் தாற்பரியமாகும். திருமணத்தை நிச்சயப்படுத்தியவுடன் தாம்பூலம் மாற்றுதல் இடம்பெறும். அதில் தேங்காய் மஞ்சள் பூசிய படி வைத்தல் முக்கியம். ஆசிய நாட்டு மக்க ளின் உணவு வகைகளுக்கு ருசியினை ஊட் டும் பொருளாகவும் தேங்காய் பயன்படுகின்றது.

## சந்நிதியான்

செல்வாக்கு செல்வம் கல்வி
இருக்கும் இடத்தில் தான்
செல்வச் சந்நிதியான் அருள்
இருக்கும் என்பதும் இல்லை
இல்லை யென்பதும் இல்லை
அவன் அனுக்கிரகம் பெற்றால்
எல்லோர்க்கும் என் நிதியும்
தருவான் சந்நிதியான் காண்!

*-இராம ஜெயபாலன்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 04

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## மனத் தூய்மையே மனதின் செல்வம்

01) மனத்தூய்மை பற்றிய சித்தர்களின் கருத்து

மனத்துக்கண் மாசில்லாமல் இருப்பதுவே அறம் என்கிறார் வள்ளுவர். மனத்தாலும் பிறர்க்குத் துன்பம் நினைக்காமல் இருப்பதுவே பேரறம் என்கிறார். மனத்தூய்மை இல்லாமல் செய்யும் செயல்கள் யாவும் வெளிவேஷமே ஆகும்.

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற -திருக்குறள்.

அமைதி என்பது ஒருவருக்கு மிக உரித்தான மனச் செல்வமாகும். மன அமைதியைச் சிதைக்கும் விடயங்களை உள்ளத்தின் புனிதமான எல்லைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது. அமைதியையும் ஆனந்தத்தையும் அகத்திலே பொழிந்து நம்மை ஆள்பவராக இறைவன் மட்டுமே இருக்க வேண்டும். மனம் ஒரு மதயானை போன்றது; காற்றைப் போல் விரையும் தன்மை உடையது. புறத்திலே புயலும் சூறாவளியும் உருவாகினால் மரங்கள் பல வேரோடு சாயும். உறுதியான கட்டிடங்களே ஆட்டம் காணும். வீட்டுக் கூரைகளும் தூக்கி வீசப்படும். மனிதனுடைய மனத்திலே புயல்வீச ஆரம்பித்தால் அவனால் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் சிதைவு பெறும்; சீரழியும்.

சமநிலை தளம்பாத மன நிலைபெறுபவனே யோகி. மனம் ஒரு நிலைப்படாமல் யோகம் கைகூடாது. யோகிக்கு மனம் வசப்பட்டிருக்கும்; யோகி மனதிற்கு வசப்பட்டிருக்க மாட்டான். மனதைக் கண்டபடி அலைய விடாது தனக்குரிய கடமைகளைச் சரியாகச் செய்வது மேலானது. அலைகின்ற மனம் குழப்பத்தையே உருவாக்கும். பற்றற்று பணி செய்தலே மன அமைதிக்குச் சிறப்பான வழி எனக் கிருஷ்ணபரமாத்மா கீதையிலே கூறுகின்றார். செயலில் துறவு வேண்டுமே ஒழியச் செயலைத் துறத்தல் கூடாது என்றே கீதையின் கர்மயோகமும் குறிப்பிடுகிறது.

புலன்களை நாடி எப்போதும் புறத்தே செல்லும் மனதின் ஓட்டத்தைத் தடுத்து அதனை உள்ளே திருப்பவேண்டும். அலைபாயும் மனம் ஒரு நிலைப்பட வேண்டும். தகுந்த மேய்ப்பாளர் இல்லாமல் அலையும் புலன்களின் வெறி அடங்கினால் கள்ளப் புலன்கள் ஐந்தும் ஆன்மாவிற்கு ஒளியைத் தரும் ஞான விளக்குகளாக மாறிவிடும். “கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்கே” எனத் திருமந்திரம் இதனைக் குறிப்பிடுகிறது. மனத்தில் தூய எண்ணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். “நல்லவை எண்ணல் வேண்டும்” என்றே மகாகவி பாரதியாரும் கூறுகின்றார். தூய்மையே வலிமை; தூய்மையே கடவுள்; தூய்மையான எண்ணத்துடன் வாழ்பவனுக்கு எதிரிகள் என யாரும் இல்லை. இறைவனிடம் இறவாத இன்ப அன்பு கொண்ட சித்தர்களின் உள்ளம் எப்பொழுதும் ஆழ்ந்த அமைதியுடையதாக இருக்கும். நோய், மரணம் முதலியவற்றால் அச்சம் கொள்ளத்தகாதவர்களாக இருப்பார்கள். மனிதர்கள்

*ஆசை கண்ணைக் குருடாக்கிறது. காதைச் செவிடாக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலே தெய்வத்தின் பிரதிநிதியாக, தேவதூதனாக மனிதகுலம் இழிந்துபடாமல் காப்பாற்றி அவர்களை மேல்நிலைக்கு அழைத்துச் செல்பவர்களாகச் சித்தர்கள் திகழ்ந்தார்கள்.

ஒருவர் யாரிடமும் பேசாமல் மௌனமாக இருக்கலாம். ஞானத்தை அறிந்த யோகிபோல நடிக்கலாம். நாட்டைத் துறந்து காட்டிலே போய் வாழலாம். ஆயினும் உள்ளத்திலே தூய்மையில்லாதவர்களாயிருந்தால் பயன் எதுவும் இல்லை. உள்ளத்திலே குற்றங்களுக்கு ஊற்றுக்குழியான ஆசையை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் நாட்டிலிருந்தாலும், காட்டிலிருந்தாலும் ஒரே தன்மை உடையவர்களாகவே இருப்பார்கள். இவர்களுடைய மனப் பாசியாகிய அழுக்கு ஒரு காலமும் நீங்காது. இவர்கள் அன்பையோ அறிவையோ பெறமாட்டார்கள். உண்மையான அறிவான இறைவனைக் காணவும் மாட்டார்கள். உள்ளத்தில் தூய்மை உள்ளவர்கள், மனமாசு அற்றவர்கள் மௌனமாக இருந்து ஞான நெறியிலே நடப்பவர்கள் உண்மையாளர்கள் ஆவார்கள். இவர்களே யோகிகள், ஞானிகள், சித்தர்கள் என்று போற்றுதற்குரியவர்கள். இவர்கள் உயிர் நோயாகிய பிறவி நோய் நீங்கப் பெற்றவர்கள். இக்கருத்தினைச் சித்த புருஷராகிய சிவவாக்கியரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

மனத்து அகத்து அழுக்கு அறாத மவுன ஞானயோகிகள்
வனத்து அகத்து இருக்கினும் மனத்து அகத்து அழுக்கு அறார்
மனத்து அகத்து அழுக்கு அறுத்த மவுன ஞான யோகிகள்
முலைத் தடத்து இருக்கினும் பிறப்பு அறுத்து இருப்பாரே

புலனடக்கம் என்பது அவற்றைத் தீய வழியிற் செலுத்தாது தூயவழியிற் செலுத்துதலே ஆகும். இவ் உண்மை திருவருள் வயப்பட்டவர்களுக்கே தெரியவரும். ஏனையோர் பொறி புலன்களைச் செயலறச் செய்தலே அடக்குதல் என்பர். இறை சிந்தனையோடு வாழ்பவர்களுக்கு ஐந்து புலன்களும் ஞானத்தை உணர்த்தும் கருவிகளாகச் செயற்படுகின்றன. பிரபஞ்ச வாழ்வில் அழுந்தி வாழ்பவர்களுக்கு இந்த ஐந்து புலன்களும் கள்ளப் புலன்களாகவே காணப்படுகின்றன. அறிவற்ற மூடர்கள் புலன்களை அடக்குங்கள் என்று ஓயாது கூறுவார்கள். வானுலகத் தேவர்களாற் கூட ஐம்புலன்களையும் அடக்க முடியாது. ஐம்புலன்களையும் அடக்கிவிட்டால் உடம்பு உணர்வேதும் இல்லாத உணர்ச்சியற்ற மரக்கட்டை போலச் சடம் ஆகிவிடும். ஐம்புலன்களையும் சிவ சிந்தையில் செலுத்தியே ஞானத்தைப்பெற வேண்டும். அறிவற்ற கல்போலச் சடமாகி விடுவதே அசேதனமாகும்.

அஞ்சுமடக் கடக்கென்பர் அறிவிலார்
அஞ்சுமடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சுமடக்கில் அசேதனமா மென்றிட்டு
அஞ்சு மடக்கா அறிவறிந்தேனே

-திருமந்திரம்.

இடைக்காட்டுச் சித்தர் மனத்தை மாடாகவும் சினத்தைப் பாம்பாகவும், ஆசையைப் பசுவாகவும் உருவகித்துப் பாடியுள்ளார். மனம் அடங்கினால் முத்தி என்றும். சினம் அடங்கினால் சித்தி என்றும், ஆசை நீங்கினால் அண்ட சராசரமெல்லாம் கலந்திருக்கும் இறைவனின் வியாபகத்தைக் காணலாம் என்றும் இடைக்காட்டுச் சித்தர் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே - முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே!
சினம் என்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே! யாவும்
சித்தியென்று நினையேடா தாண்டவக்கோனே!
ஆசையெனும் பசு மாழின் தாண்டவக்கோனே!
அண்டமெல்லாம் கண்டறிவாய் தாண்டவக்கோனே!

ஐந்து பொறிவழியே போய் அலையும் மனத்தைப் பாழ்மனம் என்றும், கள்ளமனம் என்றும் பத்திரகிரியார் சாடுகின்றார். மனத்தை ஒரு வில்லாக்கி வான் பொறியை அதன் நாணாக்கி அறிவை அம்பாக்கி எய்ய முயன்றால் முயற்சி எளிதில் கைகூடும் என்றும் திட்டமிட்ட இலக்கினைச் சரியாக அடைய முடியும் என்றும் கூறுகின்றார்.

"மனத்தை ஒரு வில்லாக்கி வான் பொறியை நாணாக்கி
எனதறிவை அம்பாக்கி எய்வது இனி எக்காலம்"
-பத்திரகிரியார்-

அகத்தியர் வலியுறுத்தும் அடிப்படை அறமும் மனச் செம்மையே ஆகும். மனமது செம்மையானால் மந்திரம் செபித்தல், வாயுவை உயர்த்தல், வாசியை நிறுத்தல் முதலான எவையும் தேவையில்லை என்கிறார். "மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாகும்" என்பதை அகத்தியர் பின்வரும் தனது பாடலின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே.

மனம் ஒரு நிலம் போன்றது. நிலத்தில் நாம் கரும்பையோ நெல்லையோ வளர்க்கலாம். எதையும் வளர்க்காமல் போனால் அந்தப் பூமி தரிசாகிப் போய்விடும். அது போன்றே நாம் மனதில் எப்போதும் நல்ல எண்ணங்களையும், ஆக்கபூர்வமான சிந்தனைகளையும் கொண்டிருந்தால், நம் மனம் ஒரு சோலையாகவும் இனிய மலர்கள் பூத்துக் குலுங்கும் பூங்காவனமாகவும் இருக்கும். நாம் வாழ்கின்ற வாழ்க்கை நமக்கு மட்டுமன்றி இந்தச் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் எண்ணத்தோடும் நாம் வாழ வேண்டும். ஏனென்றால் வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை என்ற பொருளோடு இயைந்து நம் வாழ்க்கை அமைந்தால்த்தான் இப்பிறவியின் பயனை நாம் அடைந்ததாக இருக்கும்.

மனத்தைக் குரங்கிற்கு ஒப்பிட்டு அறிஞர் பெருமக்கள் கூறுவார்கள். குரங்கு ஒரு இடத்தில் நிலையாக நிற்பதில்லை அடிக்கடி கொப்புக்கு கொப்பு தாவிப் பாயும். இதேபோன்று மனித மனமும் அலையும் தன்மை உடையது. ஒரு இடத்தில் நிலையாக நில்லாத குரங்கு பனை மரத்திலேறிக் கள்ளைப் பருகினால் அதன் நிலை எவ்வாறு இருக்கும்? கள்ளைப் பருகிய போதையோடு குரங்கு மரத்தால் இறங்கி வரும்பொழுது அதைத் தேள்கொட்டி விட்டால் குரங்கு படும்பாட்டைப் போலவே மனித மனமும் அல்லற்படுகிறது. இயற்கையாகவே மனது குரங்கைப் போலச் சஞ்சலமானது. காமமாகிய கள்ளின் வெறியும், குரோதமாகிய தேளின் விஷமும் சேர்ந்து அதை இன்னும் பதட்டமுள்ளதாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) மாசற்ற மனதில் சிவ ஒளி பிரகாசிக்கும்

உள்ளம், பேச்சு, செயல் எல்லாம் ஒன்றுபட்டிருக்க வேண்டும். இதுதான் நல்ல மனிதரின் இயல்பு. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் தூய்மையாக இருந்தால் செய்கின்ற காரியங்கள் எல்லாம் திருவருள் துணையால் சித்திக்கும் என்பதைத் "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்" எனத் தாயுமான சுவாமிகள் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். ஏழைகள், நாகரிகமற்றவர்கள் எனக் கருதும் மக்களில் பலர் திரிகரண சுத்தியுடன் வாழ்கின்றார்கள். ஆனால் படித்தவர்கள் அறிவுடையவர்கள், நாகரிகம் உள்ளவர்கள், உயர்ந்தவர்கள் என்று தம்மை நினைத்துக் கொண்டிருப்பவர்களிடம் எண்ணமும், பேச்சும், செயலும் ஒன்றாக இருப்பதைக் காணுதல் அரிது. அவர்கள் ஒன்றை நினைப்பார்கள். நினைப்பை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு நினைத்திருப்பதற்கு நேர்மாறாகப் பேசுவார்கள். செயலிலே இறங்கும்போது சொல்லுக்கு மாறாகச் செயற்படுவார்கள். இத்தன்மை உள்ளவர்களை அறிவாளி, திறமைசாலி, கெட்டிக்காரன், காரியவாதி, சாமர்த்தியசாலி என்று பலவாறாக நமது சமூகத்தில் உள்ள பலர் புகழ்மாலை சூடுகின்றார்கள். நினைப்பும் சொல்லும், செயலும் ஒன்றாக உள்ளவர்களை வாழத் தெரியாதவர்கள். அறிவில்லாதவர்கள், வெகுளிகள், ஏமாந்தவர்கள், காரியம் செய்யும் திறமையற்றவர்கள் என இழிவாகப் பேசுகின்றார்கள்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் எவ்வளவுதான் அறிவாளியாக இருந்தாலும் அவர்கள் ஒழுக்கம் அற்றவர்கள் என்பதில் ஐயம் இல்லை. வஞ்சகர்கள், கபடர்கள் சூழ்ச்சிக்காரர்களாகவே அவர்கள் இருப்பார்கள். கள்ள உள்ளம் படைத்தவர்கள் ஞான நூல்கள் பலவற்றைப் படித்தாலும் அதனால் எதுவித பயனும் இல்லை. உள்ளத் தூய்மை இல்லாமல் கூறும் அறிவுரைகளாலும் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை. தமது திறமை, தமது சக்தி, தமது ஒழுக்கம் எல்லாம் தமது உள்ளமே என்ற உண்மையை உணர்ந்தவர்கள் தான் தெளிந்த ஞானம் உள்ளவர்களாய் விளங்குவார்கள். உள்ளம் தூய்மை பெறுவதற்கும். எல்லாம் வல்ல அறிவு என்னும் ஒளி அகத்திலே பிரகாசிப்பதற்கும் "சிவாயநம" என்ற சிவமூல மந்திரத்தை நினைக்க வேண்டும். வேறு தீய நினைப்புக்கள் எதுவுமே இல்லாமல் தூய ஒழுக்கத்துடன் வாழவேண்டும்.

தூய்மையற்ற கள்ள உள்ளத்துடன் கூடி இருந்து சிறந்த ஞான நூல்களை ஓதுகின்றீர்கள். வஞ்சனையை அகத்திலிருந்து அடியோடு நீக்கினால் நல்ல கதியைத் தவிர தீயது எதையும் காணமாட்டீர்கள். உள்ளத்தை மாசற்றதாக வைத்துக் கொண்டால் தூய அறிவொளியை அகத்திலே காணலாம். இதற்குச் சிவாயநம என்னும் மந்திரமும் துணை செய்யும் என்பதைச் சிவவாக்கியரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

கள்ள உள்ளமேயிருந்து கடந்த ஞானம் ஓதுவீர்!
கள்ளம் உள் அறுத்தபோது கதிஇது அன்றிக் காண்கிலீர்
உள்ளமே விளக்கி நித்தம் ஒளி அணுக வல்லிரேல்
தெள்ளி ஞானம் உம்முளே சிறந்த சிவாயநம"

இறைவன் எவர் கண்ணிலும் புலப்படாமல் இயற்கை சக்தியாக இருக்கிறான். பஞ்ச பூதங்களிலும் வியாபித்து நின்று அவற்றை இயக்குகிறான். இதனை "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி" எனத் திருவாசகமும் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அகத்துறையும் அழகனாக இறைவன் வீற்றிருக்கின்றான். உள்ளத்தை தூய்மையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமலும், அகத்திலே குழப்பங்கள் இல்லாமலும் பேணி வந்தால் இறையுணர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

“கட்புலனுக்கு எள்ளளவும் காணாதிருந்து எங்கும்
உட்புலனாய் நின்ற ஒன்றை உய்த்து அறி நீ புல்லறிவே”

-இடைக்காட்டுச் சித்தர்-

சுற்றுப் புறத்தையும், உடலையும் தூய்மையாக வைத்திருந்தால் மட்டும் போதாது. இறைவன் உறைகின்ற இடமாகிய உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். உள்ளமும் கோயிலும் வேறல்ல, இரண்டும் ஒன்றே என்கிறார் அகப்பேய்ச்சித்தர். கடல் நீரினில் உப்பும் நீரும் கலந்திருப்பது போலவே இவையும் பிரிவின்றிக் கலந்து உள்ளன என்கிறார்.

ஒப்பனை அல்லவடி! அகப்பேய்
உன் ஆணை சொன்னேனே!
அப்புடன் உப்பெனவே அகப்பேய்
ஆராய்ந்திருப்பாயே

(அப்பு- நீர்)

ஒருவர் மிகச்சிறந்த செல்வந்தராக இருந்தாலும் அவருடைய உயிர் உடலை விட்டுப் பிரியும்பொழுது அச்செல்வத்தினால் அவருடைய உயிரை மீட்க முடியாது. துன்பப்பட்டவர்களின் துயரினைத் துடைத்தும், பிறருக்குத் துன்பம் செய்யாமலும் வாழ்ந்தவர்கள் இறப்பிற்குப் பின்பும் இறவாத புகழோடு வாழ்வார்கள். இவர்கள் வாழும் காலத்தில் உள்ளத் தூய்மையுடன் வாழ்ந்தால் அனைத்து மக்களும் தங்களுடைய உள்ளத் தாமரையில் வைத்து இவர்களைப் போற்றுவார்கள்.

“உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளன்”

எனப் பொய்யாமறையாகிய திருக்குறளும் இதனைக் கூறுகிறது.

ஒருவருடைய தூய்மையான உள்ளமும் செயல் திறமை மிக்க வாழ்க்கையுமே அவர் வாழ்ந்த போதும், வாழ்ந்து முடிந்த போதும் அவருடைய பெருமைக்கும், புகழுக்கும் காரணமாக உள்ளது. மிகுதியான செல்வத்தை தேடாமல் மிகுதியான பெருமையைத் தேடினால் அது என்றும் நிலைத்திருக்கும்.

மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்
மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ?
அலையாமல் அகத்தினை அத்தன்பால் வைத்தோர்
அழியார் என்றே நீ துணிந்து ஆடுபாம்பே

(மறலி- இயமன்) -பாம்பாட்டிச் சித்தர்-

பிறர் நலம் பேணுவோரும். இரக்க மனப்பான்மை கொண்டோரும் எவ்வித பூஜை, புனஸ்காரம், புண்ணிய யாத்திரை மேற்கொள்ளாவிட்டாலும் புகழ் பெறுவார்கள். உலகில் நல்லதும் தீயதும் காணப்படும். நல்லனவற்றையே நாடிச் செல்லல் வேண்டும். கல்வி, கேள்வி, ஞானம், மனஉறுதி படைத்தவர்களையே பின்பற்றல் வேண்டும். எச் செயலையும் நற்சிந்தனையோடு, உறுதியோடு இறைவனை மனதில் நினைத்துக் கொண்டு செய்தல் வேண்டும். வெற்றியையும், புகழையும், பெருமையையும் இறைவன் வழங்குவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல வழிதனை நாடு - எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்தில் கூடு - அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு
-கடுவெளிச் சித்தர்-

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே"

என நெஞ்சுக்கு அறிவுறுத்தும் பாடல்கள் பலவற்றைத் தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் பல இடங்களில் காணலாம். "நான் தீமைகள் செய்வதற்கு அஞ்சாத வஞ்சகன்; நல்வழி காட்டும் துணைவர் யாரும் இல்லாத பாவி; மனமாரப் பொய் சொல்பவன்; அன்பு சிறிதும் இல்லாத கொடியவன்; கஞ்சாப் புகை பிடித்து மயங்கிக் கிடக்கும் வெறியன். இவ்வாறு ஒழுக்கம் அனைத்தும் அழிந்து நானும் கெடுவதற்கு முன்பு அஞ்சாதே என்று அபயகரம் காட்டி என்னை ஆட்கொண்டால் ஆகாதோ" என அழுகணிச் சித்தர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

"அஞ்சாதே கள்ளனடி ஆரும் அற்ற பாவி அடி
நெஞ்சாரப் பொய் சொல்லும் நேயம் இல்லா நிட்டூரன்;
கஞ்சா வெறியனடி கைசேதம் ஆகுமுன்னே
அஞ்சாதே என்று சொல்லி - என் கண்ணம்மா ஆண்டிருந்தால் ஆகாதோ"

(தொடரும்...

## பலம் தரும் பழங்கள்

உடலின் ஆரோக்கியத்தைப் பேணுவதில் பழங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தினசரி பழங்கள் சாப்பிட்டால் நோய்கள் நம்மைத் தாக்காது. மருத்துவரை நாட வேண்டியிருக்காது என்கின்றனர் உணவியல் நிபுணர்கள். பழங்களில் உள்ள உயர்தர ஊட்டச் சத்துக்கள், உயர்ந்த நார்ச்சத்து, தாது உப்புக்கள் நம் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது. தினசரி பழங்கள் உட்கொள்ள வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள்.

உலக அளவில் நடைபெற்ற பல்வேறு ஆய்வுகளின்மூலம் பழங்கள் சாப்பிடுவதன் நன்மைகள் தெரியவந்துள்ளது. பழங்கள், காய்கறிகளை உண்பதன்மூலம் இதயநோய் பாதிப்பு ஏற்படுவதில்லை. உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதில்லை என்றும், உடல் பருமன் கட்டுப்படுத்தப்படுகிறது என்றும் உணவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

காலை உணவில் கண்டதையும் உண்பதைவிட பழங்களைச் சேர்த்துக் கொள்வது நல்லது. வாழைப்பழம் ஊட்டச்சத்து மிக்கது. டின்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் பழச்சாறுகளில் உடலுக்குத் தீங்கு ஏற்படக்கூடிய இரசாயனங்கள்தான் அடங்கியுள்ளன. புதிய பழங்களைக் கொண்டு நாமே தயாரித்து அருந்தும் பழச்சாறுதான் நல்லது. இதில் அடங்கியுள்ள நார்ச்சத்து உடலின் ஜீரண சக்தியை அதிகரிக்க வல்லது. அதிகளவில் நார்ச்சத்து உள்ள உணவுகளை உட்கொள்ளுபவர்களுக்கு இதயநோய், நீரிழிவு, உடற்பருமன் போன்ற நோய்கள் தாக்குவதில்லை என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே பழங்களை நிறையச் சாப்பிடுங்கள். உடல் ஆரோக்கியத்தைப் பேணுங்கள்.

*-இணுவில் ஒலி-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகமருளும் சூரிய வழிபாடு

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

வேதகாலம் தொடக்கமாகவே சூரியன் சூரிய நாராயணனாக வழிபடப்படுகிறார். இயற்கையின் விசித்திரங்களை அறிவார் எவரும் இல்லை. மனிதனால் தெரிந்து கொள்ள முடியாததே இயற்கை. ஆனால் அந்த இயற்கையை ரசிக்கத் தெரிந்தவன் மனிதன். அதன் வெளிப்பாடே சூரியவழிபாடாகும். இது பூவுலகில் பல வழிகளில் கொண்டாடப்படுகிறது. மகரசங்கராந்தி எனப்படும் உத்தராயண புண்ணிய காலம் தைப்பொங்கலாக உழவர் திருநாளாக சூரிய பகவானுக்கு சர்க்கரை அமுது படைத்து வழிபடுவர்.



நவக்கிரக நாயகன் சூரியன். அதனால் அவரை வழிபட நம் வாழ்வில் சுகம்பெறலாம். தமிழகத்தில் கும்பகோணமருகே சூரியனார் கோவில் தனியாகவுள்ளது. பஞ்சபூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றிற்கு தனிக்கோவில்கள் உள்ள போதிலும் சிவபெருமானே யாவுமாயுளர். பஞ்சபூதத் தலங்களில் நிலமாகக் காஞ்சிபுரம் திருவாரூரும் நீராகத் திருச்சி திருவானைக்காவும், அக்கினியாக அண்ணாமலையும், காற்றாகக் காளகஸ்தியும் வானாக சிதம்பரமும் அமைந்துள்ளன. பூமியில் உயிர்களின் வாழ்வுக்கு ஆதாரமாய் விளங்குவது சூரியனது வெப்பமும் அதன் கதிர் வீச்சுமாகும்.

இரவியைப் போற்றும் வகையிலேதான் ரவிகுலாதிபதியான ஸ்ரீ ராமனுக்கு "ஆதித்யஹ்ருதயம்" என்னும் ஸ்தோத்திரத்தை அகத்திய முனிவர் உபதேசித்தருளினார். பாரதத்தில் சிவன் கோவில்களில் சூரியனுக்கும் கோவில் இருப்பதைக் காணலாம். குறிப்பிட்ட சில காலங்களில் பார்வதி சிவன் திருமேனிகளில் சூரிய ஒளி படுவதைக் காணலாம்.

அது ஒரு காடு. அங்கே ஒரு திருடன். களவு - வழிப்பறி - கொள்ளையடித்தல் - கன்னமிடுதல் என்பனவே அவனது நாளாந்த வேலை. தேவைப்பட்டால் கொலை செய்யவும் தயங்கமாட்டான். அவ்வளவு கொடியவன். இரவு உழைப்பு. பகல் உறக்கம். வௌவால் போன்றவன். அந்த வனத்திலே சிறு குடிசை ஒன்றமைத்துத் தவ சிரேஷ்டர் ஒருவரும் தவம் செய்து வந்தார். திருடன் அன்று அவ்வூர் அரசமாளிகையில் கன்னமிட்டுக் கொள்ளையடித்தான். அதைக் கண்ட காவலாளிகள் விரட்டிக்கொண்டு வந்தனர். விரைந்தோடி வந்த திருடன் முனிவரைத் தள்ளிவிட்டுக் குடிசையுள் ஒளிந்து கொண்டான். திகைப்படைந்திருந்த முனிவரிடம் "இங்கு கள்வன் ஒருவன் ஓடி வந்தானே? கண்டீரா? என்றனர். ஆம்! என்று உண்மை சொன்னால் கள்வனுடைய கதை அதோகதி. இல்லை என்று பொய் பேசவும் முடியவில்லை. மிகச் சாதுரியமாக "கண்டதோ கதைக்காது. கதைப்பதோ காணாது" என்றார். இது கேட்ட காவலாளர், "நல்ல பைத்தியமடா; பித்தம் தலைக்கேறிப் போட்டுது. வாடா போவம்" என்று போயினர். இதன் பின்பு குடிசைக்குள்ளேயிருந்து வெளியே வந்த திருடன் "எப்பிடியெப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது கதையாது. கதைப்பது காணாது" என்றான். அதாவது நாம் கண்ணாலே பொருட்களைப் பார்க்கிறோம். ஆனால் அந்தக் கண்கள் பேசுவதில்லை. பேசுவது வாய்; ஆனால் அந்த வாயோ பொருட்களைக் காண்பதில்லை" என்பதே பொருள். ஆனால் கள்ளனின் கண்களும் காதல் கண்களும் பேசும் என்பது தவசிரேஷ் டருக்கு எங்கே தெரியப் போகிறது. திருடன் முனிவரைச் சாட்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்து திருடும் தொழிலை விட்டு இந்துமத ஆய்வில் இறங்கி ராமானுஜராகி இந்து மதத் தில் அறுவகைச் சமயங்களை உருவாக்கி னார். அவை சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன. சிவனை முழுமுதலாகக் கொண்டே அறு வகைச் சமயங்களும் ஒரு சக்கரமாகச் சுற்று கின்றன. சூரிய பகவானைப் பிரதான தெய்வ மாகக் கொண்ட கோவில்கள் இந்தியாவிலே மிகவும் குறைவாகவே உள்ளது. எமது நாடாகிய இலங்கையில் சூரியபகவானுக் கென்று தனிக்கோவில் இல்லை என்றே கூறலாம்.

தமிழகத்தில் கும்பகோணமருகே "சூரிய னார் கோவில்" என்னும் பெயரில் சூரிய பகவானுக்கெனத் தனிக்கோவில் அமைந்துள் ளது. இங்கு முன்னோருக்கான பிதிர்க்கடனாற் றும் நிகழ்வுகளும் இடம்பெறுகிறது. தமிழகத் திலே கும்பகோணம் "கோவில் நகரம் எனப் போற்றப்படுவதாகும்.

தமிழகத்தில் சூரியனார் கோவில் போன்று ஒரிசா மாநிலத்தில் "கொனார்க்" ஆலயம் அமைந்திருக்கிறது. இவ்வாறு வட இந்தியாவில் வேறு மாநிலங்களிலும் சில குறிப்பிட்ட சூரியனார் கோவில்கள் இருக்கின்றன. பழைய கால மகத நாட் டில் வழி வழியாகவந்த சூரிய வழிபாடு மிகவும் பழைமையானதாகும். காயாவில் அமைந்துள்ள சூரியனார் கோவிலும் பழைமையுடையதேயாகும். ஸ்ரீ விஷ்ணு பாத கோவில் அமைந்துள்ள இடத்தின் அருகே கிழக்கு நோக்கியதாக இருக்கிறது ஒரு சூரியனார் கோவில். கிழக்கு நோக்கிய இதன் முன்புறம் அமைந்துள்ள "தட்ஷிணமானஸ்" தீர்த்தத்தில் இறந்துபோன முன்னோர்களுக் குத் தர்ப்பண சிரார்த்தம் செய்வதாகக் கூறப் படுகிறது. காயாவில் தற்போதும் சூரிய பக வானது பழைமையான சிலைகள் ஓவியங்கள் ஆகியவை காணப்படுகின்றனவாம். இங்கு எண்ணற்ற சூரிய விக்கிரகங்கள் உள்ளன. ஞாயிற்றுக்கிழமை (பானுவாரம்) ஜனக்கூட்டம் அலை மோதுமாம். இங்குள்ள சூரிய விக்கிர கத்தின் மார்பில் கவசம் துலங்க இடுப்பில் ஒட்டியாணத்தோடு பாதணிகள் அணிந்து ஒய்யாரமாகக் காட்சி தருகிறார். கிழக்கே சூரிய குண்ட தீர்த்தமுள்ளது. அயன், அரி, அரன் ஆகிய மும்மூர்த்திகளுடன் விநாயகர், முருகன், துர்க்கை, வைரவர், சனீஸ்வரர், சண்டேஸ்வரர் ஆகியோருக்கும் தனிக்கோவில் களுண்டு. இவற்றைவிட அசாம், ஆந்திரா, குஜராத் மாநிலங்களிலும் இரவிக்குத் தனிக் கோவில்களுண்டு.

சூரிய வழிபாடு மிகப் பழைமை யானது. இயற்கை நியதி. இல்லற வாழ்வில் நல்லறம் பேணஉதவுவது சூரிய வழிபாடு. நலம்பெற நாமும் சூரியதேவனை வழிபட்டு நலம் பெறுவோம்.

"ஓம்; சூரிய நாராயணாய நமக"

இந்தச் சிறிய உடலின் உணர்வை அனுபவிப்பது இன்பமானால், இரண்டு உடல்களின் உணர்வை அனுபவிப்பது இன்னும் அதிக இன்பமாகும். உடல்களின் எண்ணிக்கை பெருகப்பெருக இன்பத்தின் அளவும் பெருகுகிறது. இறுதியாக, பிரபஞ்ச உணர்வாக மாறும் போது நமது குறிக்கோளாகிய எல்லையற்ற இன்பம் கிட்டுகிறது.. ----சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



– திரு இரா. செல்வவடிவேல்

## பிறப்பு உண்டாகும் விதம்

மனித உடல், தோல், நரம்பு, எலும்பு, இரத்தம், தசை, தலை, நாக்கு, பிறப்புறுப்பு, கால்கள், கைகள், நகம், ரோமம் போன்றவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அதிசயமிக்க உடல் எவ்வாறு உண்டாகிறது என்று கருடன் பரந்தாமனிடம் பணிந்து கேட்க, அதற்கு அவரும் விளக்கமளிக்கிறார்.

மானிடர்களில் ஆண் - பெண் இரு பிரிவு உண்டு. இவ்விருவரும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு சேர்க்கை புரியும் நிலையில் பெண் வயிற்றில் கரு உற்பத்தியாகி அது படிப்படியாக வளர்ந்து பத்து மாதத்தில் முழுவளர்ச்சி பெற்று குழந்தை பிறக்கின்றது.

ஒவ்வொரு பெண்ணும் மாதவிலக்காவது இயல்பாகும். அவ்வாறு மாதவிலக்கான நான்கு நாட்கள் வரையில் அவள் தனித்திருக்க வேண்டும். அந்த நாட்களில் அவளைக் காண்பவர்கள் பாவத்திற்கு உள்ளாவர்.

பெண்களுக்கான மாதவிலக்கு ஏற்படும் காரணத்தையும் பகவானே ஒரு சம்பவம் மூலம் கூறுகின்றார்.

முன்பொரு சமயம் இந்திரன் தேவலோகத்தில் தன் அரியணையில் அமர்ந்து தேவகன்னியர்களின் நடனத்திலும் கந்தவர்களின் இசைகானத்திலும் தன்னை மறந்திருந்தான்.

அச் சமயம் தேவ குருவான பிரகஸ்பதி - வியாழபகவான் - அங்கு வருகிறார் இந்திரன் அவர் வந்ததையும் கவனிக்காமல் ஆட்டத்திலும் கானத்திலும் மகிழ்ந்திருந்தான்.

அதைக் கண்டு ஆத்திரமுற்ற தேவகுரு சாபமிட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறிவிட்டார் அதன் பிறகு தான் வியாழபகவான் வந்தது பற்றி தேவேந்திரன் அறிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவை மதிக்காததால் இந்திரன் தன் செல்வ வளங்களை இழக்க நேரிட்டது. அதற்கான காரணத்தை அறிந்த தேவேந்திரன் தன் தவறை உணர்ந்து தன் குருவிடம் மன்னிப்புக் கேட்டு தனக்கேற்பட்ட நிலையைப் போக்கிக் கொள்ள முற்பட்டான். ஆனால் தேவகுரு பிரகஸ்பதி இருக்குமிடத்தைக் கண்டறிய முடியவில்லை. அதனால் அவன் பிரம்ம தேவனிடம் சென்று தனக்கு உதவுமாறு வேண்டினான்.

பிரம்மதேவன், குலகுருவை அலட்சியப்படுத்தியது மாபெரும் குற்றமாகும். அதனால்த்தான் அவர் சாபமிட்டுவிட்டு உன்னை விட்டு விலகிச் சென்று விட்டார். இருந்தாலும் தேவர்கள், குரு ஒருவர் இல்லாமல் இருப்பது நல்லதல்ல அதனால் அவர் வருமளவும் தற்காலிகமாக ஓர் ஆசான் வேண்டும். அசுர குலத்தைச் சேர்ந்த துவஷ்டா என்பவனின் மகன் விச்சுவவுருவன் இருக்கிறான். அவன், மூன்று தலையுடையவன். இருப்பினும், இப்போது இருப்பவர்களில் அவன் ஒழுக்க நெறி உள்ளவன், அறிவுள்ளவன், வேத சாஸ்திரங்கள் அறிந்தவன் அவனையே குருவாகக் கொள்வாயாக! என்று யோசனை கூறி அனுப்பினார். அவ்வாறே இந்திரன் விச்சுவவுருவனை குருவாகக் கொண்டான். அவனைக் கொண்டு ஒரு வேள்வியைத் தொடங்கினான். அசுர குலத்தைச் சேர்ந்த விச்சுவவுருவன் வேள்வி புரியும்போது தன் குலம் தழைக்க தம்முள் மந்திரங்களைக் கூறி வந்தான்.

தேவேந்திரனுக்கு அவன் வஞ்சக எண்ணம் தெரிந்துவிட்டது. தேவர்களுக்காகப் புரியும் வேள்வியில் அசுரர் நலம் வேண்டிய அவன்மீது கோபங்கொண்டு தன் வஜ்ஜிராயுதத்தால் அவன் மூன்று தலைகளையும் வெட்டினான். ஆனால் அவன் தலைகளுள் ஒன்று சோமபானம் அருந்தியதால் காடையாகவும் மற்றொரு தலை சுரபானஞ் செய்ததால் ஊர்க்குருவியாகவும் இன்னொரு தலை அன்னபானம் செய்ததால் கிச்சிளப் பறவையாகவும் ஆயுற்று. விச்சுவவுருவன் அரக்கனே என்றாலும் அவன் தேவர்களுக்கு குருவாக இருந்தவன். அதனால் தன் குருவைக் கொன்றதால் இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்தது. அதாவது உயிர்க்கொலை புரிந்த பாவத்திற்கு உள்ளானான். இதனால் தேவேந்திரன் தன் பொலிவையும் ஆற்றலையும் இழக்க நேரிட்டது. அதைக் கண்ட தேவர்கள் ஒன்றுகூடி இந்திரனுக்கு ஏற்பட்ட தோஷத்தைப் போக்குவதற்கு ஒரு வழியைக் கண்டறிந்தனர். அதன்படி தேவர்கள் தண்ணீரையும், மண்ணையும், பெண்களையும் இந்திரனுக்கு ஏற்பட்ட தோஷத்தைப் பங்கிட்டுக் கொள்ளும்படி வேண்டினர்.

அம்மூவரும் "எவ்வாறு பங்கிட்டுக் கொள்வது"? என்று கேட்க, அதற்கு தேவர்களே வழி கூறினர். தண்ணீரில் தோஷம் நுரையாகக் கழியும், மண்ணிலே தோஷம் உவராகக் கழியும், பெண்களிலே தோஷம் பூப்பாகக் கழியும் என்று வழியைக் கூறினார்.

அதைக்கேட்ட மூவரும் இவ்வாறு இந்திரனுக்கு ஏற்பட்ட தோஷத்தை தாங்கள் ஏற்பதால் உண்டாகும் நன்மை என்ன என்று வினவினர்.

அதற்கு தேவர்கள் தண்ணீர் இறைக்க இறைக்க அது சுரக்கும்; மண்ணில் தோண்டப்பட்ட குழி தானே நிறையும்; பெண்கள் கருவு மிளிர்க்கும் வரையில் கணவருடன் கூடிக் களிக்கலாம் என்ற நன்மைகளைக் கூறினர்.

இவ்வாறு இந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் பங்கிட்டு அளிக்கப்பட்டதும் அதன்படி பெண்கள் அந்த தோஷத்தை ஏற்று மாதவிலக்காகின்றனர். அவ்வாறு மாத விலக்காகும் பெண்களை நான்கு நாட்கள் வரை பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் பாவம் வந்தடையும். (பெண்களின் மாதவிலக்கு பற்றிய புராணக் கதைகளுக்கு அப்பால் அவர்களின் தூய்மையும், சுற்றாடல் தூய்மையும் கருதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு இது விடயமாகச் சில கட்டுப்பாடுகள் கூறப்பட்டன என அறிக) ஐந்தாம் நாளில் முழுவதும் தூய்மை பெற்று குடும்பகாரியங்கள் செய்யும் நிலையை அடைவாள்.

அவ்வாறு மாதவிலக்கான ஆறாவது நாள்முதல் பதினெட்டாம் நாள் வரையிலுள்ள இரட்டை நாட்களில் இரவில் அவளோடு சேர்க்கை கொள்ள ஆண்குழந்தை உண்டாகும். அவ்வாறு இரட்டை நாளில் கூடியிருந்து அதனால் குழந்தை பிறந்தால் அது நல்ல குணமுள்ளதாகவும் கடவுள் பக்தி உள்ளதாகவும் இருக்கும்.

தம்பதிகள் இருவரும் தங்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டாக வேண்டும் என்ற ஒருமித்த மனத்துடன் அதிக மோகமுடையவர்களாய் கூடிக்களிக்க வேண்டும். அவ்வாறு சேர்ந்தால் ஆணிடமிருந்து வெளிப்படும் சுக்கிலமும் பெண்ணிடமிருந்து வெளிப்படும் சுரோனிதமும் ஒன்று கலந்து கருவில் சேர்ந்து விருத்தியடையும். ஆண் - பெண் இருவரிடமிருந்தும் வெளிப்படும் சுக்கில சுரோனிதத்தால் ஆணின் சுக்கிலம் அதிகமானால் ஆண்குழந்தையும் பெண்ணின் சுரோனிதம் அதிகமானால் பெண்குழந்தையும் பிறக்கும்.

இரண்டும் சம அளவில் இருந்து கலக்கும் நிலையில் தான் அலியாகப் பிறக்கிறது.

அவ்வாறு தம்பதிகள் கூடிப்புணர்ந்து கரு உண்டாகையில் கருப்பையினுள் ஒரு குமிழி உண்டாகும். அதுவே விருத்தியடைந்து சிறிய தசையாகும் ஒரு மாதத்தில் அந்தத் தசையுடன் பஞ்சபூதத்தின் சேர்க்கை உண்டாகின்றது. இரண்டாம் மாதம் தோலும் மூன்றாவது மாதத்தில் நரம்புகளும் நான்காவது மாதத்தில் ரோமங்களும் உள் வடிவமும் உண்டாகும்.

ஐந்தாவது மாதத்தில் காதுகள், மூக்கு, மார்பு தோன்றும். ஆறாவது மாதத்தில் கழுத்து, சிரசு, பற்கள் உண்டாகும். ஏழாவது மாதத்தில் பிறப்புறுப்பு உண்டாகி முழு உருவை அடையும்.

ஒன்பதாவது மாதத்தில் கழிமுனை என்ற நாபியின் மூலத்திலிருந்து பூர்வஜென்ம கர்மங்களை நினைத்துக் கொண்டிருந்து பத்தாவது மாதத்தில் பிறக்கிறது.

மனித தேகமானது பஞ்சபூதங்களாலானது பஞ்சந்தீரியங்களை அடைந்து பத்து நாடிகளைக் கொண்ட தாய் சவித வாயுக்கள் சேர்ந்துள்ளது. பிராணன், சுபானன், அமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கருகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆகியவை வாயுக்களாகும்.

கருவில் இருக்கும்போதே அந்த உயிருக்குரிய ஆயுள் இவ்வளவுதான் என்றும் இந்த விதத்தில் மரணம் ஏற்படும் என்றும் அதன் அறிவு, கற்கும் வித்தை, கோபம், யோகம், போகம் இவ்வளவுதான் என்றும் இவை எல்லாம் பூர்வஜென்மம் பலன்களை அனுசரித்து பிரம்ம தேவனால் நிச்சயிக்கப் படுகின்றன.

அதனால் ஒருவர் தீர்க்காயுள், உயர்ந்த கல்வி, இன்பசுகம், யோகம் போன்ற நற்பலன்கள் மறுஜென்மத்தில் உண்டாக வேண்டும் என்று நினைத்தால் எடுத்த பிறவியில் நற்காரியங்களைச் செய்ய வேண்டும் என்று வேத சாத்திரங்கள் அறிவுறுத்துகின்றன.

(தொடரும்...

**பேச்சின் சிறப்பு**

கோபமாய்ப் பேசினால் குணத்தை இழப்பாய்!
வேகமாய்ப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்!
வெட்டியாய்ப் பேசினால் வேலையை இழப்பாய்!
அதிகமாய்ப் பேசினால் அமைதியை இழப்பாய்!
ஆணவமாய்ப் பேசினால் அன்பை இழப்பாய்!
சிந்தித்துப் பேசினால் சிறப்போடு வாழ்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் தெய்வமாகலாம்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்" என்பது கவிஞர்கள், அறிஞர்கள், ஆன்மீக வாதிகளின் தீர்ப்பு. மனிதன் கோவிலில் இறைவனை வணங்குகின்றான். அப்போது அவனது உள்ளம் ஆனந்தமடைந்து ஆன்மீக உணர்வுகளால் நிரப்பப்படுகிறது. பின்னர் அவன் கோவிலை விட்டகன்று சற்றுத் தூரம் சென்றவுடன், முன்பிருந்த நல்ல குணங்களும், ஆன்மீக எண்ணங்களும் மெல்ல மெல்ல அவன் மனத்தை விட்டு அகலத் தொடங்கும். இவ்வாறு நேர்வதால் அவன் மீண்டும் பழைய மனிதனாக மாறி விடுகின்றான். உண்மையில் மனிதன் சந்தோசத்தை அனுபவித்து வாழ்வதையே மனதார விரும்புகின்றான். உளச் சந்தோசத்தை அவன் ஆன்மீக உணர்வுகளாலும் பெற்றுக்கொள்ள முற்படுகின்றான். உள்ளிருக்கும் தெய்வீகத்தை நாம் வெளிக் கொண்டுவருவது என்பது முக்கியமான கடமையாகும். அதன்படியே நடந்தால் நாம் நல்ல மனிதர்களாகக் காட்சி தருவோம்; நற்செயல்களையே செய்வோம், மற்றவர்களால் நன்கு மதிக்கப்படுவோம். இவ்வாறு நமது உள்ளம் நல்லபடியாக அமைந்திருக்கும் போது நாம் செய்யும் நற்செயல்களை மற்றையோர் கணக்கிட்டுப் பார்க்கும்போது, அது நம்மை இனம் காட்டி நிற்கும். இவற்றையே அதன் "அடையாளச் சுட்டிகள்" என்பர்.

சுட்டிகளில் பிரதானமானது சந்தோச உணர்வுகள் மிக்க நமது முகத் தோற்றம் ஆகும். வாழ்வின் வெற்றிக்கு மகிழ்ச்சி தேவை. மகிழ்ச்சியின்றி வெற்றியடைய முடியாது. உள ஆரோக்கியம் பேணுவது இங்கு அவசியமாகின்றது. அதற்காக சந்தோசத்தைப் பாதுகாத்தல் வேண்டும். சந்தோசம் தொலைவது எப்படி? ஒருவருக்கு இருக்கக் கூடிய முக்கியமான இரண்டு காரணங்களை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். முதலாவது நாம் இறந்த காலத்தில் நடந்தவற்றை நினைத்து வருந்துதல் அதற்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருப்பர். அதனால் நல்ல பலாபலன்கள் எதுவுமே கிடைக்க சந்தர்ப்பம் இல்லை. துயரம் நிறைந்ததொரு மனிதனையே அதனால் உருவாக்குகின்றோம். இதனால் மன அழுத்தம் உருவாகின்றது. அடுத்து, எதிர் காலத்தைப் பற்றியது. எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை நினைத்து ஏக்கமடைகின்றோம். இவற்றையே எப்பொழுதும் சிந்திக்கின்றோம். உதாரணமாக, நமக்கு அலுவலகப் பதவி எதிர்காலத்தில் கிடைக்குமா? என்பதை எடுத்துக்கொள்ள முடியும். நாம் நமது அன்றாட கடமைகளை மிகவும் சரிவரச் செய்து முடிக்கப்பழகி விட்டோமானால், அதுவே ஓர் திருப்தியாகும். அதன்மூலம் நாம் எதிர்பார்க்கும் பதவியை இலகுவாக அடையமுடியும். மலராத எதிர்காலத்தை நினைத்து வாடுவதால் பயன் ஏதும் இல்லை.. மலர்ந்துள்ள நிகழ்காலத்தில் மகிழ்ச்சியின்றி வாழ்தல் இதனால் ஏற்படும் சிறந்த அறிவினையும், திறமைகளையும் வளர்த்தல் வேண்டுமென்று இங்கே வலியுறுத்தப்படுகிறது.

விழிப்புணர்வு நமக்கு மிகவும் தேவைப்படுகிறது புரிதல், ஈடுபாடு எனவும் இதைக் கூறலாம். ஒரு விடயத்தைப் புரிந்து கொண்டு அதன் வழி நடந்து தன்னை அதில் ஈடுபடுத்துவது என்று இதில் கூறப்படுகிறது. இதன்மூலம் சிறந்த மன ஆரோக்கியத்தைப் பெறலாம். தெய்வத்தை அல்லது, தெய்வீகத்தை நன்கு புரிந்து கொள்ளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகும். அல்லாவிட்டால் அதை அடைய முடியாது. சிலபேர் செய்யவேண்டிய கடமைக்காகவே பணி புரிதலைக் காணலாம். இங்கு புரிந்துணர்வு இல்லாமல் போகிறது. இங்கு ஈடுபாடும் இல்லை. சுத்தமான இடத்தில்த்தான் இறை வன் குடிபுகுவான். மன ஆரோக்கியம் உள் ளோரது மனத்தில் இறைவன் உறைவான்.

அடுத்ததாக, சிறந்த தொடர்புகளை ஏற்படுத்துவதன் அவசியத்தை நோக்குவோம். மனிதன் ஒரு சமூகப் பிராணி, எனவே ஒருவ ரோடு ஒருவர் தொடர்பு வைத்து வாழ்தல் இன்றியமையாதது. குழுவாகச் செயற்படும் தகுதி எம்மிடையே ஏற்படுத்தப்படல் வேண் டும். ஏனையோரின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை செய்தல் பயன்மிக்கதொன்று என்பதை நாமறிவோம். அப்படிச் செய்யும் போது, அங்கே தனிமை இல்லாது போகின் றது. குழுக்களாகக் கூடிக் கோவில்களுக்கு யாத்திரை போதல், சிறந்த தொடர்புகளை உருவாக்கி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்புடன் கொடுத்து வாங்கும் பண்பு விருத்தியடைகிறது. தெய்வீகம் மலர்கிறது. கோவில் அன்னதான மடங்களில் தொடர் பாடல் பண்பு விருத்தியடைந்திருத்தலை நாம் காணலாம். அன்பான உபசரிப்பு இங்கு காணப்படும் சிறந்த பண்பாகும்.

அடுத்து, பிறருக்குப் பயன் மிக்க வராதல் முக்கியம் பெறுகின்றது. இதனால் ஒருவர் வினைத்திறன் மிக்கவராக இனம் காணப்படுவார். இது தனியொருவருக்கு மட்டு மின்றி, சமூகத்திற்கும், நாட்டிற்கும் நன்மை பயக்கும் விடயமாகும். அளவிலும், தரத்திலும் வினைத்திறன் விருத்தியடைய முடியும். எத் தனை? என்பதும், எவ்விதம்? (தரம்) என்பதும் இங்கு கணிக்கப்படுகிறது. பிழையின்றி வேலை செய்தல் இதில் முக்கியமானது. வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் உள்ளத் தைத் தூய்மைப்படுத்தும். எம்மைச் சரிவர நடாத்தும் ஊக்கு சக்தியாக செயற்படும். இதனால் தெய்வீகம் மலரும்.

நம்மை நாம் எவ்வாறு மதிப்பிடு கிறோம் என்பது அடுத்ததாகக் கூறப்படுகிறது. இதை சுயமதிப்பு என்றும், ஆத்ம அபிமானம் என்றும் கூறுவர். "தனது பெறுமானம் பற்றி தன்னிடமுள்ள மதிப்பீடு" என்பது இதனைத் தெளிவுபடுத்தும். "நான் மற்றவர்களுக்குப் பெறுமதியானவன்" என்பதும் அதன் ஒரு விளக்கமாகும். வாழ்வில் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு இது உதவும். சவால் களை வெற்றிகொண்டு நாம் இறைவனை எளிதில் காணவேண்டுவது அவசியம். இத னால் தைரியம் மிக உயரும் நிலையில் காணப்படும். ஒருவரது சுயமதிப்பானது விருத்தி செய்யப்படக்கூடியது. அவ்வாறு விருத்தியடைவதற்கு நாம் செய்யவேண்டி யவை எவை? ஒரு மனிதனது நல்ல இயல்பு பாராட்டப்பட வேண்டியது. அவ்வாறு பாராட் டும்போது, வெளிப்படையாகப் பாராட்டப்பட வேண்டும். பாராட்டுதலானது அவர்களின் பெறுமதி மிக்கவர்களால் பாராட்டப்படுதல் வேண்டும். அவ்வாறே செய்யவும் முடியும் வகுப்பில் மாணவனை ஆசிரியர் பாராட்டுவது பெறுமதியானது. அதிபர் பாராட்டுவது அதைவிடப் பெறுமதியானது. பாராட்டுபவரும் பாராட்டும்போது தாக்கம் செலுத்துகின்றார். இரகசியமாகப் பாராட்டாது மாணவனையோ மாணவியையோ வகுப்பறையில் ஏனைய மாணவர்கள் முன் வைத்துப் பாராட்டுதலே சிறந்தது. அல்லது பாடசாலை காலை வணக்க நேரத்தில் பலர் முன்னிலையில் மாணவரைப் பாராட்டுதல் சிறந்தது. அலுவல கங்களில் செய்த நற்செயல்களுக்காக செய்தவரைப் பாராட்டுதல் வேண்டும். அவ்வாறு செய்யின், அவர்களது சுயமதிப்பு உயரும். எம்மில் பலர் சிறிய பிழையொன்று செய்தமைக்காக மற்றவரைப் பற்றி பந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தியாக தவறாகப் பேசுவர். ஆனால் அவர்களின் சிறந்த குணங்களைக் குறித்து வெளிப்படையாகப் பேசுவதோ, பாராட்டுவதோ எவ்வளவு குறைவடைந்துள்ளது. இன்னுமொருவரின் சிறந்தவை பற்றிப் பிரபலமாகப் பேசிப் பாராட்டும் வழக்கம் இல்லாமல் இருக்கிறது. சிறந்தவர்களின் நேர்மை, முதியோரைக் கவனித்தல், பராமரித்தல் முதலியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

தோல்வியைக் கண்டு துவண்டு போதல் நம்மில் பலரிடையே காணப்படுகிறது. தோல்விகளைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். அத் தோல்விகளை வெற்றியின் படிகளாகக் கொள்வோர் நம்மில் எத்தனை பேர். தோல்வியடையும்போது, நாம் வீழ்ந்து விட்டோம் அல்லது தோற்றுவிட்டோம் என எண்ணுதல் கூடாது. அப்படியானால் எம்மிடமிருக்கும் மனத் தைரியத்தையும் நாம் இழந்து விடுவோம். தோல்வியைப் பயன்படுத்திக் கொள்ளவும் பழக வேண்டும். அவ்வாறெனில், எமது சுய மதிப்பு உயர்வடையும். ஏதாவதொரு பிழை நடக்குமிடத்து நாம் மற்றையவர்கள் மீதே பிழை காண்கின்றோம். அதில் எனது பிழை எவை அல்லது என்ன? என்பதை நாம் எண்ணுவதுமில்லை, பேசுவதுமில்லை. ஏன் இந்தப் பிழை நிகழ்ந்தது என்பதை இங்கு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். என்ன செய்திருந்தால் அப்பிழையை விட்டிருக்க முடியாது போயிருக்கும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

வாழும் சமூகத்தில் நாமும் ஓர் அங்கம் என்பதனை உறுதிபட உணர்ந்து கொள்ளுதல் எமது மன ஆரோக்கியத்திற்கான சிறந்ததோர் வழியாகும். நாம் ஒரு போதும் வானத்திலிருந்து குதித்து வந்த மனிதர் அல்லர். மாறாக நாம் இந்த சமூகத்தில் பல படிநிலைமைகளில் தொடர்புபட்டு வந்தவர்களே. உதாரணமாக, நாம் நமது தொழில் புரியும் நிலையத்தின் ஓர் அங்கமே என்பதை உணர்தல். இது எமது நாடு, இது எமது ஊர், இது எமது நிறுவனம் என்பன போன்ற உணர்வுகள் ஏற்படுதல் அவசியமானது. இது எமது கோவில்; இங்கு வழிபடுதல் எமது உரிமை, என்னும் உணர்வு மேலும் பக்தியை வளர்க்கும். இத்தகைய சமநிலை உணர்வுகள் எம்மைத் தெய்வத்தன்மையுடையவர்களாக மாற்றும் சக்தி மிக்கவை.


சூழலுக்கேற்ப நாம் வாழப்பழகிக் கொள்ளல் வேண்டும். சூழலைக் கண்டு அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு ரசனை செய்யும் அறிவு அல்லது ரசிக்கும் அறிவு இன்றியமையாதது. இதனால் நமது மன இறுக்கம் குறைவடையும். அதனால் ஏற்றுக் கொள்ளும் தன்மை விருத்தியடையும். மாலை நேரக் காட்சிகள், காலை நேரக் காட்சிகள் (சூரியோதயம் முதலியன), கடற்கரைக் காட்சிகள், சோலைகள், பூங்காக்களைச் சுற்றிப் பார்த்தல் முதலியன நமக்குள்ள மன இறுக்கத்தைக் குறைக்கும் சந்தர்ப்பங்களாகும். உள நோய்ச் சிகிச்சை முறைகளாக தற்போது இவை பின்பற்றப்படுகின்றன. மன ஆறுதல் கிடைக்குமென்பதால் நாம் இறை தியானங்களைச் செய்ய முற்படுவோம். மன இறுக்கம் குறைவடையும்போது இறை தியானங்களைச் செய்ய விரும்புகிறோம். சுற்றுப்புறங்களைப் பார்ப்பதற்கு, மனிதர்களுடன் இணங்கி வாழ்வதற்கு நாம் நம்மைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். சூழலுக்கு நாம் அன்பு செலுத்துதல் வேண்டும். மாணவ பாராயத்திலிருந்தே நாம் இவற்றைப் பயன்படுத்தினால் சிறப்பு. அடுத்து நாம் எமக்குள்ள நேரத்தை முகாமை செய்து வாழ்தல் முக்கியம். குடும்ப வாழ்வை வெற்றிகரமாகக் கழித்தல், தொழில் செய்யும் இடத்தில் நேரத்தை வெற்றிகரமாகக் கழித்தல், மற்றும் இவை இரண்டையும் சமநிலையில் வைத்துப் பேணுதல் ஆகிய செயல்களால் நமது உள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியம் பேணப்படுகிறது. தினமும் வேலை நேரம், வீட்டில் கழியும் வீட்டு வேலை நேரம் (குடும்பம் முதலியன), பின்னர் நாம் உறங்குவதற்கு செலவிடும் நேரம் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கப்பட்ட வேறேதும் தேவைகளுக்கான நேரங்களையும் கணக்கிட்டு நேர முகாமையை மாற்றிக் கொள்ளுதல் உள ஆரோக்கியத்தைப் பேணும், சிலரது வாழ்க்கை சந்தோசமாகவே இருப்பதாகக் கூறிக் கொள்வர். ஆனால் இது ஒரு நடிப்பேயாகும். இதன் பின்னணியில் இருப்பது துக்கமும் துயரமும் தான். எப்போதும் மனத்தில் துக்க துயரங்களை மறைத்து வைத்திருக்காது, தனக்கு விசுவாசமானவர்களுடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். விசுவாசமற்றவர்களுக்கு அவற்றைச் சொல்லுதல் கூடாது. அவ்வாறு சொன்னால், அவரைப் பற்றிய தப்பான அபிப்பிராயங்களை விசுவாசமற்றோர் உருவாக்கி விடுவர். உணர்வு ரீதியான விடயங்களை விசுவாசமுள்ளோருடன் பகிர்ந்து கொள்வதால் கிடைக்கும் மன ஆறுதல், நமது உள ஆரோக்கியத்திற்குத் தேவையாகும்.

எனவேதான், மனிதனைத் தெய்வமாகக் காண வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தி, அவற்றுக்கான அடையாளங்களாக மேற்சொன்னவை காணப்படுகின்றன. நமது உள்ளமானது, அதன் பரிசுத்த தன்மையின் உயர்வு காரணமாக மட்டுமே இறைவனை அகப்படுத்திக் கொள்கிறது. அவற்றை உணராதோர் தலைதெறிக்க ஓடினாலும், கோவிலில் இறைவனை தம் மனத்திரையில் காணமுடியாது. மனத்தூய்மையோடு இறைவனைக் கண்டுகொண்டோர் மனிதர்களுள் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர்.



# சந்நிதியான் ஆச்சிரமம் பன்முகப் பணிகள் – 2014

நித்திய அன்னப்பணியே சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூச்சும் முதற்பணியுமாகும். சந்நிதியானின் காலடியே தஞ்சமெனத் தங்கியிருக்கும் 70 முதியவர்களின் மூன்றுவேளை உணவு, இரண்டு நேர தேனீர், வருடத்தின் மூன்று நான்குமுறை உடுபுடவைகள், மழை காலத்திற்கான போர்வைகள் என அவர்களுக்கான பணிகள் நிறைவாகவே நடைபெற்று வருகிறன. இதைவிட சந்நிதியானைத் தினமும் தரிசிக்கவரும் அடியார்கள் - அவர்கள் எத்தனை பேராக இருந்தாலும் சரி - அன்னமளித்து வருவதுடன் பாடசாலைகள் - முன்பள்ளிகள் - தனியார் நிறுவனங்களிலிருந்து அடிக்கடி சந்நிதியானைத் தரிசிக்கவரும் மாணவர்களுக்கு (முன்னறிவித்தலுடன்) மதிய உணவளிக்கும் அன்னப்பணியையும் தொடர்கிறது.

அண்மையில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த பூனாகலை தமிழ் வித்தியாலயம், அப்புத்தளை காளுஎல்ல தோட்டப் பாடசாலை, பண்டாரவளை அலெஸ்பி தமிழ் வித்தியாலயம், மற்றும் ஆதரவற்ற பெண்பிள்ளைகள் தங்கி வாழும் பதுளை மலையகப் பெண்கள் இல்லம் ஆகியவற்றிற்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு போஷாக்கு உணவுப் பொதிகள் ஆச்சிரமம் சார்பாக வழங்கப்பட்டன. பதுளை மலையகப் பெண்கள் இல்லத்தின் ஆதரவற்ற பெண் பிள்ளைகள் ஆற்றிய பஜனை நிகழ்வில் கவரப்பெற்ற ஆச்சிரம சுவாமிகள், அவர்கள் பயன்படுத்தக்கூடியதான பக்கவாத்திய உபகரணங்களை அண்மையில் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. ஆச்சிரம சுவாமிகளின் இந்நிகழ்வுகளை அவதானித்த மலையக பல்வேறு அறநெறிப் பாடசாலைகள், தமிழ் பாடசாலைகள், தமிழ் மன்றங்கள் ஆகியவை தத்தமது பல்வேறு தேவைகளையும் கடிதங்கள் மூலமும் - தொலைநகல் மூலமும் உதவிகோரி வருகிறார்கள். சந்நிதியான் ஆச்சிரமம் தனது சேவைகளையும் - பணிகளையும் மலையகம் நோக்கி எந்தவகையில் விஸ்தரிக்கலாம் என்பது குறித்து ஆச்சிரம சுவாமிகள் தீவிர சிந்தனையில் உள்ளார்.

சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் பதினேழு ஆண்டுகள் கடந்தும் மாதம் தவறாது வெளிவந்து ஆன்மீக அன்பர்களின் அறிவுப்பசி போக்கி வருகிறது. இப்பணியில் எழுதுவதில் ஆர்வமுள்ள பல புதியவர்களின் கட்டுரைகளையும் பிரசுரித்து ஊக்கப்படுத்தி வருகிறது. “ஞானச்சுடர்” 200ஆவது மலர் வெளியீடு ஆவணி மாதத்தில் அறிஞர் பெருமக்கள் மத்தியில் மிகக் கோலாகலமாக வெளியிட்டமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

அன்னப்பணிக்கு இணையாக இலவச மருத்துவ சேவையும் கடந்த 14 ஆண்டுகளாக வாரத்தில் இரு நாட்கள் (புதன் + ஞாயிறு) தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த மருத்துவ பணியினை டாக்டர் சி. சிவயோககுரு அவர்கள் தனி ஒருவராக தனது கடமையினை சிறப்புற ஆற்றி வருகிறார். இந்த அரிய சேவைக்காக டாக்டர் சி. சிவயோககுரு அவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

பிரதி வெள்ளிதோறும் அறுபத்து மூவர் குருபூசைகள், மறைந்த மயில்வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் குருபூசை தினம், முருகேசு சுவாமிகளின் குருபூசை தினம், சேக்கிழார் விழா, வைகாசிப் பெருவிழா, திருவாசக விழா, அருணகிரிநாதர் விழா, பண்ணிசைப் போட்டி, வாசகர்போட்டி எனப் பல்வேறு நிகழ்வுகளும் ஆண்டு முழுவதும் தொடர்வதுடன், வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டு வருகிறது. இவற்றிற்கு மேலாக மாதாந்தம் அரிசி முதலான உணவுப் பொருட்களுடன் அவரவர் குடும்ப தரத்திற்கு ஏற்றபடி பணமும் மாதம் தவறாது வழங்கப்பட்டு வருகிறது. யுத்த சூழ்நிலையின் பின்னர் இந்த உதவி பெறுவோர் தொகை மாதாந்தம் அதிகரித்துச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

31.01.2014 வெள்ளிக்கிழமை யா/ புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கான தண்ணீர்ப் போத்தல்கள் வழங்கப்பட்டது.

02.03.2014 ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் இல்ல கட்டட வேலைக்காக 50 பைக்கற் சீமெந்து வழங்கப்பட்டது.

18.04.2014 வெள்ளிக்கிழமை இமையாணன் கலைமகள் முன்பள்ளியின் 32ஆவது வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு 50 மாணவர்களுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது. (புத்தகப் பை)

28.04.2014 வெள்ளிக்கிழமை யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவி செல்வி சி. மதுஷா என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

09.05.2014 வெள்ளிக்கிழமை நாச்சிமார் கோயிலடி, கல்வளையைச் சேர்ந்த முருகேசு மனோண்மணி என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

25.07.2014 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறை முன்பள்ளி, கொத்தணி விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு 110 மாணவர்களுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

110 தண்ணீர்ப்போத்தல்
110 சாப்பாட்டுப்பெட்டி

19.09.2014 வெள்ளிக்கிழமை திக்கத்தைச் சேர்ந்த முருகேசு ஜெகதீஸ்வரன் என்பவருக்கு சுயதொழில் புரிவதற்காக துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

28.09.2014 ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கும், மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கும் முதியோர் மற்றும் மாற்றாற்றலுடையோர்தின விழாவையொட்டி 50 ஆண் பெண் முதியோர்களுக்கான உடுபுடவைகள் வழங்கப்பட்டது.

மாதாந்தக் கொடுப்பனவாக இறுதி வெள்ளிக்கிழமைகளில் யா/ கெருடாவில் இ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழுள்ள 15 மாணவர்களுக்கான ரூபா 11250. 00 தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக 55 மாணவர்களுக்கு உரிய நிதி வங்கிமூலம் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2014ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 1. கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் முதலியன. | தை | 46 |
| 2. நாம் செய்த நல்வினை, தீவினை | பங்குனி | 10 |
| 3. கிருபானந்த வாரியார் | தை | 68 |
| 4. பாலையூற்று, உவர்மலை, செக்கடி | ஐப்பசி | 37 |
| 5. சத்தியம், அன்பு, நீதி, நேர்மை, அகிம்சை, இரக்கம், கருணை, பொறை, அடக்கம் உள்ளிட்ட தருமங்கள், அறங்கள் விழுமியங்கள் | மாசி | 02 |
| 6. காசிவாசி செந்திநாதையர், அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள், சுப்பிரமணிய சாஸ்திரிகள், சதாசிவ ஐயர், மகாவித்துவான் கணேசய்யர், ஏரம்பையர், வரதபண்டிதர் | மாசி | 28 |
| 7. துன்பம் | மாசி | 36 |
| 8. நூல்களை வாசிப்பதால் | சித்திரை | 28 |
| 9. ஜனகமகாராசன் | பங்குனி | 10 |
| 10. ச. லலீசன் | ஐப்பசி | 11 |
| 11. மனதை எப்போதும் அமைதியாக வைத்திருத்தல் | புரட்டாதி | 38 |
| 12. முத்துமாரி அம்மன் | ஐப்பசி | 13 |
| 13. சொல்லில் நிதானம் | சித்திரை | 15 |
| 14. செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் என்பவை | வைகாசி | 48 |
| 15. பிறர் பொருளை அபகரிக்க விரும்பாதிருக்க வேண்டும் | ஆனி | 28 |
| 16. சிரவணர்கள் | வைகாசி | 61 |
| 17. உள்ளம் நன்றாக இருந்தால் | ஆனி | 18 |
| 18. முருகப்பெருமானை | ஆடி | 12 |
| 19. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு வகைப்படும் | ஆனி | 57 |
| 20. அந்தர்யாகம், பஹிர்யாகம் என இருவகைப்படும் | புரட்டாதி | 54 |
| 21. பால் - பழம் | ஆடி | 09 |
| 22. பூர்வ ஜென்மத்தில் பாவம் புரிந்தவர்கள் | ஆவணி | 93 |
| 23. கந்தபுராணம் | ஆடி | 36 |
| 24. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை, மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி | ஆவணி | 88 |
| 25. இரு பிரிவு. மூல விழுமியங்கள், உலகியல் சார்ந்த விழுமியங்கள் | ஆவணி | 39 |

*சோம்பேறியும் முட்கள் இல்லாத கடிகாரமும் ஒன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1 ஆம் பரிசு** — **திருமதி மைதிலி பார்த்தீபன்**
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**2ஆம் பரிசு** — **செ. பாலசுந்தரம்**
48/13, 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**3ஆம் பரிசு** — **திருமதி இ. யாழினி**
புலோலி தெற்கு,
புலோலி.

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

**1. திருமதி சறோஜினிதேவி சிவஞானசுந்தரம்**
விநாயகர் தோட்டம்,
தும்பளை,
பருத்தித்துறை.

**2. செல்வி தாரணி சண்முகரெத்தினம்**
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**3. பாலகிருஷ்ணன் சாஜினி**
முடக்கந்தோட்டம்,
அல்வாய்.

**4. கார்த்திகா இராஜேஸ்வரன்**
05, சிறாம்பியடிவீதி,
யாழ்ப்பாணம்.

**5. திருமதி ஹாசினி குகராஜா**
சம்பூர் 05,
மூதூர்.

**6. செல்வி க. கமலாம்பிகை**
ஆதவன் ஸ்ருடியோ,
மீசாலை வடக்கு,
மீசாலை.

**7. வே. குமாரசாமி**
சடையாளி,
காரைநகர்.

**8. செல்வி மாலவன் சுபதா**
37/6, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

**9. ந. சந்திரசேகரம்**
செல்லப்பிள்ளையார் கோவிலடி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

**10. செல்வன் த. ஜதுர்ஷன்**
10, வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது (27.02.2015) வழங்கப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# வள்ளிமலை

– வல்வையூர் அப்பாண்ணா –

**வள்ளல் முருகன்:**

"பொன்னன் மனைவி பொன்னி", போல, "வள்ளல் மனைவி வள்ளி" என வாரியார் சுவாமிகள் முருகனைக் குறிப்பிடுவார்கள். இச்சா சக்தியாக விளங்கும் வள்ளிபிராட்டியும், கிரியா சக்தியாக விளங்கும் அன்னை தெய்வயானையும், ஞானசக்தியாக விளங்கும் முருகப்பெருமானும் விரும்பி வீற்றிருக்கும் மலை வள்ளிமலை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும் ஐவகை நிலங்களுள் முதல்வகை நிலம் குறிஞ்சியாகும். அழகிய மலை, மலைசார்ந்த காடு, நீரோடை - நீர்ச்சுனை - அருவி - நதி என அழகிய நிலவளம் கொண்ட இப்பகுதியிலேயே வள்ளிமலை அமைந்துள்ளது.

ஸ்ரீ வள்ளிபிராட்டி பிறந்து, வளர்ந்து, தினைப்புனம் காத்து, கந்தவேளுடன் திருவிளையாடல் புரிந்து, திருக்கரம்பற்றி திருமணம் நிகழ்ந்த வரலாறு கந்தபுராணம் - வள்ளி திருமணத்தில் சொல்லப்படுகிறது. கிடைத்தற்கரிய நோய் தீர்க்கும் மூலிகைகள் படர்ந்து பரவியிருக்கின்ற இடம் வள்ளிமலை. சித்தர்கள், ஞானிகள், துறவிகள் எனப் பலரும் அந்நாளில் மட்டுமல்ல- இந்நாளிலும் வாழும் மலை இது. இவை அனைத்தையும் ஒன்று சேர்த்தே வள்ளிமலையை "ஞானபூமி" என வாரியார் சுவாமிகள் வர்ணித்துள்ளார்.

வள்ளியைக் கைப்பிடித்த வள்ளல் முருகன் விரும்பி வீற்றிருக்கும் திருத்தலமாகிய இந்த வள்ளிமலையை அருணகிரிநாதர், கச்சியப்பசிவாச்சாரியார், வள்ளல் இராமலிங்க அடிகளார், வள்ளிமலை சுவாமிகள், வாரியார் சுவாமிகள் உட்பட இன்னும் பல சான்றோர் பெருமக்கள் வணங்கியும் - வாழ்த்தியும் - பாட்டிசைத்தும் முருகன் அருள் பெற்றார்கள். இந்தப் புனிதர்களின் காலடி பட்டுத் தோய்ந்து மேலும் வளமடைந்தது இந்தக் குறிஞ்சி நிலம். இத்தகைய அதி அற்புதமான முருகன் தலத்தினைத் தரிசிக்கக் கிடைத்தமை வாழ்நாளில் எமக்குக் கிடைத்த பெரும்பேறாகவே கருதுகிறோம்.

**அமைவிடமும் தேரடித் தெருவும்:**

"வில்வநாதீஸ்வரர்" கோயில் கொண்டுள்ள "திருவலம்" எனும் பழம்பதிக்கு வடக்கே 10 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது வள்ளிமலை. காட்பாடி புகைவண்டி சந்திப்பிலிருந்து வடகிழக்காக 19 கி.மீ தூரத்தில் உள்ளது இம்மலை. வேலூர், ஆற்காடு, இராணிப்பேட்டை, சோளிங்கர், திருத்தணி முதலான நகரங்களின் மையத்தில் உள்ள வள்ளிமலை திருக்கோவிலுக்கு எல்லாப் பெருநகரங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. இதைவிட வேலூரிலிருந்து திருவல்லம் ஊடாக அடிக்கடி பேருந்துகள் போய்வருகின்றன.

பிரதான வீதியிலிருந்து இடதுபுறம் பிரியும் நேர்த்தியான தார்சாலையில் பெரிய வளைபு ஒன்று காணப்படுகிறது. அதன் அருகே ஒரு தேர்க்கொட்டகை. அதனை ஒட்டியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேரடி விநாயகர்" எனப்படுகின்ற "வரசித்தி விநாயகர்" சிறிய சந்நிதியில் தெற்குநோக்கி அமர்ந்துள்ளார். சந்நிதிக்கு முன்பாக நான்கு தூண்களுடனான மண்டபம் ஒன்றும் காணப்படுகிறது. வளைவிலிருந்து எதிரே 100 மீற்றர் தூரத்தில் தெரியும் கோபுரவாசல் வரை உள்ள வீதியினை "சந்நிதித் தெரு" என்கிறார்கள். இந்த வீதி தேரடியிலிருந்து ஆரம்பமாவதால் "தேரடித் தெரு" என்றும் பலர் குறிப்பிடுகின்றார்கள். இந்த வீதியின் இரு புறமும் திருமண மண்டபங்கள், தர்மசாலைகள், அறநெறிப் பாடசாலை ஆகியன காணப்படுகின்றன. இராஜகோபுரம் முன்பாக மிகப்பெரிய நிழற்கூடம் உள்ளது. ஆயிரம் பேர்வரை அமரக்கூடிய இந்த நிழற்கூடத்தின் தாழ்வார ஓரங்களின் இரு பக்கமும் வள்ளியுடனான முருகன் திருவிளையாடல்கள் அனைத்தும் வரிசையாக அழகிய வர்ணத்தில் வரையப்பட்டுள்ளது. நிழற்கூடத்தின் இடதுபுறம் சொற்பொழிவுகள் - கலை நிகழ்ச்சிகள் நடத்தக்கூடியதாக பெரிய மேடையும், வலதுபுறம் நிர்வாக அலுவலகமும், அருகே சேமிப்பறையும் காணப்படுகிறது. கோபுர வாசலருகே ஒரு புறம் விநாயகரும் மறுபுறம் முருகனும் உள்ளனர்.

**கீழ்க்கோவில்:**

ஐந்து நிலையுள்ள இராஜகோபுர வாசல் வழியாக உள்ளே நுழைந்தால் மதிற்சுவரோடு கூடிய விசாலமான - திறந்தபடியான முதற் பிரகாரத்திற்கு வருகிறோம். ஈசான மூலையில் கிணறு. அருகே நவக்கிரக கோவில். அக்கினி மூலையில் மடைப்பள்ளியும் களஞ்சிய அறையும். பிரகாரத்தின் மையத்தில் கருவறை. கருவறையில் அழகிய முகங்கள் ஆறும், கடம்பமாலையணிந்த பன்னிரு தோள்களும், தாமரை போன்ற அழகிய திருவடிகளும், கூர்கொண்ட வேலும், சேவற்கொடியும் - மயில்வாகனமும் கொண்டு அருள்பாலிக்கின்ற ஆறுமுகப்பெருமான் கோயில் கொண்டுள்ளார். இந்தக் கருவறையை ஒட்டியபடி இருப்பது ஒடுங்கிய இரண்டாம் பகுதியான நடு மண்டபம். இங்கே வலப்பக்கம் விநாயகரும் இடது பக்கம் தண்டாயுதபாணியும் வீற்றிருக்கின்றனர். இதனோடு இணைந்தபடி இடது புறத்தில் உற்சவ மூர்த்திகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அடுத்துள்ளது "மயில் மண்டபம்" எனப்படுகின்ற மகாமண்டபம். பக்தர்கள் தரிசனம் முடிந்து இளைப்பாறிச் செல்லும் இடமாக உள்ள வெளிமண்டபமானது எட்டுக் கற்தூண்களுடன் காணப்படுகிறது. இந்த மண்டபத் தூண்களும், கருவறைப் பகுதியும் ஆண்டுதோறும் பூசப்படும் சுண்ணாம்புப் படிமங்கள் படைபடையாகப் படிந்துள்ளமையால் அவற்றின் துல்லிய வேலைப்பாடுகள் எதனையும் பார்த்து ரசிக்க முடியவில்லை. கருவறைப் பிரகாரத்தின் பின்புற கதவைத் திறந்துகொண்டு மேலேறிச் சென்றால் "சரவணப்பொய்கை" திருக்குளம் வருகிறது. சரவணப் பொய்கைக்குக் கீழே கோயில் அமைந்துள்ளமையால் இதனைக் "கீழ்க்கோயில்" என்கின்றனர்.

**அருணகிரிநாதர்:**

14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அருணகிரிநாதர். "முத்தைத்தரு பக்தித் திருநகை" என இறைவன் அடியெடுத்துக் கொடுக்க, இறைவன் அருளால் பதினாறாயிரம் பாடல்கள் பாடினார் அவர். எனினும் 1324 பாடல்கள் மட்டுமே இன்று எமக்குக் கிடைத்துள்ளன. சந்தம் மிகுதியாக இசை இன்பத்தைக் கொடுக்கவல்லது அருணகிரியாரின் திருப்புகழ். அவர் அருளிய "கைத்தலம் நிறைகனி அப்பமொ டவல் பொரி" எனும் திருப்புகழ்ப் பாடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்காமல் வாரியார் சுவாமிகள் எந்தச் சொற்பொழிவினையும் ஆரம்பிப்பதில்லை.

அருணகிரிநாதரின் "வள்ளிமலைத் திருப்புகழ்" பதினொரு பாடல்கள் கொண்டது. பதினொரு திருப்புகழுக்கும் வாரியார் வழங்கியுள்ள பொழிப்புரை, தெளிவுரை, விரிவுரை என்பன அற்புதமானவை. வரிக்கு வரி வாரியாரின் விளக்கங்கள் அந்நாளில் வள்ளிமலை மீது நடந்த "காதற் காவியத்தை"க் கண்முன்னே கொண்டு வருகிறது. இதனைத் தெளிவுபட வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒருமுறையாவது வள்ளிமலை சென்று முருகனைத் தரிசிக்க எண்ணல் தோன்றும். "அல்லி விழியாலும் முல்லை நகையாலும்" எனத் தொடங்கும் வள்ளிமலைத் திருப்புகழின் முதற்பாடல் "வள்ளிபடர் சாரல் வள்ளி மலைமேவு வள்ளி மணவாளப் பெருமாளே" என அற்புதமாக முடியும் அழகினைப் பாருங்கள். அழகான சொல்லாடலுடன் நிறைவு பெறும் வள்ளிமலைத் திருப்புகழின் ஈற்றடிகள் சில.

"வள்ளிக்கு ழாம டர்ந்த வள்ளிக்கல் மீது சென்று
வள்ளிக்கு வேடைகொண்ட பெருமாளே"
"வனசரர் மரபினில் வருமொரு மரகத
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே"
"வடிவாட்டி வள்ளி அடிபோற்றி வள்ளி
மலை காத்த நல்ல மணவாளா"
"வரையின்கண் வந்துவண் குறமங்கை பங்கயம்
வரநின்று கும்பிடும் பெருமாளே"

கச்சியப்ப சிவாச்சாரியார்:

பதினாறாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து மறைந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். சைவநெறியாளர். முருக பக்தர். "திகட சக்கர செம்முகமைந்துளான்" என இறைவன் அடியெடுத்துக் கொடுக்க, "கந்தபுராணம்" எனும் அரும் பொக்கிசத்தை இயற்றியவர். உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என ஆறு காண்டங்களை உள்ளடக்கிய 10,345 அரிய பாடல்களைக் கொண்டது கந்தபுராணம். வளம்மிக்க வள்ளிமலையின் வனப்பு, சிறப்பு, தொன்மை, அழகு, பெருமை கூறுவதுடன் வள்ளிநாயகியின் பிறப்பு, வளர்ப்பு, தினைப்புனம் காத்தல், வள்ளி திருமணம் ஆகியவற்றினை நயம்பட எடுத்துக் கூறுவது கந்தபுராணம்.

அயன் படைத்திடும் அண்டத்துக் காவியமாய்ப்
பயன் படைத்த பழம்பதி என்பரால்
நயன் படைத்திடு நற்றொண்டை நாட்டினுள்
வியன் படைத்த விளங்கு மேல்பாடியே.

-கந்தபுராணம்.

கந்தபுராண நூலாசிரியர் வள்ளிமலையைக் குறிப்பிடும்போது தொண்டை நாட்டின் ஒரு பகுதியாகிய மேல்பாடியைக் குறிப்பிட்டு, அடுத்துள்ள பழம்பதி வள்ளிமலை எனக் குறித்துக் காட்டுகின்றார். கச்சியப்ப சிவாச்சாரியாரும் வள்ளிமலை வந்திருந்து வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானைத் தொழுது வணங்கிப் பாடியுள்ளமை இந்தப் பழம்பதிக்குப் பெருமை சேர்க்கிறது.

*பணம் பேச ஆரம்பிக்கும்போது உண்மை ஊமையாகி விடுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வள்ளிமலைச் சாமியார்:**

வள்ளிமலையில் 35 வருடகாலம் தங்கித் தவம்புரிந்து, ஒரு ஆச்சிரமம் அமைத்து, அதற்குத் "திருப்புகழ் ஆச்சிரமம்". எனப் பெயரும் சூட்டி, அருணகிரிநாதரின் திருப்புகழைப் பாடத்தக்க பல சிஷ்யர்களையும் உருவாக்கியவர் சச்சிதானந்த சுவாமிகள். அந்தத் திருப்புகழ் ஆச்சிரமம் இன்று நித்திய அன்னப்பணியாற்றும் அறநிலையமாக மாறியுள்ளது. மலையடிவாரம் ஆறுமுகர் சந்நிதியிலிருந்து சமணர் குகை வழியாக (இது சீரான படிக்கட்டுப் பாதையல்ல. தனிப்பாதை. சமணர் குகை எனப்படுகின்ற ஒரு குகையைக் கடந்து) 1 கி.மீ மலைமீது செல்ல, சிறிய சமவெளியில் தாமரைக்குளம் ஒன்று வருகிறது. தடாகத்தில் அழகிய தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கியுள்ள அழகினை அள்ளிப் பருகியபடி வடக்கு நோக்கிச் சிறிது தூரம் பயணித்தால் ஆச்சிரமத்தை அடையலாம். இதே போன்று, மலைமீதுள்ள ஆலயத்திலிருந்து அரை கி.மீ தூரம் தனி வழியில் கீழிறங்கி வந்தாலும் திருப்புகழ் ஆச்சிரமத்தை அடையலாம். தேவி வள்ளியைத் தன் பிரியமான தெய்வமாகக் கொண்டு ஆச்சிரமத்தில் திருவுருவமைத்து, "பொங்கியம்மன்" எனப் பெயரும் சூட்டி ஆதரித்து வந்தார் சச்சிதானந்த சுவாமிகள். திருப்புகழின் புகழ் பரப்புவது ஒன்றே பணியாகக் கொண்டிருந்த சச்சிதானந்த சுவாமிகளை அவரது சிஷ்யர்கள் "வள்ளிமலைத் திருப்புகழ் சாமியார்" என்றழைக்க அப்பெயரே பிற்காலத்தில் நிலையானதாயிற்று. வள்ளிமலை மீதுள்ள உயரமான சிகரத்திற்கு "பர்வதராஜன் குன்று" என்றும், இன்னொரு சிகரத்திற்கு "யானைக் குன்று" என்றும் பெயர் சூட்டியவரும் இவரே. திருத்தணியில் ஆண்டுதோறும் டிசம்பர் 31, மறுநாள் ஜனவரி 1இல் நடைபெறுகின்ற திருப்படித் திருவிழாவினைத் தொடங்கியவரும் இதே வள்ளிமலைச் சுவாமிகளே. திருத்தணி முருகன் ஸ்தலத்தில் நடைபெறும் திருப்படித் திருவிழா பற்றிய தெளிவான விபரம் "திருத்தணி" கட்டுரையில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. வள்ளிமலைச் சுவாமிகள் 1950இல் உலக வாழ்வைத் துறந்து இறைவனடி சேர்ந்தபோது, சுவாமிகள் முதன் முதலில் தங்கியிருந்த குகைக்குள் ஜீவசமாதி செய்யப்பட்டுள்ளது.

**வள்ளிமலையில் வாரியார் சுவாமிகள்:**

அரசர்கள், பெருஞ் செல்வந்தர்கள், வள்ளல்கள், மட்டுமே கோவிற் திருப்பணிகள் செய்ய இயலும் என்ற கருத்தினை மாற்றி, சாதாரண ஆன்மீக வாதிகளாலும் திருப்பணிக் கைங்கரியங்களை நிறைவேற்ற முடியும் எனும் பாரம்பரியத்தை உருவாக்கியவர் வாரியார் சுவாமிகள். தமது வாழ்நாளில் பல்வேறு இடங்களிலும் கோயிற் திருப்பணிகள், குடமுழுக்கு விழாக்கள், திருக்குளங்கள் - கல்விக்கூடங்கள்- அறக்கட்டளைகள் - குருகுல கல்விச் சாலைகள் எனப் பல்வேறு நற்பணிகளையும் நிறைவேற்றி முடித்த பெருமை வாரியார் சுவாமிகளையே சாரும். வாரியாரின் சொந்த ஊர் வள்ளிமலையிலிருந்து 25 கி.மீ தொலைவில் உள்ள "காங்கேய நல்லூர்" ஆகும். சுவாமிகள் திருமணம் செய்த இடம் இன்னமும் கிட்டியதே. இந்தக் காரணங்களால் அடிக்கடி "வள்ளிமலை" வந்துபோகும் வாய்ப்பைப் பெற்றார் வாரியார். அதனால் வள்ளிமலை முருகன்மீது மாறாத அன்பும் - காதலும் கொண்டிருந்தார் அவர். இதனாலேயே அருணகிரிநாதர் பாடிய "வள்ளிமலைத் திருப்புகழ்" 11 பாடலுக்கும் இவரது விரிவுரையும் - விளக்கவுரையும் தனித்துவமாக அமைந்தன.

பொதுவாகவே வள்ளிமலை முருகன் கோவில் வாரியாரது தனிக்கவனத்திலும் கண்காணிப்பிலும் இருந்த போதிலும், மலைக்கோவில் - வள்ளி கோவில்- கீழே ஆறுமுகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி - மதிற்சுவர் எனப் பணிகள் பலவும் ஒரே வேளையில் மேற்கொள்ளப் பட்டு புதுப்பித்து- வர்ணம்தீட்டி சுவாமிகள் தலைமையில் 20.08.1962இல் குடமுழுக்கு சிறப்பாக நடந்தேறியுள்ளது. இதைவிட 1978இல் சரவணப் பொய்கை திருக்குளத்தினை திருத்தியமைத்தும், தேர் திருத்தப்பட்டுத் திருத்தேர் ஓட்டம் நடைபெற்றமையையும் குறிப்பிடலாம்.

பிரதி வருடமும் பங்குனி மாதம் கடைசி நாளன்று அதிகாலையில் நடைபெறும் பஜனையில் தாமும் கலந்துகொண்டு 6 கி.மீ தூரம் நடந்தே பஜனை செய்து வந்த வாரியார் சுவாமிகளின் "திருப்படி விழா" நிகழ்வினை மறக்க முடியாத நிகழ்ச்சி என ஒரு பெரியவர் பெருமைபடக் கூறியதைக் கேட்க முடிந்தது.

**சரவணப் பொய்கை:**

ஆறுமுகர் கோவிலின் (கீழ்க்கோயில்) பின்புறம் மலைகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்துள்ள இடத்தில் மலையடிவாரத்தில் "சரவணப் பொய்கை" திருக்குளம் அமைந்துள்ளது. இக் குளத்திற்கு இரண்டு வழிகளில் செல்லலாம். கருவறைக்குப் பின்புறம் உள்வீதியின் நடுவேயுள்ள சிறிய கதவினைத் திறந்து கொண்டும் செல்லலாம். அல்லது வாயிற் கோபுரம்-நிழற்கூடப் பகுதியினை வலமாகச் சுற்றிச் சென்றாலும் குளத்தினை அடையலாம். சுருங்கக் கூறின், கீழ்க்கோவிலின் பின்புறம் சற்றே உயரத்தில் "சரவணப்பொய்கை" உள்ளது. வாரியார் சுவாமிகள் தலைமையிலான திருப்பணிக் குழுவினர் 1978ஆம் ஆண்டு இத்திருக்குளத்தைப் புதுப்பித்து அழகுபடுத்திய வேளையில் குளத்தின் மையப் பகுதியில் "நீராழி மண்டபம்" எனும் நான்கு கால் கல் மண்டபத்தை அமைத்துப் புதுப்பொலிவு செய்தார்கள். சதுரவடிவான மிகப்பரந்த அளவுகொண்ட சரவணப்பொய்கையின் படிக்கட்டு வரிசைகள் மிக நேர்த்தியானவை-அழகானவை. இல்லற வாழ்வைத் துறந்து துறவு வாழ்வுக்கு வந்துவிட்ட பல சாதுக்களை சரவணப் பொய்கையின் படிக்கட்டுகளில் அநேக இடங்களில் இன்றும் காணமுடிந்தது..

இத்திருக்குளத்தின் திருப்பணியினையும், மற்றும் பல்வேறு பணிகளையும் தலைமை ஏற்றுச் செய்துமுடித்த தவத்திரு வாரியார் சுவாமிகளுக்கும், அவருக்குத் துணைநின்ற ஏ.எஸ். அருணாசலம்பிள்ளை அவர்களுக்கும் குளக்கரையில் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் திருக்குளத்திலேதான் ஆடிமாத கிருத்திகையின்போது மூன்று நாட்கள் முருகப்பெருமானுக்குத் தெப்பத் திருவிழா - ஊரின் பெருவிழாவாக நடைபெற்றுவருகிறது.

**குளக்கரை வள்ளியம்மை:**

சரவணப் பொய்கையின் மேற்குக் கரையில் பழைய ஒரு கல் மண்டபம் குளத்தில் நீராடிய மகளிர் ஆடை மாற்றும் ஒரு இடமாக இருந்திருக்கிறது. 1962இல் கீழ்க்கோவிலில் இராஜகோபுரம் கட்டிக் குடமுழுக்கு செய்த காலத்தில் இக் குளக்கரை கல் மண்டபத்தையும் புதுப்பித்து, மண்டபத்துடன் இணைந்தபடியுள்ள சிறிய கருவறையில் வள்ளியம்மையை பிரதிஷ்டை செய்து வள்ளிக்கோவிலை நிறுவி ஒழுங்கான பூசை வழிபாடுகள் நடந்து வருகின்றன. 2007ஆம் ஆண்டில் வள்ளிக்கோவில் முன்பாக பெரிய நிழற்கூடம் அமைத்துள்ளார்கள். வள்ளியம்மை கோவிலை அடுத்திருப்பது திருப்படி விநாயகர் கோவிலாகும். நாலுகால் மண்டபத்தின் சந்நிதியில் உள்ள திருப்படி விநாயகரை வணங்கிக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்கோவிலுக்கு பக்தர்கள் படியேறுகின்றனர். மலையேறும் பக்தர்களுக்கு வேலும் - மயிலும் துணை வருவதை உறுதிப்படுத்துவதுபோல, வேலுக்கு ஒரு நாலுகால் மண்டபமும், மயிலுக்கு ஒரு நாலுகால் மண்டபமும் மலைப்பாதையில் தனித்தனியே உள்ளன.

**அருணகிரிநாதர் கோவில்:**

விநாயகர் கோவிலை அடுத்திருப்பது திருப்புகழை அருளிச் செய்த அருணகிரிநாதர் கோவிலாகும். வள்ளிமலை முருகன்மீது அருணகிரிநாதர் மொத்தம் 11 திருப்புகழ் பாடியுள்ளார். சரவணப் பொய்கையின் படிக்கட்டுகளில் அமர்ந்திருக்கும் துறவிகளுக்கு அருணகிரிநாதர் கோவில் வளாகத்தில் தினமும் மூன்றுவேளை உணவு வழங்கப்படுகிறது. இதைவிட மலையேறிச் செல்லும் பக்தர்கள் சிலரும்கூட இங்கு பசியாறிச் செல்வதைக் காண முடிகிறது.

**வள்ளியும் தினைப்புனமும்:**

வள்ளிபிராட்டி கவண்வீசிக் கல்லெறிந்து தினைப்புனம் காத்தாள் என்பது கந்தபுராணம் மூலம் நாம் அறிந்ததே. தினைப்புனம் காத்த பரண்போன்ற பல அமைப்புகள் ஆங்காங்கே வள்ளி மலையினில் காணப்படுகிறது. மலைமீதுள்ள பாறை இடுக்குகளில் குளிர்ந்த சுவைமிக்க நன்னீர்ச் சுனைகள் பல உள்ளன. சூரியனின் ஒளி சற்றேனும் படாத சுவைமிக்க நீர்ச்சுனையின் நீரையே வள்ளி வேலவனுக்குக் கொடுத்ததாக வரலாறு கூறுகிறது. இந்த சுனைகளில் வள்ளி நீராடி மஞ்சள் பூசியமைக்குச் சான்றாக பாறைகளின் சில இடங்களில் "மஞ்சள் நிறமான பூஞ்சணம்" படிந்துள்ளன. விபூதி சிந்திச் சிதறியமைக்கு அடையாளமாக "வெள்ளை நிறப் பூஞ்சணமும் சில இடங்களில் காணப்படுகின்றன. இவையெல்லாம் ஐதீகங்களாக உள்ளனவே தவிர நிகழ்வுகளை நிருபுவிக்கும் ஆதாரங்களாக இல்லை. முருகன் வள்ளியிடம் நிகழ்த்திய திருவிளையாடல்களில் அண்ணன் விநாயகனை அழைத்ததுவும் ஒன்று. விநாயகர் யானை வடிவில் வந்தமைக்குச் சான்றாக "யானைக் குன்று" ஒன்றினை அடையாளம் காட்டுகிறார்கள். இந்த யானைக் குன்றினில் மேலும் பல ஐதீகச் சான்றுகள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால், நாம் அந்த இடங்களைச் சென்று பார்க்க சந்தர்ப்பம் கிட்டவில்லை.

**மலைக்கோவில் - கருவறை:**

குகைக் கோயிலின் முகப்பு வாசலில் உள்ள கருவறைப் பகுதி மூன்று பகுதிகளாகத் தெற்கு நோக்கியபடி உள்ளது. முதற்பகுதியில் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமான் வீற்றிருக்கிறார். இரண்டாம் பகுதி இளைப்பாறும் மண்டபம். அங்கிருந்து சில படிகள் மேலேறி கருவறைக்கு வந்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியைத் தரிசிக்கிறோம். அழகிய அலங்காரத்துடன் கருவறையில் அமர்ந்துள்ள தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி அனைவருக்கும் அருள் பாலிக்கிறார். மனம் லயித்து கரம்கூப்பி கந்தக் கடவுளை வணங்குகிறோம். முருகனுக்கு நிவேதிக்கப்படும் தேனும் தினைமாவும் வருகைதரும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதமாகத் தருகிறார்கள்.

மலைக்கோவில் பகல் 7.30 - 12.30 வரையும் மாலையில் 2.00 - 6.30 வரையும் திறந்திருக்கும் என்பதை அறிவிப்புப் பலகை அறியத்தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியேற்றமும் விழாக்களும்:

வள்ளிமலை முருகனுக்கு மாசிமகத்தில் பிரம்மோற்சவம் ஆரம்பமாகிறது. மலைமேல் உள்ள முருகனுக்கு கொடியேற்றத்துடன் பெருவிழாத் தொடங்கும் அதே வேளையில் கீழ்க்கோவிலிலும் கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகிறது. பொதுவாக எல்லாக் கோவில்களிலும் இரதோற்சவம் ஒருநாள் மட்டுமே நிகழும் உற்சவமாகும். ஆனால் வள்ளிமலை முருகனுக்கு இரதோற்சவம் நான்கு நாட்களுக்கு நிகழ்கிறது. இரதம் 6 கி.மீ தூரமுடைய கிரிவலப் பாதையைச் சுற்றி வருகிறது. 7ஆம் நாள் உற்சவத்தன்று மாலையில் புறப்படும் திருத்தேர் 10ஆம் நாள் மாலையில் இருப்புக்கு வந்து சேர்ந்ததும் பக்தர்கள் அனைவரும் சரவணப் பொய்கையில் தீர்த்தமாடுகிறார்கள். இந்த ரதம் பல்லாண்டு காலமாக மலைச்சுற்றின் கருங்கற் பாதைகளில் வலம் வந்ததால் அதன் செயற்திறன் குறைந்து வந்தது. இதனை அவதானித்த வாரியார் சுவாமிகளின் பெருமுயற்சியினால் புதிய தேர் நிர்மாணிக்கப்பட்டு இரதோற்சவம் நடைபெற்று வருகின்றது.

வைகாசி விசாகம், கிருத்திகை விழாக்கள், சதுர்த்தி, கந்தசஷ்டி, சித்திரைப் பௌர்ணமி, விஜயதசமி, தீபத் திருவிழா, தமிழ்ப் புத்தாண்டுப் படிவிழா போன்றவை வள்ளிமலை முருகன் திருத்தலத்தின் பிரதான விழாக்களாகும்.

வாசக அன்பர்களே! தமிழகக் கோவில்களைத் தரிசிக்கச் செல்லும் நீங்கள் ஒரு முறை வள்ளிமலை சென்று வள்ளல் முருகனைத் தரிசிக்கத் தவறாதீர்கள். அவன் உங்களுக்கு எல்லா வளங்களையும் வாரித்தருவான்... நம்புங்கள்....

## தமிழர் புத்தாண்டு தைத்திரு நாளே

தமிழர் புத்தாண்டு தைத்திரு நாளே
தந்திடும் சகலசெல்வம் வாழ்வினில் தானே
தமிழர் குலதெய்வம் முருக னாமே
தருவான் வாழ்வுக்கு வளமும் நலமுமே
தமிழர் திருமொழியாம் தமிழ்மொழி தானே
தரணியில் சிறந்ததோர் செம்மொழி யாமே
தமிழர் பொங்கிமகிழும் பெருநாள் தையே
தனிப்பெரும் சிறப்புடனே பெருமையும் உடையதே.

தமிழர் பண்பாடு தனித்துவம் ஆனது
தரணியே போற்றுகின்ற சிறப்புப் பெற்றது
தமிழர் நாகரிகம் மேன்மை உடையது
தவறா ஒழுக்கத்தை வாழ்வினில் கண்டது
தமிழர் பழமைகளோ புதுமை நிறைந்தது
தந்திடும் விஞ்ஞான விளக்கம் கலந்தது
தமிழர் வாழ்வியலும் அன்புடன் அறமே
தாங்கியே உலகோரை வியக்க வைத்தது.

*-வ. யோகானந்தசிவம்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2015 தை மலர்

# மாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**06.02.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "பக்திப்பாடல்"

வழங்குபவர் :- திரு கு. கிருபாகரராஜா அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

**13.02.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "பெருஞ்சித்தர் காட்டிய பிராணஜாமம்"

வழங்குபவர் :- திரு K.C. தங்கராஜா அவர்கள்

[இளை. ஆசிரியர்]

---

**20.02.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**27.02.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்] **206ஆவது**

மதிப்பீட்டுரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

[முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணம்] **மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org